தர்மசக்கரம்



சித்தார்த்தி ஷு மார்கழி மீ   சக்கரம் 28 ஆரம் 12

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115   திருச்சி ஜில்லா.

அந்தர்யோக விவரங்கள்

சேலம் ஜில்லா — ராசிபுரத்தில் 23—12—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: தெய்வீக வாழ்க்கைச் சங்கம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா — பெரியகுளத்துக்கருகிலுள்ள பண்ணைபுரத்தில் 23—12—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பொம்மைய சுவாமி கோவில்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

மதுரை—பங்கஜம் காலனியில் 23—12—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண பிரார்த்தனாலயம் (தினமணி பேப்பர்-பஸ் ஸ்டாப்)
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

திருநெல்வேலி ஜில்லா — சேரன்மஹாதேவியில் 30—12—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பாரத்வாஜ ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-50ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

இராமநாதபுரம் ஜில்லா — விருதுநகரில் 30—12—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பெரியகாளி அம்மன் கோவில்
நேரம்: காலை 9-30 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆற்காடு ஜில்லா — வேலூரில் 30—12—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: திருவேங்கடவன் மேல்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

மதுரை ஜில்லா — திருவேடகத்தில் 6—1—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: விவேகானந்த கல்லூரி
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

இராமநாதபுரம் ஜில்லா — ராஜபாளையத்தில் 6—1—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: K. S. R. கல்யாண மண்டபம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: மதியஉணவுக்கு ரூ. 1-50 செலுத்தி சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

கோவை ஜில்லா — பல்லடத்தில் 13—1—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: காந்திரோடு ஹைஸ்கூல் எதிரிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

முத்தமிழ்ப்பண்ணை 17.12.79

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 28	சித்தார்த்தி ஸு மார்கழி மீ	ஆரம் 12

பொருளடக்கம் பக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா : ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரப் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தாச் செலுத்திப் புதுப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். தங்கள் டிபாஸிட் செய்யும் தொகையைப் பேங்கில் இருப்பாக வைத்து அதினின்று கிடைக்கும் வட்டி சந்தாவுக்காக எடுத்துக்கொள்ளப் படுகிறது. இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா : ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா : மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பன்னிரண்டு செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் எட்டு அனுப்பலாம். பாக்கி ரூபாய் நான்கையும் பாண்டிச்சேரி S. விசுவநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி' யினின்று ஈடுசெய்து கொள்கிறோம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் அரசாங்கத்தால் 1496 பொது நூலகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அவை அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-25. வெளிநாடு வருட சந்தா ரூ. 25-00

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணி

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணிக்குத் தொகை சுமார் ஆறு இலட்சம் ரூபாய் தேவை என மதிப்பிடப்பட்டிருக்கிறது. கோயில் மண்டபம் கட்டுவதற்கு இடைஞ்சலாயிருந்த சாலை 20 அடி தென்புறம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு அரசாங்கமும் உத்திரவு கொடுத்திருக்கிறது. வரும் தை மாதம் விசாக நட்சத்திரத்தன்று குரு பூஜை நடைபெறும். அதன் பிறகு பழைய கோயில் இடிக்கப்பட்டு புதிய கோயிலாகத் திருந்தி அமையும்.

1979 நவம்பர் மாத நன்கொடை விபரம் வருமாறு:

தேதி	விலாசம்		ரூபாய்
	அக்டோபர் மாதம் முடிய நன்கொடை வசூல்		4 15 168
1-11-79	M/s. A. R. விஸ்வநாதன் & பிரதர்ஸ்	சின்னகடைத் தெரு, திருச்சி	1 001
	M/s. M. K. கந்தசாமி முதலியார் & சன்ஸ்	கணக்கர் தெரு, சேலம்	101
	ஸ்ரீ O. M. கோபால்	கணேசா ரைஸ்மில், பள்ளத்தூர்	101
	ஊமத்தூர கவுடர் தென்னடியம்மாள் உயில்	தர்மநிதி, சிக்காரம்பாளையம்	100
2-11-79	ஸ்ரீ M. S. S. V. மகேந்திரன்	சுவாமி சன்னதி, மதுரை	201
	,, K. ஸ்ரீராமுலு செட்டி	ராதாநகர் மெயின்ரோடு, குரோம்பெட்	201
3-11-79	ஸ்ரீ S. B. பாலகுருநாதன்	சொக்கப்பநாயக்கர் தெரு, மதுரை	101
	,, AR. அண்ணாமலை செட்டியார்	தில்லைநகர் தெற்கு, திருச்சி	1 001
	,, P. சிதம்பரம் & ஸ்ரீமதி உமாசிதம்பரம்	அண்ணாமலையார் தெரு ,,	501
4-11-79	ஸ்ரீ B. R. ஒகி	தேங்காய் வியாபாரம், வளையல்கார தெரு ,,	1 001
6-11-79	,, K. S. மாணிக்க முதலியார்	நாட்டார் மங்கலம், தெ. ஆ. மாவட்டம்	250
	ஸ்ரீ G. ஏழுமலைக்கோனர்	பீமநகர், திருச்சி	251
	,, P. சோமசுந்தரம்	இரட்டைமால் தெரு ,,	501
	,, M. கிருஷ்ணசாமி	நியூ டைமன் கம்பெனி, ஜாபர்சா தெரு ,,	250
	M/s. தி மாரியப்பா ஸ்டோர் ஜவுளி வியாபாரம்	பெரியகடைவீதி ,,	1 001
	M/s. M.K. தைலாமுதலியார் & சன்ஸ்	ஜவுளி வியாபாரம் ,,	1 001
	M/s. வஸந்த பவன்	24 N.S.B. ரோடு ,,	1 001
	ஸ்ரீ ராஜமீனுக்ஷி டெக்ஸ்டைல்ஸ்	தங்கசாலைத் தெரு, அருப்புக்கோட்டை	251
	M/s. V.A.S. திருவண்ணாமலை ஜவுளி ஸ்டோர்ஸ்	,,	301
	M/s. T. அண்ணாமலை	ஜவுளி வியாபாரம் புளியம்பட்டி ,,	301
	ஸ்ரீ D. வாளவந்தான்	சந்திரா காபி ஒர்க்ஸ் ,,	201
7-11-79	ஸ்ரீ K. லக்ஷ்மணநாடார் & ஸ்ரீ K.L. ஜெகதீசன்	சித்திரகாரதெரு, மதுரை	101
	,, C. ஹரிராம் ஜோதி	அரசர்கல்லூரி, புதுக்கோட்டை	201
8-11-79	ஸ்ரீ S. உமாராணி சண்முகம்	மெப்கோ இஞ்ஜினியர்ஸ், எழும்பூர்	108
	,, V.A. அண்ணாமலை	ஏழுகடல் அக்ரஹாரம் தெரு, மதுரை	101
	,, K. ஸ்ரீனிவாசன்	சிங்கர் கோயில் தெரு, ஸ்ரீரங்கம்	101
	,, K.S. கோபிநாதன்	ரங்காநாதபுரம் ,,	101
	,, K. வாசுதேவன்	காந்தி ரோடு ,,	1 000
9-11-79	Dr. L. ராஜாராம் ரெட்டி	விழுப்புரம்	101
	ஸ்ரீ D. தெய்வநாயக ரெட்டி	ராம்பாக்கம், தெ. ஆ. மாவட்டம்	101

9–11–79	ஸ்ரீ S. சுப்ரமணியன்	எட்டரை, திருச்சி	*101*
	Dr. C. கருணாநிதி, ஜப்பானிய பல் வைத்தியசாலை, பெரியகடை வீதி	,,	*1 001*
10–11–79	ஸ்ரீ உ. அரு. சா. நாகப்ப செட்டியார்	கோனபட்டு	*101*
	ஸ்ரீ A. காசி தாயுமான சுவாமி	அமரநாதன் பாதை, சங்ககிரி	*101*
12–11–79	ஸ்ரீ M.R.G. பத்மநாப செட்டியார்	ஜவுளி வியாபாரம், விருத்தாசலம்	*101*
	ஸ்ரீ S. R. V. தாத்தம்	திருமாளிகை, தெற்கு சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்	*1 000*
	ஸ்ரீ காமதேனு V. பழனியப்ப செட்டியார்	பெருந்துறை ரோடு, ஈரோடு	*105*
	M/s. கந்தன் சுதேசி ஸ்டோர்ஸ்	ஈஸ்வரன் கோயில் தெரு ,,	*251*
	ஸ்ரீ V. R. சுவாமியப்பன்	மண்டி, கிருஷ்ணசெட்டி வீதி ,,	*1 000*
	ஸ்ரீ S. கோவிந்தசாமி முதலியார் & ஸ்ரீமதி தனலெக்ஷ்மி அம்மாள்	,,	*101*
	ஸ்ரீ V. அர்த்தனரி முதலியார்	சேரிட்டி டிரஸ்ட், நேதாஜி ரோடு ,,	*250*
	M/s. அங்கு விலாஸ் கைத்தறி	ஜவுளி வியாபாரம், அக்ரஹார வீதி ,,	*251*
	ஸ்ரீ V. A. வீரப்ப முதலியார்	காசுக்கடை ,, ,,	*101*
	ஸ்ரீ K. பெரியசாமி	பொன்வீதி ,,	*101*
	ஸ்ரீ R. S. வெங்கடாசலம்	பெரியண்ண கவுண்டர் தெரு ,,	*250*
	M/s. கணேஷ் இண்டஸ்டிரீஸ்	சத்தியமங்கலம் ரோடு ,,	*251*
	M/s. சக்தி டிரேடிங் கம்பெனி	கோவலன் தெரு ,,	*2 001*
	ஓர் அன்பர்	ஈரோடு	*501*
	M/s. முருகன் மில்க் டெய்ரி	பொய்யேரிக்கரை வீதி ,,	*501*
	ஸ்ரீ P. கிருஷ்ணன்	கிழக்கு ஒக்கிலியர் தெரு ,,	*201*
13–11–79	ஸ்ரீ C. கிருஷ்ணமூர்த்தி	,,	*301*
	ஸ்ரீ K. இலக்ஷ்மணன்	ராஜவீதி, பள்ளிபாளையம் ,,	*1 001*
	M/s. உஷா டெக்ஸ்டைல்ஸ்	,, ,,	*251*
	ஸ்ரீ S. K. ராமசாமி கவுண்டர் & சன்ஸ்	நேதாஜி ரோடு ,,	*1 001*
	ஸ்ரீ D. L. M. கிரெய்ன் மண்டி	ஜின்னு தெரு ,,	*251*
	ஸ்ரீ A. C. கனகதேவன்	ஈஸ்வரன்கோயில் வீதி, ஈரோடு	*501*
	M/s. ராம் பிரிண்டிங் மில்ஸ்	,, ,,	*251*
	M/s. சந்திரா பிரிண்டிங் மில்ஸ்	வெங்கடாசலம் செட்டி வீதி ,,	*251*
	ஸ்ரீ T. A. சொக்கலிங்கமுதலியார்	ஈஸ்வரன்கோயில் தெரு ,,	*251*
	M/s. அம்பாள் சைசிங் மில்	நாச்சியப்பாவீதி ,,	*501*
	M/s. அன்னபூர்ணு யார்ண் டிப்போ	ராமசாமி வீதி ,,	*501*
	ஸ்ரீ V. S. ராஜகோபால்	ப்ரப் ரோடு ,,	*201*
	ஸ்ரீமதி சரஸ்வதி அம்மாள்	கல்லுப்பட்டி வீடு, காவேரி வீதி, பவானி	*300*
	M/s. ராமராஜ பவன்	கொமாரபாளையம்	*1 001*
	ஸ்ரீ R. கிருஷ்ணசாமி ரெட்டியார், ஸ்ரீ சிதம்பரவிலாஸ் ஏஜன்ஸீஸ்,	திருச்சி	*2 000*
	,, N. ராஜேந்திரன் சந்திரபவன்,	பேருந்துநிலையம் ,,	*501*
	M/s. ஸ்ரீ ஆண்டாள் காட்டேஜ் இண்டஸ்டிரீஸ்	கொமாரபாளையம்	*1 000*
	M/s. கந்தசாமி ஸ்பின்னிங் மில்ஸ்	சூரியம்பாளையம், பவானி	*1 000*
	ஸ்ரீ R. N. நாகமாணிக்கம்	பவானி புகையிலை கம்பெனி ,,	*501*
	M/s. ராஜரத்தினம் செட்டியார் & கோ	காவேரி வீதி, கொமாரபாளையம்	*251*
	M/s. அன்னை ஆயில் ஸ்டோர்ஸ்	முதலியார் வீதி ,,	*251*

13-11-79	Dr. A.K. சிவசுப்ரமணியம்	பவானி	501
	ஸ்ரீ M. சுப்பிரமணிய கெவுடு சன்ஸ்	திண்டுக்கல் ரோடு, கரூர்	101
	ஸ்ரீ N. ராஜு காண்டிராக்டர்	கருங்கல்பாளையம், ஈரோடு	501
	M/s. விவேகானந்தா டெக்ஸ்டைல்ஸ்	அக்ரஹாரம், பள்ளிபாளையம்	250
	ஸ்ரீ G. கன்னைய நாயுடு	பாஸ்கர் டெக்ஸ்டைல்ஸ் ,,	1 000
	,, S. பழனியப்ப கவுண்டர்	சீராம்பாளையம், ஈரோடு	110
	M/s. புஷ்பா டெக்ஸ்டைல்ஸ்	பள்ளிபாளையம்	251
	ஸ்ரீ S. ராமசாமி	ராமசாமி காட்டேஜ் இண்டஸ்டிரீஸ் ,,	250
	,, C.A. கதிர்வேல்	H.P.C. டீலர், ஈரோடு	501
	M/s. அன்பு & கோ	மஞ்சள் மண்டி, பார்க்ரோடு ,,	250
	M/s. P.A. & Co.	மஞ்சள் மண்டி, ப்ரப்ரோடு ,,	250
	ஸ்ரீ S. ராமசாமிமுதலியார்,பெட்ரோலியம் டீலர்,சத்தியமங்கலம்ரோடு ,,		1 000
16-11-79	ஸ்ரீ T. தேனப்பன்	புலியூர், கரூர்	251
	ஸ்ரீ T. R. வேணுகோபால்	R. K. V. நகர், ஈரோடு	101
17-11-79	,, R S. ராமசாமி கவுண்டர், A.N. பாளையம் ரெட்டியாரூர், பொள்ளாச்சி		101
21-11-79	,, S. முத்தப்பன்	திருவான்மியூர், சென்னை	101
	,, K. தர்மலிங்கம்	பள்ளத்தாத்தனூர், சந்திரபிள்ளை வலசு, சேலம்	101
	,, V. பாட்டப்பன்	ரங்கைய கவுடர் தெரு, கோவை	101
22-11-79	,, V. சோலை	கொள்ளிடம் டோல்கேட், திருச்சி	101
23-11-79	,, R. அய்யாவு பாரதி பிரிண்டிங் மில்ஸ்,	T.V.S. செட்டி தெரு, ஈரோடு	501
	,, A. சுப்பிரமணியம்	மகாலிங்கபுரம், பொள்ளாச்சி	101
	,, ஜம்னுதாஸ் காளிதாஸ் சேட்	ஈசுவரன் கோவில் தெரு, ஈரோடு	101
25-11-79	M/s. K.K. முத்தையாநாடார் & சன்ஸ், பாத்திர வியாபாரம், ராமநாதபுரம்		201
26-11-79	ஸ்ரீ T. V. ராமலிங்கம்	பந்தடி இரண்டாவது வீதி, மதுரை	101
	ஸ்ரீமதி தங்கம்மாள் R. S. P. கந்தசாமி செட்டியார்	இளம்பிள்ளை	101
	ஸ்ரீ A. சுப்பராயலு ரெட்டி	ராம்பாக்கம், தெ. ஆ. மாவட்டம்	101
27-11-79	,, S. கோவிந்தராஜன் குடும்பம்	சேத்தியாதோப் ,,	101
	,, M. S. மாணிக்கவாசகம் பிள்ளை	வீரபாண்டி, மதுரை	100
	ஸ்ரீமதி கௌரம்மா	ஜெயநகர், பெங்களூர்	101
28-11-79	ஸ்ரீ A. S. ராமலிங்கம்	S. R. M. மெடிக்கல் ஷாப், பெரம்பலூர்	1 001
	M/s. பாரத் டிரான்ஸ் போர்ட்	,,	501
	ஸ்ரீ T. முனிசாமி	அவலூர்பேட்டை	251
	,, S. N. கிருஷ்ணு ரெட்டியார்	கீக்களூர், வ. ஆ. மாவட்டம்	251
	,, R. லட்சுமி நாராயண ரெட்டியார்	கருங்காலி குப்பம் ,,	251
	,, S. A. சொக்கலிங்கம்	ஸ்ரீ லட்சுமி தியேட்டர், அரியலூர்	500
30-11-79	,, G. துரைராஜ் பிள்ளை & கோ	காந்தி மார்க்கெட், திருச்சி	101
	ஸ்ரீ G. A. ராஜசேகரன் வில்லி சரோஜா	கோவில்பட்டி	101
	மோட்டார் யூனியன்	,,	100
	ஸ்ரீமதி கோமதி	சக்தி சண்முகம் லாரி சர்வீஸ், குருவிகுளம்	100
	ஸ்ரீ M. P. K. மூர்த்தி	பிள்ளையார் நத்தம்	100
	,, S. முத்து சங்கர நாடார்	சுப்பராஜ் நகர், போடி நாயக்கனூர்	100

30-11-79	ஸ்ரீ A. லோகநாதன் அனுசுயா	தண்டபாணி வீதி, சென்னை	100
	,, K. K. பாண்டியன்	தேனி	100
	,, N. தனகோடி	திருவானைக்கோவில், திருச்சி	100
	ஸ்ரீமதி காமாட்சி அம்மாள்	வாணப்பட்டரை தெரு ,,	100
	ஸ்ரீ K. S. N. S. சவுண்டய்யா செட்டியார்	அருப்புக்கோட்டை	100
	,, V. லஜபதி	ரஞ்சிதம் மெடிக்கல் ஸ்டோர்ஸ் ,,	100
	,, V. கந்தசாமி	சக்தி பிரஸ் ,,	100
	,, ராமகிருஷ்ண சத்சங்கம்	அன்னூர்	100
	,, G.K. தேவராஜலு நாயுடு & K. ராஜகோபால்,	P.N. பாளையம் கோவை	300
	,, மணி	இலக்ஷ்மி மில்ஸ் ,, ,,	300
	M/s நவமணி & கம்பெனி	அவினசி ரோடு ,,	100
	M/s. டிடான் பெயிண்ட்ஸ் & கெமிக்கல்ஸ்	,,	100
	M/s. இண்டஸ்டிரியல் கேஸ் & ஜெனரல் சப்ளையர்ஸ்	பீளமேடு ,,	100
	M/s. ராஜலக்ஷ்மி இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ்	அவிநாசி ரோடு ,,	100
	ஸ்ரீ பாலகுரு	அட்வகேட், தில்லைநகர், திருச்சி	100
	,, T. N. ராமசாமி	,, ,,	100
	ஸ்ரீமதி R. கல்யாணி	அண்ணாநகர், சென்னை	100
	,, R. சரஸ்வதி	,, ,,	100
	,, P. உமாமஹேஸ்வரி	நெற்றிமேடு, சேலம்	100
	குமாரி அமிலா	பீமநகர், திருச்சி	225
	ராமகிருஷ்ணர் பாலர் பள்ளி, துவாக்குடி & களிக்கூடம்,	கூத்தப்பார்	100
	ஸ்ரீ R. S. தியாகராஜன் & R. S. முருகப்பா	பள்ளிபாளையம்	100
	ஸ்ரீ K. R. S. ஈஸ்வரன்	ராஜவீதி ,,	100
	M/s. சுகுணா டெக்ஸ்டைல்ஸ்	திருச்செங்கோடு ,,	100
	ஸ்ரீ S. அர்த்தனரிசாமி	தங்கவேல் டெக்ஸ்டைல்ஸ், பள்ளிபாளையம்	100
	M/s. P.M. சித்தப்ப செட்டியார் & சன்ஸ்	ஜவுளி வியாபாரம் ,,	100
	ஸ்ரீ A.K. பழனியப்பன்	அய்யம்பாளையம், கரூர்	100
	,, C.P.M. பழனிசாமி	,, ,,	100
	M/s. சிவாம்பிகா டிரேடர்ஸ்	கிருஷ்ணசெட்டி வீதி, ஈரோடு	100
	ஸ்ரீ M. கெட்டிமுத்து	கலைமகள் ரோடு ,,	100
	,, O.A.K. நாச்சிமுத்து	ஜவுளி வியாபாரம் ,,	100
	M/s. O.A. ஆறுமுகமுதலியார் & கோ	,, ,,	100
	M/s. உமா மெடிக்கல்ஸ்	,,	100
	ஸ்ரீ S. சுந்தரராஜன்	காந்திபுரம் கிழக்கு, கொமாரபாளையம்	100
	ஸ்ரீ P. தேவண்ணன்	சேலம் ரோடு ,,	100
	,, P.S. அர்த்தநாரிசாமி செட்டியார்	திருவள்ளுவர் தெரு ,,	100
	M/s. ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் & கம்பெனி	ராஜவீதி ,,	100
	M/s. K. பழனியப்பன் & கம்பெனி	ஜவுளி வியாபாரம் ,,	100
	M/s. சிவகுமார் இண்டஸ்டிரீஸ்	ஜமக்காள வியாபாரம் ,,	100
	ஸ்ரீ A.R. கந்தசாமி	இளவமலை, பவானி	100
	,, T. பெருமாள்	ஜெனரல் மர்ச்செண்ட், மெயின் பஜார் ரோடு ,,	100

30–11–79	ஸ்ரீ N. மாரிமுத்து	சீராம்பாளையம், ஈரோடு	*100*
	,, கொமரப்ப கவுண்டர்	,, ,,	*100*
	M/s. பிரிமியர் கமர்சியல் கார்பரேஷன்	முத்துரங்கமுதலியார் தெரு ,,	*100*
	ஸ்ரீ மு. வெங்கட்ராம செட்டியார்	மளிகை, நேதாஜி ரோடு ,,	*100*
	M/s. ஈகிள் பிராண்டு	சத்தியமங்கலம் ரோடு ,,	*100*
	M/s. ஓம் பராசக்தி & கோ பேங்கர்ஸ்	கிருஷ்ண செட்டி வீதி ,,	*100*
	ஸ்ரீ முருகன் & கோ பேங்கர்ஸ்	,, ,,	*100*
	M/s. சிவாம்பிகா வார்பிங் & சைசிங் மில்	,,	*100*
	,, சிவாம்பிகா டிரான்ஸ்போர்ட்	பரமத்திரோடு, நாமக்கல்	*100*
	ஸ்ரீ M. கந்தசாமி	கிழக்கு ஒக்கிலியர் தெரு, ஈரோடு	*100*
	,, K. செங்கோட்டையன்	அட்வகேட் ,,	*100*
	ஸ்ரீ P.C. பழனிச்சாமி	அட்வகேட், ஈரோடு	*100*
	M/s. சிவசண்முக டெக்ஸ்டைல்ஸ்	பள்ளிபாளையம்	*100*
	ஸ்ரீ V. பழனிசாமி	,,	*100*
	M/s. நிர்மலா டெக்ஸ்டைல்ஸ்	,,	*100*
	M/s. நீலகிரி டெக்ஸ்டைல்ஸ்	,,	*100*
	ஸ்ரீமதி T. M. A. பழனியம்மாள்	ராஜவீதி ,,	*100*
	ஸ்ரீ N.V. தியாகராஜன்	பவானி மெயின்ரோடு, ஈரோடு	*100*
	ஸ்ரீமதி R. வெங்கட்டம்மாள்	மெயின்ரோடு, பவானி	*100*
	M/s. K P.K. நாச்சியப்பமுதலியார்	ஜமக்காள வியாபாரம் ,,	*100*
	ஸ்ரீ B. N. விவேகானந்தன்	ஜோதிபவர் பிரஸ் ,,	*100*
	ஓர் அன்பர்	கொமாரபாளையம்	*100*
	ஸ்ரீ சுவாமி விவேகானந்த சபை	தாராபுரம்	*100*
	,, N. சண்முகவேலாயுதம் செட்டியார்	ஜவுளி வியாபாரம், பூவாளூர்	*100*
	,, P. நடேசன்	பிள்ளையார் கோவில் தெரு, வரகனேரி ,,	*100*
	ஸ்ரீமதி A. செல்லப்பாப்பம்பாள்	கூத்தப்பார் ,,	*100*
	இந்து சமய மன்றம்	தவுல்தாபாத், கிருஷ்ணகிரி	*100*
	ஸ்ரீ S. போலா ரெட்டியார்	ஆலப்புழை, கேரளா	*100*
	குடியாத்தம் அன்பர்கள்	வ. ஆ. மாவட்டம்	*102*
	ஸ்ரீ வெங்கடேஸ்வரா டெக்ஸ்டைல்ஸ்	திருவண்ணமலை	*100*
	M/s. அண்ணமலை இஞ்ஜினியரிங் கார்ப்பரேஷன்	,,	*100*
	ஸ்ரீ R. கேசவ ரெட்டியார்	கீக்களூர் ,,	*100*
	,, S. ஜெகநாத ரெட்டியார்	கருங்காலிகுப்பம் ,,	*100*
	,, M. பழனிசாமி பிள்ளை	வீரபாண்டி, தேனி	*100*
	செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களும் மற்றவர்களும்	துறையூர்	*100*
	ஸ்ரீமதி T. C. S. மீனம்பாள்	தண்டலை, முசிறி	*100*
	ரூ. *100*க்குக் கீழ் வந்த நன்கொடைகள்		*4 574*
		ஆகக் கூடுதல் ரூ.	*4 70 527*

தர்ம சக்கரம்

சக்கரம் 28 காளயுக்தி ௵ தை—சித்தார்த்தி ௵ மார்கழி

1979

प्रज्ञानं ब्रह्म

எழுமின் விழிமின் செந்நெறி சார்மின்

ஆசிரியர்
சுவாமி நித்தியானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 **திருச்சி ஜில்லா**

பொருளடக்கம்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 28 ‖ சித்தார்த்தி ஹு மார்கழி மீ ‖ ஆரம் 12

பிரார்த்தனை

परात्मानमेकं जगद्बीजमाद्यं निरीहं निराकारमोङ्कारवेद्यम् ।
यतो जायते पाल्यते येन विश्वं तमीशं भजे लीयते यत्र विश्वम् ॥

— शंकराचार्य

பராத்மானமேகம் ஜகத்பீஜமாத்யம்
நிரீஹம் நிராகாரமோங்காரவேத்யம் ।
யதோ ஜாயதே பால்யதே யேன விச்வம்
தமீசம் பஜே லீயதே யத்ர விச்வம் ॥

— *சங்கராச்சாரியர்*

ஏகனுயுள்ள பரமாத்மனே, ஜகத்துக்கு ஆதி வித்தாயிருப்பவனே, செயலுக்கு அப்பாற்பட்டவனே, வடிவங்களை, கடந்தவனே, ஓம்காரனே, விசுவத்தைத் தோற்றுவிப்பவனே, தாங்குபவனே, துடைப்பவனைப் போற்றுகிறேன்.

காட்ட அருள் இருக்கக் காணுதிருள் மலத்து
நாட்ட மெனக்குவரல் நன்ரே பராபரமே.

— *தாயுமானவர்*

அருள் விருந்து

மனிதனுக்கு ஆகாதது ஏதுமில்லை.

ஆரோக்யமும், ஆற்றலும் தெய்வ சம்பத்துக்களாம்.

பரத்தைச் சார்ந்திருப்பதற்கு நிகரான பேறு இல்லை.

பிரார்த்தனைக்கு ஏற்றவாறு மனிதன் மேலோன் ஆகிறான்.

ஆத்மபோதத்தில் விழித்திருப்பவர்களைக் காமம் அணுகாது.

உலக இன்பத்தை நாடி ஓடுவது தன் நிழலை நாடி ஓடுவதற்கு நிகர்.

அடக்கம் பயிலாத மனதுக்கு எவ்வளவு கொடுத்தாலும் போதாது.

ஏதேனும் ஒரு சமயத்தை அனுஷ்டிக்காத மனிதன் உலகில் இல்லை.

பண்புக்குரிய மேலாம் எண்ணத்தில் ஊறப்பெறாதவன் பரம ஏழையாம்.

பொருளற்ற புன்மையை இறைவா, என்உள்ளத்தினின்று அப்புறப்படுத்துவாயாக.

தக்கதைச் செய்வதும் தகாததனிடத்திருந்து விலகியிருப்பதும் தக்கார் பாங்காம்.

நிலைத்துள்ளது யாது என்பதை அறிகிற சான்றோன் தன்னையே கட்டி ஆளுகிறான்.

பொருளற்ற சட்டதிட்டங்கள் மக்களை மேலும் மேலும் கீழ்மையில் ஆழ்த்துகின்றன.

மற்றவர்களைவிடத் தான் மேலோன் என்று எண்ணிக்கொள்பவன் நாளடைவில் கீழோன் ஆகிறான்.

எப்பொழுது பேசவேண்டும், எப்பொழுது போசாதிருக்க வேண்டும் என்பதை நல்லறிஞன் அறிந்துகொள்ளுகிறான்.

நல்ல கருத்துக்களைப் பொதுவுடமையாக்க நல்லார் பேசுகின்றனர். தம் பேச்சுத் திறனைக் காட்ட மற்றவர் பேசுகின்றனர்.

நல்லது எது, கேடு எது, என்பதை யாரும் எடுத்து இயம்பவேண்டியதில்லை. அவை தம்மைத்தாமே விளக்கிக்கொண்டிருக்கின்றன.

தான் பரம்பொருள் என்பதை இயற்கைத் தாய் அறிஞனுக்கு விளக்குகிறாள்; ஆனால் அறிவிலியினிடமிருந்து அவள் அதை மறைத்து வைக்கிறாள்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் பக்தர்களோடு தொடர்ந்து சம்பாஷித்துக்கொண்டிருக்கிறார்.

பங்கிம்சந்திர சட்டர்ஜி: "ஐயனே, தாங்கள் ஏன் மதப்பிரச்சாரம் செய்வதில்லை?"

பரமஹம்சதேவர் (புன்னகை பூத்தவராக): "மதப்பிரச்சாரமா? ஒரு மனிதனிடத்துள்ள தற்பெருமை மனப்பான்மையே மதப்பிரச்சாரம் பண்ணும்படி அவனைத் தூண்டுகிறது. உண்மையில் மனிதனுடைய தரம்தான் என்ன? அவன் ஓர் அல்ப ஜீவ ஜந்து அல்லவா? மதப்பிரச்சாரத்தைச் செய்யவல்லவர் கடவுள் ஒருவரேயாம். உண்மையில் அவர் சர்வகாலமும் மதப்பிரச்சாரம் செய்துகொண்டே இருக்கிறார். சூரியனையும், சந்திரனையும் சிருஷ்டி பண்ணியவர் கடவுள். அந்தக் கிரஹங்களின் வாயிலாக அண்டத்துக்கு வெளிச்சம் தருபவர் கடவுள். ஜீவகோடிகளின் வாழ்க்கை முறைகளின் வாயிலாகச் சிருஷ்டியின் பாங்கை அவர் சதா விளக்கிக்கொண்டேயிருக்கிறார். மதப்பிரச்சார அலுவல் அவ்வளவு அல்பமானதா? கடவுளின் சொரூபத்தை மனிதன் முதலில் அனுபூதியின் வாயிலாக உள்ளபடி அறிந்துகொள்ள வேண்டும். அதைத் தொடர்ந்து போதனை பண்ணுவதற்கான ஆதேசம் இறைவனிடமிருந்து வர வேண்டும். அப்பொழுதுதான் மதப்பிரச்சாரம் பயன்படும். மற்றொரு விஷயம். மதப்பிரச்சாரம் பண்ணும் வேலையை மனிதன் தானாக எடுத்துக்கொள்ளுகிறான். அதற்கு யாரும் தடை சொல்லுவதில்லை. வேண்டியவாறு அந்த மேலாம் அலுவலை அவன் செய்துகொண்டே இருக்கலாம். அத்தகைய மனிதன் இறைவனிடமிருந்து ஆதேசத்தை அடையப்பெற்றவன் அல்லன். ஆதேசம் இறைவனிடமிருந்து வரவேண்டும் என்னும் அக்கறையும் அவனுக்கு இல்லை. அப்படியிருந்தும் சமயப்பிரச்சாரம் என்னும் செயலில் தொண்டை கட்டும் வரையில் அவன் கூக்குரலிட்டுக்கொண்டே இருக்கிறான். அத்தகையவனுடைய பேச்சுக்கு மக்களும் செவிசாய்க்கின்றனர். இந்தப்பாங்கில் மதப்பிரச்சாரம் கொஞ்சகாலத்துக்கு நடைபெறுகிறது. அதைக் கேட்டுக்கொண்டிருந்த மக்களும், கேட்டதைப்பற்றி அதிவிரைவில் மறந்து போகின்றனர். உலகில் பரபரப்பை உண்டுபண்ணுகின்ற அலுவல்கள் பல இருக்கின்றன. பலதரப்பட்ட இந்த அலுவல்களுக்கிடையில் மதப்பிரச்சாரம் ஒன்று ஆகிறது. மனிதன் ஒருவனுடைய பிரசங்கங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காலமெல்லாம், 'ஆ! எவ்வளவு அற்புதமாக அவர் பேசுகின்றார்' என்று பாராட்டுவார்கள். அன்னவனுடைய பிரசங்கங்கள் முடிவுறுகின்றபொழுது அவைகளைப்பற்றிய ஆமோதிப்புப் பேச்சும் முடிவுபெறுகிறது. அதன் பிறகு அதைப்பற்றி நினைப்பதற்குக்கூட ஆள் இல்லை.

"அடுப்பில் பாத்திரத்தில் போட்டு வைத்துள்ள பால் தீ எரிந்துகொண்டிருக்கும் பரியந்தம் கொதித்துக்கொண்டிருக்கிறது. தீயை அப்புறப்படுத்தியவுடனே தழ தழ வென்று கொதித்துக்கொண்டிருந்த பாலும் அதன் தழதழப்பை நிறுத்திவிடுகிறது. முன்பிருந்தபடி அது அமைதியுற்று இருக்கிறது.

'மானுடனொருவன் தன்னுடைய ஆத்மசாதனத்தைப் பலப்படுத்த வேண்டும். சாதனத்தில் உறுதிபெற்றிருக்கும் ஒருவனே நன்கு போதிக்க வல்லவனாகின்றான். சாதனங்கள் புரியாதிருக்கிற மனிதனுடைய பேச்சோ வெறும் பேச்சாகப் போகிறது. படுத்து உறங்குவதற்கு மானுடன் ஒருவனுக்குப் போதிய அளவு இடமில்லை. அத்தகையவன் மற்றொரு மனிதனையும் உறங்குவதற்குத் தன் வீட்டுக்கு அழைக்கிறான். அத்தகைய அழைப்புப் பொருளற்றது. அந்தச் செயலுக்கு நிகரானது வெறும் வாய்ப்பேச்சுக்காரன் கடவுளைப்பற்றிப் பிரச்சாரம் பண்ணுவது."

"கமார்ப்புகூர் கிராமத்தில் ஹலதார்ப்புகூர் என்னும் குளம் ஒன்று இருக்கிறது. அக்குளக்கரையில் அதிகாலையில் மக்களுள் சிலர் சென்று மல ஜலம் கழித்து அதை அசுசி படுத்துவதுண்டு. தகாத அச்செயலைக் கவனித்த கிராமவாசிகள் அங்ஙனம் அசுசி பண்ணியவர்களை

வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டினர்கள். அப்படித் திட்டியதால் அழுக்குப்படுத்தும் செயல் நின்றுவிடவில்லை. கடைசியாகக் கிராமவாசிகள் அதைக் குறித்து அரசாங்கத்திற்கு விண்ணப்பம் போட்டார்கள். உத்தியோகஸ்தன் ஒருவன் வந்து அந்த இடத்தைப் பார்வையிட்டான். பிறகு எச்சரிக்கை அறிவிப்பு ஒன்று ஆங்கு அமைக்கப்பெற்றது. 'இங்கே மலஜலம் கழியாதே. அத்துமீறி அழுக்குப்படுத்தினல் தண்டனைக்குள்ளாவாய்'— இதுவே ஆங்குப் பொறிக்கப் பட்டிருந்த எச்சரிக்கையாகும். அதன் பிறகு அந்த இடத்தை அழுக்குப்படுத்தும் செயல் அறவே நின்று போயிற்று. அதன் விளைவாக அத்தகைய தொந்தரவும் ஆங்கு இல்லாது மறைந்து போயிற்று. அது அரசாங்க உத்தரவு. அதற்கு அடிபணிந்து நடக்க ஒவ்வொருவனும் கடமைப்பட்டிருக்கிறன்.

"இறைவனிடமிருந்து மதப் பிரச்சாரத்தை ஒட்டிய ஆதேசம் வருவது இதற்கொப்பானது. கடவுளின் சுவானுபூதி ஆத்ம சாதகன் ஒருவனுடைய உள்ளத்தில் உருவெடுக்கவேண்டும். அதைத் தொடர்ந்து இறைவனிடமிருந்து அனுக்கிரஹம் வரவேண்டும். அப்படி அனுக்கிரஹம் வாய்க்கப் பெற்றவர்கள் வேண்டியவாறு மதப்பிரச்சாரம் செய்யலாம். அதைக் கேட்டுப் பலபேர் நலன் பெறுவர். வெறும் வாய்ப்பேச்சுக்காரனுடைய போதனையோ பயனற்றதாய்ப் போய்விடும்."

இங்ஙனம் பரமஹம்சதேவர் இயம்பிக்கொண்டிருந்த மேலாம் கருத்துக்களையெல்லாம் ஆங்குக் குழுமியிருந்த அன்பர்கள் கூர்ந்து கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

பரமஹம்சதேவர்: (பங்கிம் சந்திர சட்டர்ஜியைப் பார்த்து) "தாம் ஒரு பண்டிதர் என நான் அறிய வருகிறேன். நூல்கள் பலவற்றைத் தாம் இயற்றியிருக்கிறீராம். அது மிக நன்று. மனிதனுக்குரிய கடமைகள் என்ன? தயை கூர்ந்து அதைப்பற்றிச் சிறிது எனக்கு எடுத்துச் சொல்வீராக. மரணத்துக்குப் பிறகு மனிதனைத் தொடர்ந்து வருவது யாது? மறுமையைப் பற்றிய நம்பிக்கை உமக்கிருக்கிறதல்லவா?"

பங்கிம் சந்திர சட்டர்ஜி: "மறுமையா? அது என்ன?"

பரமஹம்சதேவர்: "வாஸ்தவம். பரஞானம் அடையப் பெற்றுள்ள மானுடன் ஒருவன் உடலை உகுத்தான பிறகு வேறு எவ்வுலகுக்கும் ஏகுவதில்லை. அவன் மறுபிறப்பெடுப்பதில்லை. ஆனல் பரஞானம் அடையப்பெறுதிருக்கும் பரியந்தம், அதாவது ஈசுவரானுபூதியை அடையப்பெறுதிருக்கும் பரியந்தம் அவன் இவ்வுலகுக்கு மறுபிறப்பின் வாயிலாக வந்தாக வேண்டும். அதைத் தவிர்க்க அவனல் இயலாது. அத்தகையவனுக்கு மறுமை என்பது ஒன்று உண்டு. பரஞானம் அடையப்பெற்று மானுடன் ஒருவன் முக்தியடைகிறன். அத்தகையவன் பிறப்பின் வாயிலாக மீண்டும் இம் மண்ணுலகுக்கு வருவதில்லை. நெல் தானியம் அவிக்கப்படுமானல் அது மீண்டும் முளைப்பதில்லை. அதே பாங்கில் ஞானக்னியில் மானுடனெருவனுடைய பாங்கு மாறியமையுமானல் சிருஷ்டி என்னும் விளையாட்டில் அவன் மேலும் பங்கு கொள்வதில்லை. முக்த புருஷனெருவன் இவ்வுலகுக்குரிய வாழ்வு வாழ்வதில்லை. காமத்தையும், காசு ஆசையையும் அவன் வென்றவனுகிறன். எனவே இவ்வையக வாழ்வில் அவனுக்குப் பற்று ஏதும் இல்லை. அடுப்பில் ஏற்றி வெந்துபோன நெல்லை மீண்டும் விதைப்பதால் வருகிற விளைவுதான் யாது?"

பங்கிம் (புன்னகை பூத்தவராக): "ஐயனே, மரம் ஒன்றுபயன்படுவது போன்று வெறும் களையாகமுளைத்திருப்பது பயன்படமாட்டாது."

பரமஹம்சதேவர்: "ஞானி ஒருவனைத் தாம் களையோடு ஒப்பிடலாகாது. ஈசுவரானுபூதி அடையப்பெற்றிருக்கின்ற ஒருவன் மரணமிலாப் பெருவாழ்வு என்னும் கனியை அடையப்பெற்றவனுகின்றுன். வெறும் பூசணிக்காயோடு அல்லது வெள்ளரிப்பழத்தோடு அவனை ஒப்பிடலாகாது. பிறவிப்பிணியினின்று அன்னவன் விடுபட்டவனுகின்றுன். அத்தகைய பெருமகன் பார் உலகிலோ, சூரிய மண்டலத்திலோ, சந்திர மண்டலத்திலோ பிறப்பெடுப்பதில்லை.

"உபமானமாகச் சொல்லுவதில் ஓரளவு உண்மைதான் அமைந்திருக்கிறது. தாம் ஒரு பண்டிதர். நியாய சாஸ்திரம் கற்றிருக்கிறீர் அல்லவா? பயங்கரமான புலி போன்றவன் அம்மனிதன் என்று இயம்புவதாக வைத்துக்

கொள்ளுவோம். அப்படிச் சொல்லுவதால் அம் மனிதனுக்கு அம்மிருகத்திற்குரிய வால் இருக் கிறதென்றே அல்லது ஒரு புலியின் வட்டமுகம் இருக்கிற தென்றே நாம் பொருள்படுத்தலா காது. (எல்லாரும் நகைக்கின்றனர்)

"இதே விஷயத்தைக் கேசவசந்திரசேனரிடம் நான் எடுத்து இயம்பினேன். 'ஐயனே மறுமை என்று ஒன்று உள்ளதா?' என்று அவர் கேட் டார். உண்டு என்றே இல்லை என்றே நான் விடை விடுக்கவில்லை. நான் இயம்பியதாவது: மட்பாண்டங்களைக் குயவன் சூரிய வெளிச்சத் தில் காயப்போடுகிறான். அவைகளில் சில சுட்ட வைகள் போன்றும் வேறு சில சுடாதவைகள் போன்றும் இருக்கின்றன. ஆடுமாடுகள் நடந்து அவைகளை மிதித்து நாசப்படுத்துகின்றன. அப்படி உடைந்துபட்டுப் போனவைகளுள் சூளையில் சுடப்பட்டவைகள் வெறும் ஓடுகள் ஆகின்றன. அவைகள் களையப்படுகின்றன. சுடப்பெறாத மட்பாண்டங்களே மீண்டும் வனை வதற்கு வைக்கப்படுகின்றன. நனைத்துக் களிமண்ணைப் பக்குவப்படுத்தி அவைகள் சக்கரத்தின்மீது ஏற்றப்படுகின்றன. அத்த கைய களிமண்ணினின்று புதிய பாண்டங்கள் வனையப் பெறுகின்றன. ஆகவே சுட்டு எடுக் கப்படாத பாண்டங்களைக் குயவர்கள் அப்புறப் படுத்துவதில்லை. கேசவரிடம் இங்ஙனம் நான் இயம்பினேன்: 'தாம் சூளையில் ஏற்றிச் சுடப் பெறுதிருக்கும் பரியந்தம் குயவனார் தம்மைவிட மாட்டார். பரஞானம் அடையப் பெறுதிருக் கிற காலமெல்லாம் படைப்பவன் என்னும் குயவனார் பவச்சக்கரத்தின் மீது தம்மை ஏற்றி வைத்துச் சுழற்றுவான். தப்பித்தோடத் தம்மை அவன் விடமாட்டான். திரும்பத் திரும்பத் தாம் இவ்வுலகுக்கு வந்தேயாக வேண்டும்.

"ஈசுவரன் தாமே ஞானியர்களுள் சிலரை இந்த மாயப் பிரபஞ்சத்தினுள் வைத்திருக் கிறார். மக்களுக்குப் பாரமார்த்திகப் பெரு வாழ்வைப் புகட்டி அருள்வது அந்த ஞானியர் களுடைய பாங்கு ஆகிறது. மாயையில் இரண்டு கூறுகள் இருக்கின்றன. ஒன்று வித்யாமாயை. மற்றது அவித்யாமாயை. உலகுக்கு ஆச்சாரியர்களாகத் திகழும் ஞானியர் கள் வித்யாமாயையைப் படைத்தவர்களாக இருக்கிறார்கள். இறைவனுடைய ஸத் கைங் கர்யங்கள் நன்கு நிறைவேறுதல் பொருட்டே இவர்கள் உலகில் இடம் பெற்றிருக்கின்றனர். சுகதேவர், சங்கராச்சாரியர் ஆகிய பெருமக்கள் இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகிறார்கள்.

(பங்கிம் சந்திர சட்டர்ஜியைப் பார்த்துப் புன்னகை பூத்தவராக)

"நல்லது மானுடன் ஒருவனுடைய கடமைகள் யாவை என்பதைப்பற்றி உமது கருத்து யாதோ?"

பங்கிம் (புன்னகை பூத்தவராக): "அவர் களுடைய கடமைகளைப் பற்றித் தயங்கிக் கொண்டுதான் நான் தங்களுக்கு விடை தர வேண்டியிருக்கிறது. அருந்துதல், உறங்குதல், பொருந்துதல் இச்செயல்களையே பெரும் பான்மையோர் செய்து வருகின்றனர்."

பரமஹம்சதேவர் (சற்று ஆர்வத்துடன்): "ஆஹா? தாம் மட்டமான பாங்குடையவராய் இருக்கின்றீர். அல்லும் பகலும் தாம் எச் செயலில் ஈடுபட்டிருக்கின்றீரோ அதுவே தம் மிடத்துச் சொல்லாகப் பரிணமிக்கிறது. மானுடனொருவன் எதை அருந்துகிறானே அதை ஏப்பம் விடுகிறான். முள்ளங்கியைச் சாப்பிடு கிறவன் முள்ளங்கியை ஏப்பம் விடுகிறான். கால மெல்லாம் தாம் 'காமத்திலும், காசு ஆசையிலும்' ஈடுபட்டு இருக்கின்றீர். ஆதலால் தம் நாவி னின்று வரும்சொற்களெல்லாம் அப்புல்லியவை களைப் பற்றியவையேயாம். உலக விஷயங் களைப்பற்றியே ஒரு மனிதன் சதா எண்ணிக் கொண்டிருப்பானாகில் அவன் ஆசை பிடித்தவ னாகவும், ஏமாற்றுபவனாகவும் அமைகிறான். அதற்கு நேர்மாறாகக் கடவுளைப்பற்றியே சிந்தித் துக்கொண்டிருப்பவன் தூய்மையே வடிவெடுத் தவனாக மாறி அமைகிறான். தாம் இப்பொழுது எதைப் பகர்ந்தீரோ அதைப் பகர்வது ஈசுவர சாக்ஷாத்காரம் அடைந்துள்ளவனுடைய போக்கு ஆகாது. பண்டிதன் ஒருவன் படைத் துள்ள வெறும் ஏட்டுக் கல்வியால் ஆவதுதான் என்ன? விவேகமும் வைராக்கியமும் வாய்க் கப்பெற்றவனாக ஒருவன் அமையமாட்டானாகில் அவன் ஒன்றுக்கும் உதவமாட்டான். காலமெல் லாம் காமத்திலும், காசு ஆசையிலும் உழன்று கொண்டிருக்கிற மனது குப்பைக்கு ஒப்பானது. அம்மனதில் வெறும் ஏட்டுக் கல்வியைத் திணித்து வைப்பதால் ஆவதென்ன?

மலைவளர் காதலி

(தாயுமானவர் இயற்றியது)

தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே
சிற்றிடையி லேநடையிலே
சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே
சிறுபிறை நுதற்கீற்றிலே
பொட்டிலே அவர்கட்டு பட்டிலே புனைகந்த
பொடியிலே அடியிலேமேல்
பூரித்த முலையிலே நிற்கின்ற நிலையிலே
புந்திதனை நுழையவிட்டு
நெட்டிலே அலையாமல் அறிவிலே பொறையிலே
நின்னடியர் கூட்டத்திலே
நிலைபெற்ற அன்பிலே மலைவற்ற மெய்ஞ்ஞான
நேயத்திலே யுன்இருதாள்
பட்டிலே மனது செல நினைதருளும் அருள்வையோ
வளமருவு தேவை அரசே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே.

குழந்தை ஒன்று விளையாட்டுக்குரிய பொம்மைகளில் பற்று மிக வைத்திருக்கிறது. பொம்மையோடு கூடிய வாழ்வே குழந்தைக்குப் பெருவாழ்வாகிறது. பொம்மையில்லாவிட்டால் வாழ்வு தாழ்வுறுகிறது. ஆனல் உடலமைப்பிலும், மன அமைப்பிலும் வளர்ந்து வரவரக் குழந்தையொன்று பொம்மையில் வைத்துள்ள பற்றுதலை ஒதுக்கித் தள்ளுகிறது. பெரியவன் ஆனபிறகு அப்பொம்மையோடு கூடிய வாழ்வு பொருளற்றதாகப் போகிறது.

மக்களுக்கு உலக வாழ்வு என்னும் பொம்மைகளை அன்னை பராசக்தி வேண்டியவாறு கொடுத்து உதவியிருக்கிருள். பெரும்பாலர் உலக வாழ்வில் பற்று உள்ளவர்களாகவே இவ்வையக வாழ்வை முடிவுக்குக்கொண்டு வருகின்றனர். அரிதிலும் அரிதாக யாரோ சிலர் பிரபஞ்ச வாழ்வு குழந்தைகள் பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடுவதற்கு நிகர் என உணருகின்றனர். அத்தகைய அறிஞர் வையகவாழ்வில் வாஞ்சை வைக்காது பாரமார்த்திகப் பெருவாழ்வுக்குத் தங்களை ஆயத்தப்படுத்துகின்றனர்.

மக்கள் வைத்துள்ள உலகப் பற்றுதல்களுள் காமம் என்னும் பற்றுதல் மிகக்கொடியது. வாழ்நாள் முழுதிலும் காமநோய்க்கு அடிமைப் பட்டவர்களாகவே அன்னவர் இருக்கின்றனர். அதைக் கடந்து மேலே வர அவர்களுக்கு இயலுவதில்லை. அவர்களுடைய மனப்பான்மை பெருங்காயம் போட்டு வைத்துள்ள பாத்திரத்திற்கு நிகரானது. பெருங்காயத்தைக் காலி பண்ணி பாத்திரத்தை எவ்வளவு துலக்கினலும் பெருங்காயத்தின் நாற்றம் பாத்திரத்தை விட்டுப் போகாது. அத்தகைய பாத்திரத்தைத் தீயில் பழுக்கக் காய்ச்சி ஆறவைத்தால் தான் நாற்றம் அகலுகிறது. அங்ஙனம் ஆத்மசாதகர்கள் சிலர்க்கு முன்பு பெற்ற காமவாசனை எளிதில் அகலுவதில்லை. பாத்திரத்தைப் பழுக்கக் காய்ச்சுவதற்கு நிகராக அவர்கள் கையாள வேண்டிய சாதனம் ஒன்று உளது.

பக்தி சாதனத்தில் ஈடுபடுகின்றவன் தன்னிடத்திலுள்ள கீழான இயல்புகளைக் குறித்துக் கவலைப்படவேண்டியதில்லை. தன்னிடத்திலுள்ள சிற்றியல்புகள் அனைத்தையும் தெய்வத்திடத்துத் திருப்பினல் அவைகள் பேரியல்புகளாக மாறுகின்றன. பொருமைப்படுகிற ஒருவன் கடவுளைக் குறித்துப் பொருமைப்பட வேண்டும். கோபித்துக்கொள்ளுகிற ஒருவன் கடவுளோடு கோபித்துக்கொள்ளவேண்டும். சண்டை போடும் ஒருவன் கடவுளோடு சண்டை போடவேண்டும். திட்டுகிற பாங்கிலுள்ள ஒருவன் வாய்க்கு வந்தபடி கடவுளைத் திட்டவேண்டும். இப்படியெல்லாம் செய்தால் மனிதனல் அகற்ற முடியாத சிற்றியல்புகள் யாவும் பேரியல்புகளாக மாறியமைகின்றன.

இனி, காம நோயைப் பற்றி என்ன செய்ய வேண்டும் என்பது கேள்வி. காம நோயில் வருந்துகிற மானுடனெருவன் தன்னைப் பெற்றெடுத்த தாயின் முன்னிலையில் சிறிது நேரத்துக்காவது அந்த நோயை விலக்கி வைக்க வல்லவனுகிருன். அதேவிதத்தில் அன்னை பராசக்தி உபாசனையில் காம நோயை அகற்றுதற்கான உபாயம் ஒன்று உள்ளது. தன் மனதில் உதயமாகின்ற காம வெறிகளை உள்ளபடி படம் பிடித்து அன்னை பராசக்தியின் முன்னிலையில் பக்திபூர்வமாகப் படைத்தால் அக்காம நோய் தூய பக்தியாகத் திருந்தியமைகிறது.

அதற்கேற்ற பாடலாக அண்ணல் தாயுமானவர் இப்பாடலைப் பாடியிருக்கின்றார்.

வலிய மடமாதர் தெட்டிலே என்னும் சொல் லடுக்கு வலிமை வாய்ந்த அறிவு குறைந்த வஞ்சகம் நிறைந்த பெண்பாலர் எனப் பொருள் படுகின்றது. தெட்டு என்னும சொல் வஞ்ச கத்துக்கு அல்லது ஏமாற்றுதலுக்கு ஆளாதல் எனப் பொருள்படுகிறது. யார் ஒருவன் காம நோய்க்கு ஆளாகியிருக்கின்றானோ அவன் காமத்தை நிறைவேற்றுதல் பொருட்டுக் காமக் கிழத்தி சொல்லுகின்ற சொல் அனைத்திலும் நம்பிக்கை வைக்கின்றான். பின்பு தெளி வடைந்த நிலையில் தான் ஏமாற்றமடைந்ததைச் சரியாகத் தெரிந்துகொள்கிறான். யாசிப்பவன் ஒருவன் கொடுக்கிறவனைவிட மெலிந்தவனாக நடந்துகொள்ளுகிறான். கொடுக்கிறவனிடத்து ஒரு பைசா இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். ஏற்பவனிடத்து அந்தப் பைசா இல்லை. அந்தச் சிறு காசை முன்னிட்டுக் கொடுக்கிறவன் வலியவன் ஆகின்றான். அதே விதத்தில் காமத்தை நிறைவேற்றுவதற்குக் காமி மாது ஒருத்தியை அணுகுகிறான். அந்த நெருக்கடியில் அவள் வலிவுபடைத்தவளாகவும் அவளை அணுகிய மனிதன் வலிவற்றவனு மாகின்றான். ஆண்பாலரையும், பெண்பால ரையும் பொது நிலையில் வைத்துச் சீர்தூக்கிப் பார்த்தால் அறிவுத் திறனில் ஆண்பாலர் பெண்பாலரைவிட ஒருபடி மேலே இருப்பார் கள். அறிவில் பெண்பாலர் சற்றுப் பிந்தி யிருப்பதால் அன்னவர்களை மடமாதர் என வர்ணிப்பது பொருத்தமாக இருக்கிறது. அறி விலே இரண்டாந்தரத்திலிருப்பவர்கள் என இந்தச் சொல் தொடர் பொருள்படுகிறது. வாய்வெட்டிலே என்னும் சொல் தொடர் உதடு அமைப்பிலே எனப் பொருள்படுகிறது. காமத் துக்குக் கண் இல்லை என்பது கோட்பாடு. அழ கற்றதையும் அழகுற்றதாகக் காமம் பொருள் படுத்துகிறது. ஆதலால் காமத்துக்கு அடிமைப் பட்டிருக்கிற ஒருவன் எந்த மாது இடத்துக் காதல் பூணுகிறானோ அந்த மாதுவின் உதடு அமைப்பில் விளக்க முடியாத அழகைக் காணு கிறான். பொதுவாக ஆடவர் இடுப்புப் பெருத் தும், மாதர்கள் இடுப்புச் சிறுத்துமிருப்பது இயற்கையின் பாங்கு. இந்தப் பாங்கைச் சிற் றிடையிலே என்னும் சொல் விளக்கிக்காட்டு கிறது. காமக்கண்கொண்டு பார்க்கின்றவனுக் குக் காமக்கிழத்தியின் நடமாட்டத்தில் அழகு நிறைந்திருக்கிறது. அந்த இயல்பை நடை யிலே என்னும் சொல் விளக்குகிறது. கண் அமைப்பிலே உள்ள அழகை மீன் அமைப் போடு ஒப்பிடுவது மரபு. நீரில் நீந்தும் மீன் இடையிடையே ஒளிர்ந்து கொண்டிருப்பது போன்று தென்படுகிறது. காண்பதற்கு அது கவர்ச்சிகரமானது. இப்பாங்கைச் சேலொத்த விழியிலே என்னும் சொல் தொடர் நன்கு தெரிவிக்கிறது. சேல் என்பது ஒருவகை மீன். புசிப்பதற்குப் பால் எல்லார்க்கும் இனியது. பாலொத்த மொழியிலே என்பது காமத்துக்கு உட்பட்டிருப்பவனுக்குத் தான் காதலிக்கிற மாதுவிடமிருந்து வருகிற சொல் முழுவதும் இனியதாக இருக்கிறதென்பதைத் தெரிவிக் கிறது. அழகிய நெற்றியைச் சிறிய நிலாவோடு சீர்தூக்குவது மரபு. அக்கோட்பாட்டைச் சிறு பிறை நுதற் கீற்றிலே என்னும் சொல் லடுக்குத் தெளிவுபடுத்துகிறது. மாது ஒருத் திக்குப் புறத்திலுள்ள பொருள்கள் அலங்கார மாக வந்து அமைகின்றன. அப்படி அமைந் திருப்பவைகள் பொட்டிலே அவர் கட்டு பட் டிலே புனைகந்த பொடியிலே என விளக்கப்படு கின்றன. நெற்றியில் வைக்கப்பட்டுள்ள குங்கு மப் பொட்டு, மாது ஒருத்தி அணிந்திருக்கும் பட்டுப்புடவை, அவள்மேலே பூசியிருக்கும் வாச னைத் திரவியங்கள் ஆகியவைகள் அவள்வீசுகிற கவர்ச்சியை அதிகப்படுத்துகின்றன. பாதத் தில் அவள் அணிந்திருக்கும் பாதசரத்தை அடியிலே என்னும் சொல் விளக்குகிறது. மேனி அமைப்பிலே பெண் ஒருத்தி பெற்றுள்ள பரிபக்குவத்தை மேல் பூரித்த முலையிலே என்னும் சொல் தொடர் விளக்குகிறது. பூரித்த என்னும் சொல் முற்றிலும் வளர்ச்சி யடைந்த என்று பொருள்படுகிறது. காதலி ஒருத்தி எந்த இடத்தில் எப்படி நின்றாலும் அந்த இடத்தில் அந்தப் பாங்கில் காதலன் அழகு காண்கின்றான் என்பதை நிற்கின்ற நிலையிலே என்னும் பதங்கள் தெளிவுபடுத்து கின்றன. காதலனுடைய அறிவு முழுவதையும் காதலியிடம் செலுத்துவதால் புந்திதனை நுழைய விட்டு என அச்செயல் விளக்கப்படு

கிறது. ஆசைக்கு அடிமைப்பட்டு அதில் நெடுங்காலம் மனிதன் உழல்வதற்கேற்ப அவன் சிறுமை அடைகின்றான். அப்படி அவன் சிறுமைப்படலாகாது என்னும் கோட்பாட்டை நெட்டிலே அலையாமல் என்னும் சொல் தொடர் எச்சரிக்கை செய்கிறது. மன்மதனுடைய ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டிருக்கும் ஆடவர் மகளிர் ஆகிய இருபாலாரும் உடல்இன்பத்தில் உழன்று கொண்டிருப்பார்கள். அப்படி உழலும் காலமெல்லாம் புலால் உடம்பில் பிணிக்கப்பட்டுள்ள புலைச்சேரி வாழ்வு அவர்கள் பெறும் பேறு ஆகும். இந்த மயக்கத்தினின்று மீண்டு மேலேவருபவர்கள்பாரமார்த்திகப் பெருவாழ்விற்குத் தகுதி உடையவர்கள் ஆகின்றனர். அப்படித் தகுதி வாய்ந்தவர்கள் அறிவிலே ஊறியிருக்கின்றனர். பொருள்களை உள்ளது உள்ளபடி காண்பது அறிவு. பொறையிலே அவர்கள் நல்ல பயிற்சி பெறுகின்றனர். ஆசை என்னும் புயல் காற்று அடிக்கின்றபொழுது அதனால் அசைக்கப்படாது உறுதியாக நெறியில் நிலைநிற்பது பொறையாகின்றது. நின் அடியார் கூட்டத்திலே என்று அண்ணல் சத்சங்கத்தைச் சிலாகித்துச் சொல்லுகின்றார். நல்லார் இணக்கத்திற்கு நிகரான பாதுகாப்பு ஆத்மசாதகனுக்கு வேறு ஏதுமில்லை. இரண்டு தராசுத் தட்டுகளுள் பளு அதிகம்வாய்க்கப்பெற்றது கீழ் நோக்கிப் போகிறது. அங்ஙனம் தெய்வப் பற்று ஓங்கியிருப்பவர்களை உலகப்பற்று என்னும் சிறுமை வந்து அசைக்காது.இக்கோட்பாட்டை நிலைபெற்ற அன்பிலே என்று அண்ணல் இயம்புகின்றார். ஒரு பொருள் வேறு ஒரு பொருளாகக் காட்சி கொடுப்பது மலைவு அல்லது மயக்கத்தின் விளைவு. அத்தகைய மயக்கத்தினின்று தெளிந்தவர்கள் தெய்வக் காட்சியையே யாண்டும் காண்கின்றனர். தெய்வக் காட்சியானது தெய்வத்துக்குரிய ஜீவாத்மாக்களைப் பரத்தின்கண்ணே கவர்ந்திழுக்கிறது. ஊசியைக் காந்தம் கவர்ந்திழுப்பதற்கு நிகர் அது. இக்கோட்பாட்டை மலைவு அற்ற மெய்ஞ்ஞான ஞேயத்திலே என்று அடிகளார் சிலாகித்துச் சொல்கிறார். வீடு பெற நில் என்பது ஜீவர்களுக்குரிய வாழ்க்கையின் குறிக்கோளாகிறது. ஜீவாத்மாக்கள் பரமாத்மாவின் திருவடிகளைச் சேர சதா முயன்று கொண்டிருக்கிறார்கள். இந்த அரிய நோக்கத்தை உன் இருதாள் மட்டிலே என்று அண்ணல் இயம்புகின்றார். அதற்குமேல் அடைவதற்குப் பெரியநிலை ஏதும் இல்லாததால் மட்டிலே என்னும் பதத்தைப் பிரயோகிக்கின்றார். வாழ்க்கையின் மேலாம் குறிக்கோள் இனிது நிறைவேறுவதற்கு ஜீவப்ரயத்தனமும் பரம்பொருளின் அருளும் ஒன்று சேரவேண்டும். தக்க தருணத்தில் அச்சேர்க்கை மாறாது நிகழ்வதாகிறது. அந்தஅரிய வாய்ப்பை மனது செல நினது அருளும் அருள்வையோ என விப்பிரர் விண்ணப்பிக்கின்றார். பர்வதராஜனுக்கு இரண்டு கண்மணிக்கு நிகரான பார்வதி தேவியே, ராமேசுவரத்தில் எழுந்தருளியுள்ள தாயே,உமாதேவியே, கிருபை செய்வாயாக.

சட்டதிட்டங்கள் போட்டுக் கட்டுப்பாட்டையும், ஒழுங்குபாட்டையும் மக்களிடையே புகுத்துவது ஒருமுறை. அன்பின் மூலம் ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் மக்களிடையே புகுத்துவது மற்றொரு முறை. அன்பின் மூலம் ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் புகுத்துவதுதான் சிறந்த முறையாகும். ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கம் அன்பு என்னும் சக்தியால் இயக்கப்பட்டு வருகிறது. சட்டதிட்டங்களை அவ்வியக்கம் விரும்புவதில்லை. ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் உண்டு. ஆனால் யாரும் ஒழுங்குபாட்டிலிருந்தும் கட்டுப்பாட்டிலிருந்தும் விலகிப்போவதற்கு அனுமதி இல்லை. ஸ்ரீஇராமகிருஷ்ண இயக்கத்தில் இருப்பவர்கள் ஒழுங்குபாட்டையும், கட்டுப்பாட்டையும் தாங்களே மேற்கொள்பவராக இருக்கவேண்டும். இராமகிருஷ்ண இயக்கத்தில் ஒவ்வொரு செயலும் ஒழுங்குபாடாக நிகழும். குறித்த காலத்தில் முறைதவறாது இராமகிருஷ்ண இயக்கத்தின் செயல் நடைபெறுவதைப் பார்த்து இருக்கலாம். இவ்வியக்கத்தில் சேர்ந்தவர்கள் தியானம் செய்வதிலும் முறையாகச் சாஸ்திர ஆராய்ச்சி செய்வதிலும் தவறமாட்டார்கள். அன்பின் அடிப்படையில் அமைந்த இயக்கம் மக்களைச் சுதந்திர புருஷர்களாக்குகிறது. சட்டதிட்டத்தில் அமைந்த இயக்கம் மக்களை அடிமைப்படுத்துகிறது.

— *சுவாமி துரியானந்தர்*

அருள் நெறி

(ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிஷ்யரான சுவாமி அபேதானந்தரின் போதனை)

கடவுளுக்கு நிராமயன் என்பது ஒரு பெயர். நோய்இல்லாதவர் என்பது அதற்குப் பொருள். குறைநிலை நோய் எனப்படுகிறது. இறைவன் நிறைநிலையில் இருப்பதால் அவர் நோய் அற்றவர் ஆகிறார். உடலில் ஏற்படும் குறை உடலில் பலவித நோய்களாக வடிவெடுக்கிறது. மனதில் உள்ள குறை துன்பமாக வடிவெடுக்கிறது. மனிதன் நிறை நிலையை அடையும் வரையில் துன்பப்பட்டாக வேண்டும். அறியாமையினால் மனிதன் தன்னைக் குறைநிலை உடையவனாக எண்ணிக்கொள்கின்றான். உடலிலும் உள்ளத்திலும் உள்ள குறையைப் போக்க வாழத் தெரிந்துகொண்ட மனிதன் பாக்கியவான் ஆகின்றான்.

ஆத்மா நோய் இல்லாதது. ஆத்மாவுக்குத் துன்பம் இல்லை. ஆத்மாவுக்கு மரணம் இல்லை. ஆத்மச் சிந்தனை நம்மை நோயற்றவர்களாக ஆக்குகிறது. நோயற்றவாழ்வு நான் வாழ வேண்டும் என்று வள்ளலார் பிரார்த்திக்கின்றார். சதா ஆத்மச் சிந்தனையில் மூழ்கி இருக்க வேண்டும் என்பது அவருடைய விருப்பம். ஆத்மச் சிந்தனை செய்கின்றவர்களுக்குப் பிணி, மூப்பு, மரணம் ஆகிய துன்பங்கள் இல்லை. உடல் பிணி, மூப்பு, மரணத்துக்கு உள்ளாகின்றது. உடலில் இருந்துகொண்டிருப்பதற்கிடையில் உடல் பற்றில்லாமல் நீ வாழ முடியுமானால் மேற்கூறிய துன்பங்கள் உனக்கில்லை.

"உன் அருள் பெறுநாள் என்றென்றே வருந்துவனே" என்பது கோட்பாடு. குழந்தை விளையாட்டுப் பொருள்களை உதறித் தள்ளிவிட்டுத் தாய்தான் வேண்டுமென்று அழுதால் தாய் குழந்தையை எடுத்துக்கொள்கின்றாள். அங்ஙனம் நீ உலகத்தை உதறித்தள்ளிவிட்டு இறைவன்தான் வேண்டுமென்று இறைவனிடம் உன் உள்ளம் செல்லுமாயின் இறைவன் விரைவில் காட்சி தருவான்.

உன் உள்ளம் குழந்தையின் உள்ளம்போன்று கள்ளம்கபடம் அற்றதாக ஆகும்பொழுதுதான் நீ கடவுள் அருளைப் பெறமுடியும். 'நான் பொல்லாதவன், நான் பாபி, என்னிடம் ஏராளமான பாபவினைகளிருக்கின்றன. எனக்கு விமோசனம் இல்லை' என்று எண்ணுவது செருக்கு ஆகும். தன்னைத் தாழ்த்திக்கொள்வதும் செருக்கின் விளைவாகும். செல்வச் செருக்கு, கல்விச்செருக்கு, சாதனைச் செருக்கு எனச் செருக்கில் பலவிதங்கள் இருக்கின்றன. அவற்றுள் கல்விச் செருக்கும், சாதனைச்செருக்கும் சுலபத்தில் உள்ளத்தைவிட்டு அகல மாட்டா. செருக்கு இருக்கும் வரையிலும் ஈசன் அருள் நமக்குக் கிட்டாது. நிறைய சாதனை செய்கிறேன் என்ற எண்ணத்துடன் நீ எவ்வளவு சாதனை செய்தாலும் ஈசன் அருளைப் பெறமுடியாது. உள்ளத்தில் பற்று இருக்கும் வரையில் நீ சாதனை செய்தாகவேண்டும். உள்ளத்தில் உள்ள உலகப்பற்று ஈசன் அருள் பெறத் தடையாயிருக்கிறது. உள்ளத்தில் உள்ள உலகப்பற்றைத் துடைத்துத்தள்ளுவது உன் லட்சியமாக இருக்கவேண்டும். உலகப் பற்று உன் உள்ளத்தில் பல விகாரமான எண்ணங்களை உண்டுபண்ணிக்கொண்டே இருக்கும். அவ்வெண்ணங்களுக்கு வசப்படுவாயாகில் நீ பற்றை ஒழிக்க முடியாது. உலகப்பற்று உண்டுபண்ணும் விகாரமான எண்ணங்களுக்கு வசப்படாது இருந்து பழகுவது நல்ல சாதனை ஆகிறது. உன்உள்ளத்தில் தோன்றும் விகாரமான எண்ணங்கள் உன்னை அலக்கழிக்காவண்ணம் பார்த்துக்கொள். உனக்குப் பகைவர்கள் புறவுலகில் இல்லை என்பதையும், உன் விகாரமான எண்ணங்களே உனக்குப் பகைவர்கள் என்பதையும் நன்கு அறிந்துகொள். விருப்பத்தையும், வெறுப்பையும் உண்டுபண்ணும் எண்ணங்கள் விகாரமான எண்ணங்களாகின்றன. அத்தகைய எண்ணங்கள் உன் உள்ளத்தில் எழாதிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

உன்னுடைய எண்ணங்களும் செயல்களும் உன் உள்ளத்தில் பதிவுகளை உண்டுபண்ணுகின்றன. அப்பதிவுகள் உன் உள்ளத்தில் இடம் பெற்றிருந்து சமயம் வாய்க்கும்பொழுது மீண்டும் எண்ணங்களாகவும் செயல்களாகவும் வடிவெடுக்கின்றன. நீ சரீரத்தின் மூலமாகவும் மனதின் மூலமாகவும் செய்கின்ற செயல்

கர்மம் எனப்படுகின்றது. நீ செய்யும் ஒவ்வொரு கர்மமும் உன் உள்ளத்தில் பதிவை உண்டு பண்ணுகிறது. அப்பதிவு எதிர்கால எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் வித்து ஆகிறது. உன் எண்ணத்துக்கும் செயலுக்கும் ஏற்பச் சுகம் அல்லது துக்கத்தை அனுபவிக்கின்ருய். உள்ளத்தில் பதிவை உண்டாக்குவது கர்மத்தின் முதல் பலனுகும். இன்பத்தையோ, துன்பத்தையோ கொடுப்பது கர்மத்தின் இரண்டாவது பலனுகும். திரும்பத் திரும்ப எண்ணுகின்ற எண்ணங்களும் செயல்களும் உன்னுடைய பண்பை உருவாக்குகின்றன. நல்லதோ, கெட்டதோ நீ தேடிக்கொண்டதாகும். உனக்கு வரும் நன்மைக்கும் தீமைக்கும் நீயே பொறுப்பாளி ஆகின்ருய். உனக்கு வரும் நன்மைக்கும் தீமைக்கும் பிறர் பொறுப்பாளி ஆகமாட்டார்கள். பொதுவாக மக்கள் தங்களுக்கு வரும் துன்பத்துக்குப் பிறரைக் காரணம் காட்டி குற்றம் சாட்டுவார்கள். தாங்கள்தாம் அத்துன்பத்துக்குக் காரணம் என்பதை அறிந்துகொள்ள மாட்டார்கள். வழியில் நடந்துபோகும்பொழுது முள்ளின் மீது காலே வைத்து முள் தைத்து விட்டால் குற்றத்தை முள் மீது சுமத்துவார்கள். முள் காலில் தைத்துவிட்டது என்று சொல்லுவார்களே ஒழிய தாங்கள் முள்மீது கால் வைத்ததாகச் சொல்லமாட்டார்கள்.

உனக்கு வரும் இன்ப துன்பங்களுக்கு நீயே காரணம் என்பதை அறிந்துகொண்டு பிறர் மீது பழி சுமத்துவதை நிறுத்திவிடு. கர்மத்தின் விளைவை நீ அனுபவித்துத்தான் ஆக வேண்டும். கர்மபலனிலிருந்து உன்னை விடுவித்துக்கொள்வதற்குக் கர்மபலன்களை எல்லாம் ஈசனுக்கு அர்ப்பணித்துவிடு. ஒவ்வொருநாளும் செயலில் இறங்குவதற்கு முன்பு ஈசுவர சிந்தனையை வளர்த்துக்கொள். "ஈசா, நீ கொடுத்த பணியை நான் செய்கின்றேன். நான் உன்னுடைய தொண்டன்" என்று எண்ணி நீ கர்மத்தைச் செய். வேலைக்காரன் ஒருவன் எஜமானன் கொடுத்த வேலைகளைச் செய்கின்ருன். அவன் செய்கின்ற செயல்களினுல் உண்டாகும் விளைவைப்பற்றி அவன் கவலைப்படுவது இல்லை. வேலைக்காரன் போன்று நீ கடவுளுக்குத் தொண்டு செய்யக் கற்றுக்கொள். பலனில் பற்று வைத்துக் கர்மம் செய்யும் பொழுது நீ புண்ணியத்தையும் பாபத்தையும் தேடுபவனுகின்ருய். கர்மபலனில் பற்று வைக்காது கர்மம் புரிகின்றபொழுது நீ பாப புண்ணியங்களில் இருந்து விடுபடுகின்ருய்.

உன்னையறியாது உன் மனதில் எண்ணங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

"என்னுத எண்ணமெலாம் எண்ணியெண்ணி ஏழை நெஞ்சம்
புண்ணகச் செய்ததினிப் போதும் பராபரமே"

என்கிருர் தாயுமானவர். உள்ளத்தில் அப்படித் தோன்றி வரும் எண்ணங்களையெல்லாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும். பொருத்தமில்லாத எண்ணங்கள் தோன்றிவந்தால் விசாரத்தால் அவைகளின் வேகத்தைக் குறைக்க வேண்டும். தெய்வீக எண்ணங்களை உள்ளத்தில் நிரப்புவதற்கு முயலவேண்டும். தெய்வீக சம்பந்தமான எண்ணங்களும், செயல்களும் தெய்வீக சம்பந்தமான பதிவுகளை உள்ளத்தில் ஏற்படுத்துகின்றன. தெய்வீக சம்பந்தமான பதிவுகளை உள்ளத்தில் உண்டுபண்ணுவதற்கே நீ கர்மம் புரியவேண்டும்.

கிரியைகள் மூலமாகவும், ஜபத்தின் மூலமாகவும், தியானத்தின் மூலமாகவும், பற்றற்றுக் கர்மம் செய்வதன் மூலமாகவும் நீ உன் உள்ளத்தைச் சுத்தம் செய். ஐம்பொறிகள் மூலமாகவும் தெய்வீக உணர்வை வாங்கிப் பழகு. நாள்தோறும் நீ உண்ணும் உணவைத் தெய்வத்துக்குப் படைத்துப் பின் அதைப் பிரசாதமாக ஏற்றுக்கொள். கண்ணுக்குத் தென்படும் காட்சியைக் கடவுள் சொருபமாகக் கருதுப்பொழுது அது கண் மூலம் ஏற்கும் கடவுள் பிரசாதம் ஆகிறது. காதின் மூலம் கேட்கும் ஓசை இறைவனுடைய மகிமைகளை ஞாபக மூட்டும்பொழுது அது காதின் மூலம் பெறும் கடவுள் பிரசாதம் ஆகிறது. மூக்கின் மூலம் மோந்து பார்க்கும் வாசனை தெய்வீக மணமாக இருக்கும்பொழுது அது மூக்கின் மூலம் பெறும் கடவுள் பிரசாதம் ஆகிறது. மெய்யின் மூலம் வரும் ஊறு தெய்வீக உணர்ச்சியை ஊட்டுமாகில் அது மெய்யின் மூலம் பெறும் கடவுள் பிரசாதம் ஆகிறது. இங்ஙனம் ஐம்பொறிகள் மூலமாக நாள்தோறும் கடவுள் பிரசாதத்தை அருந்திப் பழகு. ஐம்பொறிகளும், மனமும் கடவுள் உணர்வை ஊட்டுவதாக அமையட்டும்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-136

788. जयत्सेना ஜயத்ஸேனு — வெற்றியோடு கூடிய சேனைகளை உடையவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பண்டாசுரன் முதலிய கொடிய அரக்கர்களோடு அன்னை பராசக்தி போர்புரிந்த காலமெல்லாம் அவளுக்கும் அவளுடைய சேனைகளுக்கும் யாண்டும் வெற்றியே வாய்த்தது. இது இயற்கையின் நடைமுறையைப் பற்றிய அரியதொரு கோட்பாடு ஆகும். பிரபஞ்ச வாழ்க்கையை ஓர் ஓயாத போராட்டமாகப் பொருள்படுத்தலாம். இப்போராட்டம் பெரிதும் நலன் கேடு ஆகிய இருபான்மைகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடு ஆகும். நலனை நிலைநாட்ட முயல்பவர்கள் ஒரு கூட்டத்தார் இருக்கின்றனர். அதற்கு இன்னல் விளைவித்து நலனைப் பாழ்படுத்தும் மற்றொரு கூட்டத்தார் இருக்கின்றனர். எக்காலத்திலும் உலகில் எங்குமே இத்தகைய போராட்டத்தைக் காணலாம். நலனை நிலை நாட்டுதல் எளிதன்று. நல்வழியில் எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு முயற்சிக்கும் முட்டுக்கட்டைகள் வருகின்றன. அவைகளைச் சமாளிப்பது நல்வழியில் செல்லுகிறவர்களுடைய கடமையாகிறது. மனிதனுக்கு நல்வழியில் நம்பிக்கை தீவிரமாக இருக்கவேண்டும். நல்வழியினின்று நல்லார் எக்காரணத்தை முன்னிட்டும் பிசகலாகாது. முட்டுக்கட்டைகள் மலைக்கு நிகராக வந்து எதிர்த்து நின்றாலும் அவைகளைச் சமாளிப்பதிலேயே நல்லவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். நல்லார்கள் கூட்டமே அம்பிகையின் சேனைகள் எனப் பெயர் பெறுகின்றன. அன்னவர்கள் எடுத்துக்கொள்கின்ற நல்ல இயக்கங்களுக்குத் தடைகளுக்கு மேல் தடைகளும்,விக்கினங்களுக்கு மேல் விக்கினங்களும் சதா வந்துகொண்டேயிருக்கும். ஆயினும் பொறுமையோடு முயற்சி பண்ணிக்கொண்டிருந்தால் இறுதியில் நலன் வெற்றியடையும். இடைஞ்சல்கள் தாமாக அடிபட்டுப்போம். இதுவே அம்பிகைக்குரிய இந்த நாமத்தின் உட்கருத்தாம்.

789. निस्त्रैगुण्या நிஸ்த்ரை குண்யா— முக்குணங்களுக்கு அப்பால்பட்டவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணமயமாயிருப்பது இப்பிரபஞ்சம். பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் ஆகிய மூன்று உலகங்களும் முக்குணங்களைக் கொண்டு ஆக்கப்பெற்றவைகளாயிருக்கின்றன. இந்த மூன்று குணங்களுக்கும் பிறப்பிடமாயிருப்பவள் அன்னை பராசக்தி. இம்மூன்றும் இயற்கைத் தாயினிடத்திருந்தே தோன்றி வந்தவைகள் எனினும் இயற்கைத் தாய் இம் மூன்றுக்கும் கட்டுப்படாதவளாக இலங்குகின்றாள். இம் மூன்று குணங்களின் அமைப்பைச் சிறிது ஆராய்வது அவசியம். சத்துவ குணத்தின் நிறம் வெண்மை. ரஜோ குணத்தின் நிறம் சிவப்பு. தமோ குணத்தின் நிறம் கருமை. நிறமற்ற நீராவி வெண்மேகமாக வடிவெடுக்கிறது. அதன் மீது சூரியகிரணம் படிகிறபோது அது செம்மேகமாகக் காட்சி கொடுக்கிறது. மழையாகப் பொழிவதற்கு முன்பு அது கார்மேகமாக அதாவது கரிய நிறமுடைய மேகமாகத் தென்படுகிறது. மழையைப் பொழிந்து நிலத்துக்கு வருகிற பொழுது சுத்த ஜலத்தில் எந்த நிறத்தையும் நாம் காண்பதில்லை. மூலநிலையில் நிறமற்று இருக்கிறது. திரிவுபட்ட நிலையில் அது மூன்று நிறங்களுடன் மிளிர்கிறது. அன்னை பராசக்தி இதே பாங்கில் முக்குணங்களை ஓர்மைப்படுத்தியவிடத்து அந்த மூன்று குணங்களுக்கு அப்பாற்பட்டவளாக இருக்கின்றாள். அந்த மூன்று குணங்கள் மயமாகத் தன்னை திரிவுபடுத்திக் கொள்கிற பொழுது பிரபஞ்ச மயமாக அவள் காட்சி கொடுக்கிறாள். பிரபஞ்ச மயமாக அவள் தென்பட்டுக் கொண்டிருப்பதற்கிடையில் உண்மையில் அவள் பிரபஞ்சத்தில் கட்டுப்படாதவள். ஆத்மசாதகர்களுக்கு இதன் மூலமாக அம்பிகை அரியதொரு பாடத்தை விளக்கிக்கொண்டிருக்கிறாள்.

ஜீவாத்மன் என்பது புருஷ தத்துவமும், பிரகிருதி தத்துவமும் ஒன்றுகூடி அமையப் பெற்ற சொரூபமாம். மானுடன் சரீரத்தில் வீற்றிருக்கும் ஜீவாத்மாவாகின்றான். சரீரம் பிரகிருதியின் கூறு. அதில் வீற்றிருக்கும்

ஜீவாத்மா பரமாத்மாவின் கூறு. தன்னை யாண்டும் உடல் மயமாக உணர்கின்றவன் பிரகிருதியில் கட்டுண்டவனாகின்றான். உடலில் வாழ்ந்திருப்பதற்கிடையில் உடல்உணர்ச்சியை ஒதுக்கி வைப்பது மனிதனுக்குச் சாத்தியம். எப்பொழுதெல்லாம், ஆத்மசாதகன் உடல் உணர்ச்சியை ஒதுக்கி வைத்துவிட்டு ஆத்ம போதத்தில் திளைத்திருக்கிறானோ அப்பொழு தெல்லாம் அவன் பரம்பொருளுக்கு உரியவனாக இருக்கின்றான். தான் உடல் என்னும் எண் ணத்தை வருவித்துக்கொள்ளுகிற பொழுது பிரகிருதியில் கட்டுண்டவனாகின்றான். தனக்குச் சொந்தமாயுள்ள முக்குணங்களில் அம்பிகை கட்டுப்படாதிருப்பதை முன் மாதிரியாக வைத் துக்கொண்டு ஆத்மசாதகன் தேகாத்மபுத்தி யைத் தாண்டியவனாக இருந்து பழகுவானாகில் அது நல்ல ஆத்மசாதனமாகிறது.

790. परापरा பராபரா—பரவஸ்துவாக வும், அபரமாகிய பிரபஞ்ச வடிவினளாகவும் இருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ஒரு பொருள் ஏக காலத்தில் மேலானதாக வும், கீழானதாகவும் இருக்க முடியுமா என் னும் ஐயம் எழலாம். அது சாத்தியம் என்ப தற்கு இயற்கையில் சான்றுகள் ஏராளமாக இருக்கின்றன. நூறு அடி நூற்றைம்பது அடி வானளாவ வளர்ந்திருக்கும் மரங்கள் சில பிரதேசங்களில் இருக்கின்றன. அத்தகைய மரங்களின் மேல் பகுதி ஒரு பாங்கில் ஒரு காரி யத்திற்குப் பயன்படுகின்றது. இது நாம் கண் கூடாகக் காணும் காட்சியாகும். ஹிமாசலத் தில் யாண்டும் உறைபனி மயமாயிருக்கின்ற சிகரப்பகுதியிருக்கின்றது. கோடைக்காலத் தில் செழிப்புற்றிருந்து மக்களுடைய சுகஜீவ னத்துக்கு நன்கு பயன்படுகிற நடுப்பகுதி இருக்கிறது. அப்பகுதி பனிக்காலத்தில் மக் களுக்குப் பயன்படமாட்டாது. அம்மலையின் அடிப்பகுதி யாண்டும் மக்கள் வசிப்பதற்கும் சாகுபடி பண்ணுவதற்கும் பொருத்தமானதாக அமைந்திருக்கிறது. இங்ஙனம் ஒரே மலையின் மூன்று பகுதிகள் மூன்று பாங்குகளோடு கூடி யவைகளாக இருக்கின்றன. நீரின் அமைப்பு ஆழமான சமுத்திரத்தின் அடிப்பகுதியில் ஒரு நிலையில் இருக்கிறது. அது வாழ்க்கைக்குத் தகுதியற்றது. இடைப்பகுதியும் மேல் பகுதியும் நீர் வாழ்வனவற்றுக்கு ஏற்ற இடங்களாக இருக்கின்றன. நிலத்தில் அமைந்துள்ள நீர் நிலத் தின்பாங்குக்கேற்பப் பலதரப்படுகிறது. வானத் தில் சஞ்சரிக்கும் மேகங்கள்,மழையாகப் பொழி வதற்கும், உறைபனியாக வீழ்வதற்கும் ஏற் றவைகளாக அமைந்திருக்கின்றன. ஆக, இயற்கையில் ஒரே பொருள் அமைப்பை முன்னிட்டுத் தாரதம்மியம் உடையதாக இருக் கிறது.

அன்னை பராசக்தி பிரபஞ்ச அதீத நிலையில் இருக்கின்றபொழுது அவள் பரவஸ்துவாகப் பாராட்டப்படுகின்றாள். அப் பரவஸ்துவை நிர்க்குணப் பிரம்மம்என்றும், குண அதீதமென் றும், கால, தேச, நிமித்தத்துக்கு எட்டாததென் றும் நாத அதீதமென்றும் இயம்புகிறோம். அதே பரவஸ்து முக்குணமாக விகாரப்படும் பொழுது சகுணப் பிரம்மம் என்றும், மூலப்ர கிருதி என்றும், ஈசுவரி என்றும் பாராட்டப் பெறுகிறாள். அவள் முற்றிலும் முக்குணமய மாகப் பரிணமிக்கின்ற பொழுது பிரபஞ்சமாக இலங்குகின்றாள். விதையினின்று அடிமரம், நுனிமரம், கிளை, இலை, பிஞ்சு, காய், பழம் முதலியன பரிணமிப்பது போன்று ஒரே பரவஸ்து இகமாகவும், பரமாகவும் இலங்கிக் கொண்டிருக்கிறது. இத்தனை விதங்களில் அவ்வஸ்து அமைந்திருப்பது அதனுடைய மகிமையாகும்.

பரம் என்பது நெடுந்தூரத்திற்கு அப்பால் இருப்பது எனப் பொருள்படுகிறது. அபரம் என்பது பக்கத்திலிருப்பதைக் குறிக்கிறது. ஆக, சேய்மையில் இருப்பதும், அண்மையில் இருப்பதும் ஒரே வஸ்துவாம்.

மனிதனுடைய இந்திரியங்களுக்கும் அந்தக் கரணத்திற்கும் எட்டுவது அபரம். இந்திரியங் களுக்கு எட்டாது நிர்விஷயமாயிருப்பது பரம். இவற்றிற்கு இயற்கையில் சான்று எடுப் போமானால் நிலத்தில் ஆங்காங்குள்ள நீர் கட் புலனாகிறது. வானத்தில் வியாபித்திருக்கும் நீராவி கட்புலனாவதில்லை. ஆக, நீர் ஆனது விஷயமாகிற பாங்கிலும் நிர்விஷய வஸ்துவாக வும் அமைந்திருப்பது தேற்றம்.

வஸ்துவானது நாதமாகவும், நாதாதீதமாக வும் ஏக காலத்தில் அமைந்திருக்கிறது. நாத

மயமாயிருக்கிற வஸ்து பிரணவம் என்றும், நாதப்பிரம்மம் என்றும் இயம்பப் பெறுகிறது. அதே பிரணவம் உச்சரிப்பைத் தாண்டியுள்ள நிலையில் அமாத்ரப்பிரணவம் என்று இயம்பப் பெறுகிறது. அது பரநிலையில் ஓசைமயமாய் இருக்கும் அபரநிலை.

மந்த்ரங்களை ஜபிக்கிறபொழுது நா அசைந்து ஓசையைக் கிளப்புமிடத்து அது அபரா ஜப மாகிறது. நா அசையாது ஓசையைக் கிளப் பாது மனது மட்டும் மந்த்ரத்தை எண்ணிக் கொண்டிருக்கின்ற பொழுது அது பரா ஜப மாகிறது.

இங்ஙனம் அன்னை பராசக்தி பரம்பொரு ளாகவும் இகமாகவும் அமைந்திருப்பதில் இத் தனைவிதமான மகிமைகள் அவளுடைய சொரு பத்தில் இடம் பெறுகின்றன.

791. **सत्यज्ञानानन्दरूपा** ஸத்ய ஞானா னந்த ரூபா—ஸத்யமாகவும், ஞானமாகவும், ஆனந்தமாகவும் வடிவெடுத்திருப்பவள் என் பது இந்த நாமத்தின் பொருள்.

அன்னை பராசக்தி இந்த மூன்று சொரூபங் களிலும் யாண்டும் இலங்கிக்கொண்டிருக்கிறாள் என்பதற்கு இயற்கையே சான்று ஆகிறது. எது ஒருகாலத்திலிருந்து இன்னொரு காலத்தில் இல்லாது மறைந்துபட்டுப் போகிறதோ அது ஸத் ஆகாது. அஸத் என்றே அதைச் சொல்ல வேண்டும். ஸத்யம் என்னும் பரவஸ்துவுக்கு அமைந்துள்ள விளக்கம் அது யாண்டும் உள் ளது எனப் பொருள்படுகிறது. காலத்தை முன்னிட்டோ, இடத்தைமுன்னிட்டோ, காரண காரியத்தை முன்னிட்டோ, இருக்கவும், மறைய வும் செய்கிற பொருள் ஸத்யம் ஆகாது. ஜீவர் களாகத் தோற்றத்தில் வந்திருப்பவைகள் அனைத்தும் நிலைத்திருக்க விரும்புகின்றன. அழிந்துபட்டுப்போக எவ்வுயிரும் விரும்புவ தில்லை. ஒவ்வோர் உயிரும் தன் இருப்பை நிலைநாட்டுதல் பொருட்டே உணவைத் தேடி அலைகின்றன. உணவைப் பெற்று வாழ்வைப் பேணி வருகின்றன. ஆகவே யாண்டும் ஸத் ஆக இருக்க உயிர்களனைத்தும் முயன்று வரு கின்றன. ஸத் ஆக இருக்க அவைகள் முயலு வது அன்னை பராசக்தியின் ஸத் சொரூபத் திற்கு விளக்கமாகிறது.

ஒவ்வோர் உயிரும் தன் போக்கில் அறி வைப் பெற முயலுகிறது. தான் அறிவு மய மானது என்பதனையும் அது நிரூபிக்கிறது. வரிசையாக ஜாடியில் வைத்திருக்கின்ற செடி களுக்கு மூன்று பக்கம் திரைகட்டி இருளை உண்டுபண்ணினால் அச்செடிகள் யாவும் வெளிச் சம் இருக்கிற பக்கம் கிளைகளை உண்டுபண்ணு கின்றன. வெளிச்சத்தை அறிந்துகொள்ளும் ஞான சக்தி ஸ்தாவரத்திற்கு இருக்கிறது என் பதற்கு இது சான்றாகிறது. இங்ஙனம் ஜங்க மம் ஒவ்வொன்றினிடத்தும் அதன் அதன் தரத்திற்கேற்ற அறிவு அமைந்திருக்கிறது. ஆராய்ச்சிபண்ணுகிறவர்களுக்கு இது வெளிப் படை. புலனறிவைப் பெறுவதில் உயிர்கள் முயல்கின்றன. மனிதன் புலனறிவைக் கடந்த நிலையில் அறிவைப்பெற முயல்கின்றான். முற்றி லும் சேதன நிலையை அடைய மனிதன் முயல் கின்றான். அந்நிலையை அடைந்தவன் ஞானி ஆகின்றான். அறிவை வளர்ப்பதில் உச்சநிலை அடைந்திருப்பவன் மனிதன். இங்ஙனம் ஞானத் தைப் பேணுதல் உயிர்களனைத்துக்கும் பொது வானது. ஞானத்தின் சிகரத்தை எட்ட மனித னுக்குச் சாத்தியமாகிறது. அத்தகைய மனிதன் ஞானி என்றோ பிரம்ம ஞானி என்றோ பாராட் டப்படுகிறான். ஆக, ஞானமயமாக அன்னை பராசக்தி ஜீவகோடிகளனைத்திடத்தும் இலங் கிக்கொண்டிருக்கிறாள்.

இனி, ஆனந்தத்தை நாடுவது உயிர்கள் அனைத்துக்கும் பொதுவானது. பொருத்தமான சூழ்நிலையில் ஸ்தாவரங்கள் ஆனந்த மயமாக நிலைத்திருப்பதை நாம் காணலாம். ஜங்கமங் களுள் மேல் நிலைக்கு வரவர ஆனந்த நாட்டம் தெளிவுற்று விளங்குகிறது. ஆனந்தத்தை நாடுதலில் மனிதன் மேன்மையுற்று மிளிர்கிறான் என்பது வெளிப்படை. மனிதன் தியானத் தில் பெறுகிற ஆனந்தம் பேரானந்தமாகிறது. யோகி அப்பேரானந்தத்தில் யாண்டும் இருக் கிறான். ஆக, அன்னை பராசக்தி ஸத்சொரூப மாக, ஞான சொரூபமாக, ஆனந்த சொரூப மாக அதாவது ஸத், சித், ஆனந்த சொரூபமாக இலங்கிக் கொண்டிருக்கிறாள் என்றால் அவளி டத்திலிருந்து தோற்றத்திற்கு வந்துள்ள ஜீவ கோடிகளனைத்தும் அதே ஸத், சித், ஆனந்த சொரூபமாக நிலைத்திருக்க முயலுகின்றன என் பது அன்னையின் மகிமைக்கு விளக்கமாம்.

வைகுண்ட ஏகாதசி

மார்கழி மாதத்தில் வளர்பிறையில் வரும் ஏகாதசி வைகுண்ட ஏகாதசியாகக் கொண்டாடப்படுகிறது. வைஷ்ணவ ஆலயங்களில் வைகுண்ட ஏகாதசியைப் புனிதமாகக் கருதி விழாக் கொண்டாடுகிருர்கள். ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இப்புனித நாளன்று பக்தர்கள் இரவு முழுதும் விழித்திருந்து ஜபம், தியானம் செய்வார்கள். இருபத்துநான்குமணி நேரமும் உண்ணுது நோன்பு நோற்பார்கள். இதை அதிதீவிரமாக அனுஷ்டிக்கின்றவர்கள் இருபத்துநான்கு மணி நேரம் நீரும் அருந்தாது இருப்பார்கள். அவ்வாறு இருபத்து நான்கு மணி நேரம் உண்ணுதும், நீர் அருந்தாதும் இருக்கமுடியாதவர்கள் ஒரு வேளை பால் பழம் எடுத்துக்கொள்வார்கள். சிறுவர்களும், சிறுமிகளும் ஒருவேளை சிற்றுண்டி எடுத்துக்கொள்ள அனுமதிக்கலாம்.

கலியுகத்தில் காட்டுக்குச் சென்று காய்கனிகளையும், இலை தழைகளையும் அருந்தி தவம் இயற்றுபவர்கள் இல்லை. கலியுகத்தில் மக்களுக்கு உயிர் அன்னத்தில் இருக்கிறது. எனவே ஏகாதசி அன்று உணவு எடுத்துக் கொள்ளாதிருப்பதுதவம் ஆகிறது.உணவுஎடுத்துக் கொள்ளாதிருந்தால் மட்டும் போதாது. உணவைப்பற்றி மனதால் எண்ணவும்கூடாது. மனம் முழுவதையும் ஜபத்திலும், தியானத்திலும், பஜனையிலும், கீர்த்தனையிலும் ஈடுபடுத்தி தெய்வச் சிந்தனையிலேயே மூழ்கியிருப்பது ஏகாதசி விரதத்தைப் பக்தி சிரத்தையுடன் அனுஷ்டிப்பதாகிறது. அத்தகைய பக்தியுடன் முழு மனதையும் தெய்வத்திடம் ஈடுபடுத்தி இருப்பவர்சள் பிறப்பு, இறப்பு என்னும் பிணியிலிருந்து விடுபடுகின்றனர் என்று சாஸ்திரங்கள் பகர்கின்றன. இதில் நம்பிக்கை வைத்து ஏகாதசி விரதம் அனுஷ்டிப்பவர்கள் முக்தி அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

அல்லும் பகலும் பொருள் தேடுவதிலும், புகழ் தேடுவதிலும் ஈடுபட்டு உலக போகத்தை அனுபவிக்க மக்கள் படாதபாடு படுகின்றனர். பாரமார்த்திகத் துறையில் அப்படிப் பாடுபடுவார்களேயானல் அவர்கள் பேரின்பப்பேற்றை அடைவார்கள் என்பது திண்ணம். உலக போகத்துக்காகப் பாடுபடுபவர்கள் உண்கின்ற உணவு, ஆணவ அகங்காரம் என்ற அரக்கனை அவர்கள் உள்ளத்தில் தோற்றுவிக்கிறது. வைகுண்ட ஏகாதசியன்று உபவாசம் இருந்து அவ்வரக்கனை ஒழித்துக்கட்டப் பக்தியுடன் பகவத் சிந்தனையில் மூழ்கவேண்டும். உபவாசம் இருந்து, ஆணவ அகங்காரத்தை ஒடுக்கவும் ஜபம், தியானம், பஜனை, கீர்த்தனை முதலியன செய்து பரபோதத்தை வளர்க்கவும் வைகுண்ட ஏகாதசி அன்று நாம் தீவிரமாக முயல வேண்டும்.

ஏகாதசியன்று கிரமமாக உண்ணுது இருந்து வழிபாடு செய்தால் பகவான் பரம திருப்தி அடைகிருர். அப்படிச் செய்கின்றவர்களுடைய பாபங்கள் போக்கப்படுகின்றன. மனம் பரிசுத்தமடைகிறது. பக்தி உள்ளத்தில் வளர்ச்சி அடைந்து ஆழ்ந்த பக்தி இடம் பெறுகிறது. வைஷ்ணவ பக்தர்களுக்கு ஏகாதசி மிகவும் புனிதமான நாள் ஆகிறது.

அறிவு, அன்பு ஆகிய இரண்டும் நம் உள்ளத்தை வளர்க்கின்றன. அறிவு, அன்பு ஆகிய இரண்டும் முக்கியமானவை. ஆனல் அன்புக்கு முதலிடம் கொடுத்தாக வேண்டும். அன்பு வளராது அறிவுமட்டும் வளர்ந்தால் அது அழிவு நிலையில் கொண்டுசேர்க்கும் என்பதற்கு இன்றைய உலகப் போக்கே சான்று. நவீனக் கல்வி பெற்ற மக்கள் அறிவை லௌகீகத் துறையில் செலுத்தி வருகின்ருர்கள். அவர்களுடைய இருதயம் இருள்மூடிக் கிடக்கிறது. இருதயம் அன்பினல் நிரம்பப்பெருது வெறும் அறிவு மட்டும் வளர்ந்தவர்கள் அனுவசியமான விவாதங்களில் ஈடுபடுகிருர்கள். மனதைத் தூய்மைப் படுத்தும் பயிற்சியில் அவர்கள் தங்கள் அறிவைச் செலுத்துவதில்லை. ஏகாதசி போன்ற விரதத்தை அனுஷ்டிப்பது பரிகாசத்திற்குரியது என்று அவர்கள் எண்ணுகின்றனர். எனவே அவர்கள் அத்தகைய விரதங்களை அனுஷ்டிப்பதில்லை. வெறும் அறிவுமட்டும் வளருவது ஆத்ம சாதனத்திற்கு இடையூருக அமைந்து விடுகிறது. அன்பை வளர்க்காது அறிவை மட்டும் வளர்ப்பவர்கள் ஸத்விஷயங்களில் பல

கேள்விகளைக் கிளப்புகின்றனர். அவர்கள் சுலபத்தில் வழிதவறிப் போய்விடுகிறார்கள். சாஸ்திரங்களில் நம்பிக்கை வைத்துச் சமய சாதனையில் ஈடுபடவேண்டும். சமய சாதனையில் முன்னேறுவதற்கு விசுவாசமும், வினயமும், தூய்மையும் அவசியமாகின்றன. அப்போதுதான் சமய உண்மைகள் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று தெளிவாக விளங்குகின்றன. உண்மையைத் தரிசித்த பெரியோர்கள் எழுதிவைத்த நூல்கள்தாம் சாஸ்திரங்களாகும். சாஸ்திரங்கள் காட்டுகின்ற கடவுள் நெறியில் நாம் விசுவாசம் வைக்கவேண்டும். சாஸ்திரங்கள் காட்டும் நெறியில் சந்தேகம் கொள்ளக்கூடாது. தந்தை இவர்தாம் என்று தாய் கூறினால் அதில் நாம் நம்பிக்கை வைத்தாக வேண்டும். இவர்தாம் தந்தை என்பதை நிரூபிக்க முடியுமா என்று தாயை யாராவது கேட்கமுடியுமா? அங்ஙனம் சாஸ்திரம் காட்டும் நெறியில் சந்தேகம் கொண்டு கேள்விகள் கிளப்பலாகாது.

மனுதர்ம சாஸ்திரத்தில் பாபங்களைப்போக்குவதற்கு உபவாசம் இருப்பது அவசியம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏகாதசி போன்ற புனித நாட்களில் உண்ணாவிரதமிருப்பது ஆசைகளை அடக்குவதற்கு உதவுகிறது. உண்ணாவிரதம் இருப்பது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது. இந்திரியங்கள், இந்திரியார்த்தங்களில் செல்லா வண்ணம் கட்டுப்படுத்தும் சக்தி உபவாசத்தின் மூலம் வருகிறது. உண்ணாவிரதம் கலியுகத்திற்குத் தவம் ஆகிறது. மனதையும் ஹிருதயத்தையும் அது சுத்தமாக்குகிறது. நாவடக்கம் மிக முக்கியமானது. உண்ணாவிரதம் நாவை அடக்கிப் பயில்வதற்கு ஒரு பயிற்சி ஆகிறது. உண்ணாவிரதத்தின் மூலம் ஜீரணக்கருவிகளுக்குநல்லஓய்வு கிடைக்கிறது. உண்ணாவிரதம் உடலைச் செப்பனிடுகிறது. உடலில் உள்ள விஷப் பொருள்கள் உண்ணாவிரதத்தின் மூலம் அழிக்கப்படுகின்றன. உலையில் இட்டுக் காய்ச்சுவதன் மூலம் தாதுப்பொருளில் உள்ள அழுக்கு நீங்கி சுத்தமான தாதுப் பொருள் கிடைக்கிறது. அங்ஙனம் உண்ணாவிரதத்தின் மூலம் உடலும் உள்ளமும் அழுக்குகள் நீங்கி சுத்தமாகின்றன.

பிரம்மச்சரிய விரதத்தை அனுஷ்டிக்கின்றவர்கள் புனிதமான நாட்களில் உண்ணாவிரதம் இருப்பது அவசியம். அவர்கள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும்போது மனம்அமைதியுற்றுத் தியானத்திற்குத் தகுதி உடையது ஆகிறது. உண்ணாவிரதத்தின்போது ஆழ்ந்து தியானம் செய்யலாம். இந்திரியங்களின் வாயிலாகச் செல்லும் மனதை உள்ளே இழுத்துத் தெய்வத்தின் மீது செலுத்தவேண்டும். உண்ணாவிரதம் இருக்கும்பொழுது உருக்கத்துடன்பிரார்த்தனை செய்யவேண்டும். "இறைவா! அறிவின்கண் என் உள்ளத்தைத் தூண்டு. மனம் கீழ்மையில் செல்லாதிருக்கும்படி என்னைக் காப்பாற்று. இறைவா! என்னைக் கைவிட்டுவிடாதே!" இங்ஙனம் பிரார்த்தனை செய். அப்பொழுது நீ தூய்மையும், தெளிவும், வலிவும் படைத்தவன் ஆவாய். ஏகாதசி நாளில் உண்ணாவிரதம் இருந்து இத்தகைய பிரார்த்தனை செய்துவா.

அடிக்கடி உண்ணாவிரதம் இருப்பதைத் தவிர்க்கவேண்டும். உண்ணாவிரதத்தின் மூலம் உடலைப் பலஹீனப்படுத்திக் கொள்ளக் கூடாது. உண்ணாவிரதத்தைத் துவக்கும் காலத்தில் இருபத்து நான்கு மணி நேரம் உண்ணாதிருக்கச் சாத்தியப்படாவிட்டால் பத்து மணி அல்லது பன்னிரண்டு மணி நேரத்திற்குப் பிறகு பால் பழங்கள் எடுத்துக் கொள்ளலாம். படிப்படியாக உண்ணாவிரத நேரத்தை அதிகரித்துக் கொண்டு வந்து இறுதியில் இருபத்து நான்கு மணி நேரத்திற்கு உண்ணாவிரதத்தை நீடிக்கலாம். உண்ணாவிரதத்தின் மூலம் உடலும் உள்ளமும் தூய்மை அடைவது கைகண்ட பலன். உண்ணாவிரதத்தின் மூலம் ஆத்மீகத் துறையில் மனது உறுதிபெற்றதாகிறது. வைத்தியர்களால் குணப்படுத்த முடியாத வியாதிகளை உண்ணாவிரதத்தின் மூலம் குணப்படுத்தலாம். மிகைபட உண்ணுதல் நோய்களுக்கு அடிப்படைக் காரணமாகிறது. மிகைபட உண்ணுதல் உறக்கத்தையும் உண்டுபண்ணுகிறது. உண்ணாவிரதத்தின் மூலம் அவ்விரண்டு குறைகளையும் நிவர்த்தி பண்ணலாம். உண்ணாவிரதத்தின்பொழுது தனித்திருந்து பழகவேண்டும். அப்போது சாதனையில் ஆழ்ந்து ஈடுபடவேண்டும். உண்ணாவிரதத்திற்குப் பின் கடினமான ஆகாரத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது. எளிதில் ஜீரணமாகக் கூடிய பழச்சாறு நல்

லது. மிகைபட உண்பவனுக்கும் குறைவுபட உண்பவனுக்கும் யோகம் இல்லை என்று கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. உண்ணாவிரதத்தின் மூலமாகவும், மனதை விஷயங்களில் இருந்து மீட்டு எடுப்பதன் மூலமாகவும், புலனடக்கம் பயிலுவதில் வெற்றி அடையலாம். ஏகாதசி அன்று உண்ணாது இருப்பதும், ஜபம் செய்வதும் மனதில் சத்துவகுணத்தை வளர்த்து உடலில் உள்ள கோளாறுகளைப் போக்கி, உடலையும், மனதையும் தியானத்திற்குத் தகுதி உடையவைகள் ஆக்குகின்றன.

ஏகாதசி விரதத்தின் மகிமையை விளக்கும் புராணக்கதை ஒன்று வருமாறு: அம்பரீஷன் என்னும் மன்னன் ஒருவன் இருந்தான். அவன் சிறந்த ஹரி பக்தனாக இருந்தான். அவன் வைகுண்ட ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து வந்தான். ஹரியின் அருளையும் பெற்றிருந்தான். அவன் ஒரு சமயம் மூன்று நாட்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்தான். அவன் உண்ணாவிரதத்தை முடிக்கும் தறுவாயில் துருவாச மகரிஷி அவனிடம் வந்தார். அவரை அவன் மரியாதையுடன் வரவேற்று உணவு அருந்துமாறு கேட்டுக்கொண்டான். துருவாச மகரிஷி உணவு அருந்தச் சம்மதித்து, உணவு அருந்துவதற்கு முன்பு நீராடுவதற்கு நதிக்குச் சென்றார். நீராடிவிட்டு ரிஷி திரும்பி வருவார் என்று அரசன் காத்திருந்தான். துவாதசி முடிவதற்குள் அவன் உண்ணாவிரதத்தை முடித்தாக வேண்டும். துவாதசி முடிவதற்கு இன்னும் சிறிது நேரம்தான் பாக்கியிருந்தது. துவாதசிக்குள் அவன் உண்ணாவிட்டால் விரதத்தில் இருந்து வழுவியவன் ஆவான். ரிஷி வருவதற்குள் உணவை ஏற்றுக்கொண்டால் ரிஷியை அவமானப்படுத்தியது ஆகும். விரதத்தையும் பங்கப்படுத்தாது, ரிஷியையும் அவமானப் படுத்தாது இருக்கச் சிறிது ஜலம் அருந்தினான். அவன் ஜலம் அருந்திய பிறகு துருவாசர் திரும்பி வந்தார். துருவாசர் தம் தெய்வீக சக்தியால் நிகழ்ந்ததை அறிந்து அரசன்மீது கோபம் கொண்டார். துருவாசர் தம் தலைமுடியிலிருந்து ஓர் உரோமத்தைப் பிடுங்கி அம்பரீஷனைக் கொல்லுமாறு அவன்மீது அதை ஏவினார். அரசன் இடத்தை விட்டு நகராமல் இருந்தான். விஷ்ணு சக்கரமானது துருவாசர் ஏவிய அழிக்கும் சக்தியை நாசமாக்கிவிட்டுத் துருவாசரையும் அழிக்கச் சென்றது. விஷ்ணு சக்கரத்திலிருந்து தப்பித்துக் கொள்ள துருவாசர் ஓடினார். விஷ்ணு சக்கரம் அவரை விடாது துரத்தியது. பிரம்மாவிடத்தும், சிவன் இடத்தும் சென்று உதவி கேட்டார். அவர்களிடமிருந்து அவருக்கு உதவி கிடைக்கவில்லை. "நீர் ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து வந்தவனுக்குத் துன்பம் செய்துவிட்டீர். ஹரியிடம்தான் நீர் சென்றாக வேண்டும்." இங்ஙனம் பிரம்மாவும் சிவனும் பகர்ந்துவிட்டார்கள். துருவாசர் ஹரியிடம் சென்றபொழுது ஹரி பகர்ந்ததாவது: "நான் என் பக்தனைச் சார்ந்து இருக்கிறேன். பக்தனுடைய ஹிருதயம் என்னைக் கட்டுப்படுத்தி இருக்கிறது. பக்தனுடைய அன்புக்கு நான் கட்டுப்பட்டுக் கிடக்கிறேன். எனவே என் பக்தன் அம்பரீஷனிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக்கொள். அவன் உன்னைக் காப்பாற்றுவான்." துருவாசர் அம்பரீஷனிடம் சென்று தம்மைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டார். அம்பரீஷன் துருவாச ரிஷியை விட்டுவிட்டுத் திரும்பிப் போய்விடு என்று விஷ்ணு சக்கரத்தைப் பிரார்த்தித்துக்கொண்டான். விஷ்ணு சக்கரம் பக்தனின் பிரார்த்தனைக்குக் கட்டுப்பட்டுத் திரும்பிச் சென்று விட்டது. துருவாசர் காப்பாற்றப் பட்டார். ஏகாதசி விரதத்தின் மகிமையும் பக்தனுடைய மகிமையும் இத்தகையவையாகும்.

சந்திரனிடத்துப் பிறைகள் வளர்வதும் தேய்வதும் போன்று, நம் உடலிலும் குண்டலினி சக்தி மேலும் கீழும் போய்க்கொண்டு இருக்கிறது. சந்திரனின் வளர்பிறையில் வரும் பதினோராவது பிறையில் வைகுண்ட ஏகாதசி வருகிறது. அன்று நம் உடலிலும், குண்டலினி சக்தி மேலோங்கி வருகிறது. அன்று உபவாசம் இருந்து தியானம் செய்தால் ஆத்மீகத் துறையில் விரைவில் முன்னேறலாம். மார்கழி மாதம் தேவர்களுக்குரிய பிராம்மமுகூர்த்தமாகிறது. மார்கழிமாதம் வளர்பிறையில் வரும் வைகுண்ட ஏகாதசி தனிச்சிறப்புடையது. எனவே வைகுண்ட ஏகாதசி விரதத்தைச் சிரத்தையோடு அனுஷ்டித்து ஹரியின் அருள் பெற்றுச் சாசுவத இன்பத்தையும், சாந்தியையும் மக்கள் பெறுவார்களாக.

ஸத்தியம்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

(1964 ஆம் ஆண்டு திருப்பராய்த்துறை தபோவனம் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

ஆத்மா ஸத்தியத்தால் அடையப்பெறுவது ஆகின்றது. நம்முடைய தேசிய லட்சியம் "ஸத்தியமேவ ஜயதே" என்பதாகும். பொய்மை என்றைக்கும் வெற்றி பெருது. ஸத்தியமே வெற்றிபெறும். இந்த அடிப்படை உண்மையை யாரும் மாற்றிவிட முடியாது. ஸத்தியமே என்றைக்கும் வெல்லும் என்பது இயற்கைத் தத்துவம். சர்வேசுவரனுடைய சொரூபம், ஸத்திய சொரூபமாகும். ஸத்தியம் வேறு, பரம்பொருள் வேறன்று. பரம்பொருளை அறிந்துகொள்வதற்கு ஸத்தியம் மிக எளியதாக இருக்கின்றது. ஸத்தியத்தை விளக்குவதற்கு தமிழில் மூன்று சொற்கள் இருக்கின்றன. உள்ளத்தில் இருப்பதை உள்ளபடி சொல்லுவது உண்மை. சரீரத்தால் முறைபிறழாது செய்கின்ற செயல் மெய்மை. எண்ணுகிற எண்ணத்துக்கும் செய்கிற செயலுக்கும் ஒப்பப் பேசுவது வாய்மை. உண்மை, வாய்மை, மெய்மை இம்மூன்றும் சேர்ந்தது ஸத்தியமாகும்.

மனதில் எண்ணுவதைத்தான் வாயால் பேசுவது என்பதும், பேசுவதுபோன்று செயல் புரிவதும், ஸத்தியத்திற்குப் பூரண விளக்கங்கள் ஆகின்றன. ஸத்தியம் பேசுவது மிகவும் எளிது. ஸத்தியத்தைத் தெரிந்து கொள்வதும் எளிது. ஸத்தியம் அல்லாததைச் சொல்லுவதோ, தெரிந்துகொள்வதோ கஷ்டமானது.

ஒருசமயம், பெரியவர் ஒருவரைக் கண்டு பொதுநலத்திற்காக நிதி திரட்டுவதற்கு ஒருவர் சென்ருர். அப்பெரியவர் தம்மிடம் நிதி திரட்டுவதற்காக வருகிருர் என்பதை முன்கூட்டியே தெரிந்து இருந்தார். நிதி திரட்டுவதற்காக வருகிறவரைப் பார்த்ததும், வீட்டில் இருந்த குழந்தையை அழைத்தார். அக்குழந்தையிடம் அவர் பகர்ந்ததாவது: "நீ திண்ணையில் உட்கார்ந்து விளையாடிக்கொண்டிரு. உன்னிடம் வந்து யாராவது அப்பா வீட்டில் இருக்கிருரா என்று கேட்டால், அப்பா வீட்டில் இல்லை என்று சொல்லிவிடு.'' குழந்தையும் சரி என்று ஒத்துக்கொண்டது. முன்புறத் திண்ணையில் குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. வசூலிக்கச் சென்றவர், "அப்பா எங்கே?" என்று குழந்தையைக் கேட்டார். "அப்பா வீட்டில் இல்லை, என்று அப்பா சொல்லச் சொன்னுர்'' என்று குழந்தை கூறியது. குழந்தை சொன்னது முற்றிலும் உண்மை. தந்தை என்ன சொன்னுரோ அதை அப்படியே குழந்தை சொல்லிவிட்டது. தந்தை குழந்தைக்குப் பொய் பேசும்படி சொன்னுர். ஆனல் தந்தை எடுத்துக்கொண்ட முயற்சி பலிக்கவில்லை. குழந்தை உண்மையைச் சொல்லிவிட்டது. குழந்தையைப் பொய்சொல்ல வைப்பதற்குத் தந்தை மிகவும் கஷ்டப்பட்டார். ஆனல் குழந்தைசிரமம் இல்லாது உண்மையைச் சொன்னது. உண்மை சொல்வது எவ்வளவு சுலபம் என்பதும், பொய் சொல்வது எவ்வளவு கஷ்டம் என்பதும், மேற்கூறிய நிகழ்ச்சியிலிருந்து தெரிகிறது.

பொய் பேசிப் பழகும் பயிற்சி இன்றைக்கு வாழ்க்கையில் சர்வ சாதாரணமாக நிகழ்ந்து வருகிறது. மெய் பேசுவதற்குப் பயிற்சி வேண்டியதில்லை. பொய் பேசுவதற்குப் பயிற்சி வேண்டும். நீதி மன்றத்தில் உண்மையைச் சொல்வதற்குச் சொல்லித்தர வேண்டியதில்லை. நீதி மன்றத்தில் பொய் பேசுவதற்குத்தான் வழக்கறிஞர் பயிற்சி கொடுப்பார். சிரமப் பட்டுப் பொய் பேசினலும் கடைசிவரை பொய்யை ஸ்தாபிதம் செய்ய முடியாது. பொய் எப்படி இருந்தாலும் வெளியாகி விடும். பொய்யை, மெய் என்று நிரூபிப்பதற்கு எவ்வளவு முயன்ருலும் அது பொய்யாகத்தான் போய்விடும். தாயுமானவர் பகர்வதாவது :

"பொய்யெல்லாம் ஒன்ருய்ப் பொருத்திவைத்த
பொய்யுடலை,
மெய்யென்ருல் மெய்யாகி விடுமோ பராபரமே ?"

சரீரத்தை மெய் என்று சொல்லுகின்ருேம். மங்களச் சொல்லாக இருக்கட்டும் என்று சரீரத்தை மெய் என்று அழைக்கின்ருேம். ஆனல், பொய்யெல்லாம் ஒன்ருகப் பொருத்திவைத்து இருப்பது சரீரமாகும். ஒருகாலத்தில் இருந்து இன்னெரு காலத்தில் எது இல்லாது போய்

விடுகிறதோ அது பொய் எனப்படும். பல ஆண்டுகளுக்கு முன்பு இந்தச் சரீரம் இல்லை. பல ஆண்டுகளுக்குப் பிறகு இச்சரீரம் இருக்கப் போவதில்லை. இந்தச் சரீரம் பஞ்ச பூதங்களால் ஆனது. பஞ்ச பூதங்களும், ஒருகாலத்தில் இருந்து மற்ெறாரு காலத்தில் இல்லாது போய்விடுகின்றன. எண்ணம், உணர்ச்சி, கருவிகரணங்களையெல்லாம் வைத்து இச்சரீரத்தை அமைத்து வைத்திருக்கின்றோம். அவைகள் யாவும் ஒருகாலத்தில் இல்லாது போய் விடுகின்றன. ஆகையால், பொய் அனைத்தையும் ஒன்றாய்ப் பொருத்திவைத்த சரீரத்தைமெய் என்று சொன்னால் மெய்யாகாது. உப்பு என்று சொல்வதற்குப் பதிலாகச் சிலர் சர்க்கரை என்று சொல்வார்கள். கறுப்பு ஆட்டை வெள்ளாடு என்று சொல்வார்கள். அந்த முறையில் பொய்யுடலை மங்களச் சொல்லில் மெய் என்று கூறுகிறோம்.

ஸத்தியத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமாக மனிதன் மேல்நிலைக்குப் போகின்றான். உண்மையைக் கடைப்பிடிப்பவன் மேல்நிலை அடைகின்றான். உண்மையிலிருந்து பிசகுபவன் கீழ் நிலை அடைகின்றான்.

“தன்நெஞ்சறிவது பொய்யற்க, பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்”

என்பது குறள்.

நெஞ்சம் அறிந்திருப்பதை உணரவும், சொல்லவும், செய்யவும் ஆரம்பித்தால் அது ஸத்தியம் எனப்படும். நெஞ்சம் அறிந்திருப்பதற்கு மறுத்து, உணரவும், சொல்லவும் செய்தால் அது குற்றம் உடையதாகும். அப்படி நடந்து விடுகிறபொழுது நம் நெஞ்சே நம்மைச் சுட்டுவிடும். சித்தத்தில் உள்ள அழுக்குகள் நீங்கி பரிசுத்தமாகி விட்டால் உண்மையை நேரே தரிசிக்கலாம். பொய் பேசும்போது மனச்சாட்சி தீய்ந்து போய் உள்ளம் உண்மையைக் காணத் தகுதியற்றதாகப் போய்விடுகிறது. பொய்யைப் பின்பற்றுவதால் சொரூபம் தேய்ந்து, மறைந்து, கெட்டுப்போய்விடுகிறது. பொய்யினால் அத்தகைய விளைவு உண்டாகிறது.

பரம்பொருளை அடைய விரும்புகின்றவர்கள் ஸத்தியம் பேசுவது அவசியம். பிரபஞ்ச வாழ்க்கையை வெற்றிகரமாகவும் மங்களகரமாகவும், எல்லாச் சம்பத்துக்களுடன் கூடியதாகவும் நிறைவேற்ற விரும்புகின்றவர்கள் ஸத்தியம் கடைப்பிடித்தாகவேண்டும். ஒருவருடைய நெஞ்சு அறிவது எதுவோ அது ஸத்தியம். “அப்பா வீட்டில் இல்லை எனச் சொல்லிவிடு” எனக் குழந்தையிடம் சொல்லியபோது, அது தன் நெஞ்சுக்குள் அறிந்த பிரகாரம் சொல்லிவிட்டது. வீட்டிற்குள் இருந்து கொண்டே இல்லை என்று கூறும்படி சொல்லியபொழுது அவருடைய நெஞ்சு அவரைச் சுட்டது. அதைப் பொருட்படுத்தாது அவர் நடந்துகொண்டமையால் அவருடைய மனச்சாட்சி அழுக்குப் படிந்தது ஆயிற்று. அவர் அப்படிக் குழந்தையிடம் சொல்லியதற்குப் பதிலாக நன்கொடைக்கு வந்தவரை நேரில் சந்தித்து, நன்கொடை தருவதற்கு இஷ்டமில்லை எனக்கூறியிருந்தால் அவருடைய நெஞ்சத்தில் தெளிவு ஏற்பட்டிருக்கும். அங்ஙனம் சொல்வதற்கு எல்லாருக்கும் துணிவு வருவதில்லை. அப்படித் துணிவு வராததால் பொய் சொல்லித் தப்பித்துக்கொள்ளலாம் என்று எண்ணித் தங்களுக்குத் தாங்களே பெரிய கேட்டை உண்டுபண்ணிக்கொள்கிறார்கள். அப்பா வீட்டில் இல்லை என்று குழந்தையைச் சொல்லும்படி தூண்டியதன் விளைவாகக் குழந்தையைக் கெடுத்ததோடு தம்முடைய மனதையும் கெடுத்துக்கொண்டார். வீட்டிற்குள் இருந்துகொண்டு இல்லை எனச் சொன்னவர் நடத்தை நன்கொடைக்கு வந்தவருக்குத் தெரிந்துவிட்டால், அவர்மீது இருந்த நல்ல அபிப்பிராயம் போய்விடும். பொய் சொன்னதால் தாமும் கெட்டுப்போய், குழந்தையையும் கெடுத்து, மற்றவர்களுடைய மனதையும் கெடுத்தவர் ஆகிறார். பொய்யை, மெய்யென்று நிரூபிப்பதற்குப் பல பொய்களைப் புனைந்து சொல்லவேண்டும். எனவே கேடு பன்மடங்கு பெருகுகிறது.

உண்மைகள் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. ஆத்மா பலஹீனனால் அடையப்பெறுவது அன்று என்பது உபநிஷதம். வீட்டிற்குள் இருந்துகொண்டு இல்லை என்று சொல்லுவது பலவானுடைய செயலன்று. அப்படிச் சொல்லுபவன் மனவுறுதி படையாத கோழைமனிதன் ஆகின்றான். நன்கொடை தர எனக்கு இஷ்டம் இல்லையென்று சொல்லுவதற்கான மன உறுதி

அவரிடம் இல்லை. ஸத்தியமே பேசிக்கொண்டு வந்தால் ஸத்திய சொரூபமாக இருக்கின்ற பரமனை அடைவது சாத்தியம். பிரபஞ்ச வாழ்க்கையிலும் ஸத்தியம் பேசுபவனுக்கு நஷ்டம் ஒன்றும் வந்துவிடாது. இகம், பரம் இரண்டுக்கும் ஸத்தியத்தைக் கடைப்பிடிப்பது சிறந்த சாதனமாகிறது. ஸத்தியத்தைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று மகாத்மா காந்தி தீர்மானம் செய்தார். அவர் ஹரிச்சந்திரன் நாடகத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் நேரிட்டது. அந்நாடகத்தைப் பார்த்த பிறகு அதைச் சரியாக ஆராய்ச்சி பண்ணினர். அப்படி ஆராய்ச்சி செய்தபோது ஸத்தியத்தை மனிதன் எப்படி அனுஷ்டிக்க வேண்டுமென்பது அவருக்குத் தெளிவாக விளங்கியது. காந்தியடிகள் சிறு வயதாக இருக்கும்போதே ஹரிச்சந்திரனைப் நாடகத்தைப் பார்த்தார். ஹரிச்சந்திரனைப் போன்று தாமும் ஸத்தியத்தை வாழ்க்கையில் கடைப்பிடிப்பது என்று அச்சிறுவயதிலேயே தீர்மானம்செய்தார். அவர் செய்த தீர்மானப் படி தம் வாழ்க்கையை நடாத்திவந்தார். அதன் விளைவாக வாழ்வில் எத்தகைய மகோன்னத நிலையையடைந்தார் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஸத்தியத்தைக் கடைப்பிடித்துக் கெட்டுப்போனவர்கள் யாரும் இல்லை. பொய்யைக் கையாண்டு வெற்றி அடைந்தவர்களும் இல்லை.

ஸத்தியத்தை யார் கடைப்பிடித்தாலும் அவருக்குக் கேடு வந்துவிடாது. ஆனால் ஸத்தியத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்கு வாழ்க்கையில் சோதனைகள் பல வரும். சோதனைகளிலிருந்து அவர்கள் தப்பிக்க முடியாது. உண்மையில் ஸத்தியவிரதத்தைக் கடைப்பிடிக்கிறார்களா என்பதை அவர்களுக்கு வருகிற சோதனைகள் விளக்கிக் காட்டும். ஸத்தியவிரதம் கடைப்பிடிக்க விரும்புகிறவர்கள் சோதனைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். ஹரிச்சந்திரனுக்கு வந்த சோதனைகளைவிட மகாத்மா காந்திக்குக் கஷ்டமான சோதனை வந்தது. மகாத்மா காந்தி ஸத்தியத்தினின்றும் பிசகாதவர் என்பது ஆங்கில அரசாட்சிக்குத் தெரியும். ஆங்கில அரசாங்கம் சில நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுப்பது மனுஷத்தன்மைக்குக் கீழான விலங்குத் தன்மை என்று ஆங்கில அரசாங்கத்தைத் தாக்கி காந்தி கட்டுரை எழுதினர். காந்தி அடிகளோடு இராஜப்பிரதிநிதிகளும், சேனைத் தலைவர்களும் தொடர்பு வைத்து இருந்தார்கள். அவர்கள் காந்தியடிகளிடம் பகர்ந்ததாவது: "சில புள்ளி விவரங்களை நாங்கள் உங்களுக்குச் சொல்லுகின்றோம். நீங்கள் அவைகளை உங்களோடு வைத்துக் கொள்ள வேண்டும். புள்ளி விவரங்களை நீங்கள் அறிந்த பிறகு அவற்றை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. இந்த நிபந்தனைக்குச் சம்மதித்தால் நாங்கள் எங்களுக்குத் தெரிந்த இரகசியங்களைச் சொல்லுவோம்." விசுவாமித்திரர் "நீ இந்த இராஜ்யத்திற்குள் பணம் திரட்டக்கூடாது" என்று ஹரிச்சந்திரனுக்குப் பெரிய நிபந்தனை ஒன்றைப் போட்டார். அதைவிடப் பெரிய நிபந்தனையாக அவர்கள் காந்தியடிகளுக்கு நிபந்தனை போட்டார்கள். காந்தி அடிகளும் அதற்கு இசைந்து அவர்களிடம் இருந்து சில புள்ளி விவரங்களைத் தெரிந்து கொண்டார். ஆனல் அவர்களுக்கு வாக்குக் கொடுத்த பிரகாரம் அவர் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அப்படி அவர் பயன்படுத்தாது இருந்தது அவருக்கு ஏற்பட்ட பெரிய சோதனையாகும். பெரியநிலை அடைந்தவர்களுக்கு அத்தகைய சோதனைகள் வரலாம். சாதாரணமான நமக்கு அத்தகைய கஷ்டமான சோதனைகள் வரும் என்று பயப்படவேண்டியதில்லை. குழந்தைக்கு எப்படி ஸத்தியத்தைப் பேசுவதில் எவ்விதச் சிரமமும் இல்லையோ, அப்படி நாம் எவ்விதச் சிரமம் இல்லாது ஸத்தியத்தைக் கடைப்பிடிக்கலாம். ஸரளசுபாவம் படைத்தவர் தெய்வத்தைச் சுலபத்தில் அறிவார்கள் என்று சொல்லப்படுகிறது. குழந்தை போன்று தூய உள்ளம் படைத்திருப்பதை ஸரளசுபாவம் என்று சொல்லலாம். குழந்தை போன்று தூய உள்ளமும், பொய் பேசாத இயல்பும் உடையவர்கள் தெய்வத்தின் தரிசனம் பெறுகிறார்கள்.

ஸ்ரீ இராமகிருஷ்ணருடைய வாழ்க்கையில் ஸத்தியத்தைப்பற்றிய ஒரு நிகழ்ச்சி ஏற்படுகிறது. அவர் சாதனைகளையெல்லாம் பூர்த்தியாகச் செய்து முடித்தார். இராமகிருஷ்ணர் எல்லாச் சாதனங்களையும் பூர்த்தியாகச் செய்து முடித்தபின் கடைசியாகத் தம்மிடத்து உள்ள

வற்றை எல்லாம் அம்பிகையின் திருவடியில் சமர்ப்பணம் பண்ணினர். எல்லாவற்றையும் சமர்ப்பணம் பண்ணின அவருக்கு ஸத்தியத்தை மட்டும் ஒப்படைக்க முடியவில்லை. அவர் அம்பிகையிடம் பகர்ந்ததாவது: "தாயே, என்னிடத்தில் உள்ளவற்றையெல்லாம் உன்னிடம் ஒப்படைத்தாய் விட்டது. ஆனல் ஸத்தியத்தை ஒப்படைக்கத் திரிகரணங்களும் மறுக்கின்றன. ஸத்தியத்தைத் தியாகம் பண்ண என்னல் முடியவில்லை." சிவபெருமான் தியாகராஜனுக இருக்கின்ருர். அனைத்தையும் துறக்கின்ற இடத்துத்தான் நாம் தெய்வத்தை அடைகின்ரேம். 'அற்றது பற்று எனில் உற்றது வீடு' என்பது கோட்பாடு. நம்மிடத்தில் உள்ள எல்லாவற்றையும் இறைவனுக்குக் கொடுத்தான பிறகு நாம் வீடு பெறுகின்ரேம். ஸ்ரீ இராமகிருஷ்ணர் தம்மிடம் உள்ள எல்லாவற்றையும் இறைவனுக்குக் கொடுத்துவிட்டார். ஆனல் ஸத்தியத்தை அவரால் கொடுக்க முடியவில்லை. நாம் அதற்கு மாருக ஸத்தியத்தைக் கொடுக்க ஆயத்தமாக இருக்கின்ரேம். மற்றவற்றைத் தியாகம் பண்ண நாம் ஆயத்தமாக இல்லை. இராமகிருஷ்ணர் ஸத்தியத்தைக் கொடுக்க முடியவில்லை என்று சொன்னதன் கருத்தைச் சிந்திக்கவேண்டும். ஸத்தியத்தைக் கொடுத்து விட்டால் அஸத்தியமாகப் போய்விடுகின்ரேம். நம்மிடத்து ஸத்தியப்பொருள் இல்லை என்பது ஆகிவிடும். ஸத்தியம் வேறு பரம்பொருள் வேறன்று.ஸத்தியம், ஞானம், ஆனந்தம் என்று பிரம்மத்தைச் சொல்கின்ரேம். பிரம்மம் ஸத்திய சொருபமாக இருக்கிறது. ஸத்தியத்தைக் கொடுத்து விட்டால் மெய்ப்பொருள் போய் விட்டது என்பது ஆகிறது. ஆகையால் ஸத்தியத்தைக் கொடுக்க முடியவில்லை என்ருர் பரமஹம்சர்.

இக்காலத்தில் இரண்டு பெரியவர்கள் ஸத்தியத்தைச் சோதனை செய்து பார்த்தார்கள். மகாத்மா காந்தி ஸத்தியத்தை விட்டுப் பிசகாது இருந்தார். ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஸத்தியத்தைத் தியாகம் பண்ண முடியாதவராக இருந்தார். எந்தப் பெரியாருடைய ஜீவிதத்தை ஆராய்ந்து பார்த்தாலும் அவர் ஸத்தியத்திலிருந்து பிசகாதவராக இருந்தார் என்பது விளங்கும்.

தந்தையை ஸத்திய ஸங்கல்பன் ஆக்கும் பொருட்டு இராமன் பதினன்கு ஆண்டு காலம் வனவாச வாழ்க்கையை ஏற்றுக்கொண்டார். தந்தை சொன்ன சொல் தவருதவராக வேண்டும் என்பதற்காக மகன் வனவாச வாழ்க்கை ஏற்றுக்கொண்டது மகன் தந்தைக்கு ஆற்றும் கடமை எவ்வளவு பெரியது என்பதை விளக்குகிறது. இராமனுக்கு ஸத்தியத்தில் அவ்வளவு பெரிய விசுவாசம் இருந்தது. பெரியவர்கள் எல்லாருடைய ஜீவிதத்திலும் ஸத்தியம் தான் ஆதாரமாய் இருக்கிறது. ஸத்தியத்திலிருந்து பிசகாது இருக்கும் அளவு மனதுக்கு உறுதி வருகிறது. ஸத்தியத்திலிருந்து பிசகுகின்ற அளவு மனதின் வலிவு குன்றுகிறது. ஸத்தியத்தைக் கடைப்பிடிக்கும் போது சோதனைகள் வருகின்றன. அச்சோதனைகளை யெல்லாம் சமாளித்து ஸத்தியத்திலிருந்து பிசகாது இருந்தால் மன உறுதி மேலும் அதிகரிக்கிறது.

ஸத்தியத்தை நாம்வாழ்வில் எப்படிக் கடைப்பிடிக்கவேண்டுமென்பதை ஆராய்வோம். ஹரிச்சந்திரன்மீது விசுவாமித்திரர் பல குற்றங்களைச் சாற்றுகிருர். "நடனமாடிய இருபெண்களுக்கு விருப்பமானதைத் தருகிறேன் என்று நீ சொன்னய். ஆனல் 'இக்ஷ்வாகு' வம்சத்திற்குரிய வெண்கொற்றக்குடையை அவர்கள் கேட்ட பொழுது அவர்களுக்கு அதைத்தர நீ மறுத்து விட்டாய். ஆகையால் நீ பொய்யன்." இங்ஙனம் கூறி விசுவாமித்திரர் ஹரிச்சந்திரன் மீது முதல் குற்றம் சாற்றினர். "இக்ஷ்வாகு வம்சத்திற்குரிய வெண்குடை என்னுடைய உடைமையன்று. அது பரம்பரையாக வந்த இக்ஷ்வாகு வம்சத்தின் நீதி பிறழாத அரசாட்சிக்குச் சின்னமாகிறது. அவ்வெண்கொற்றக் குடையைத் தகுதியற்றவர்களிடம் கொடுத்து விட்டால் இக்ஷ்வாகு வம்சத்தின் ஸத்தியத்தையும், தூய்மையையும் பொய்யாக்கியது ஆகும். ஆகையால் நான் அதைக் கொடுக்கவில்லை" என்று ஹரிச்சந்திரன் பகர்ந்தான். கடவுள் 'கற்பதரு' என்று அழைக்கப்படுகிருர். கற்பதருவின் கீழ் இருந்து நாம் விரும்பியதைப் பெறலாம். ஆனல் நாம் எதைப் பெற விரும்புகிரேமோ, அதைப் பெறுவதற்கு முதலில் நம்மைத் தகுதியாக்கிக் கொள்ளவேண்டும். நம்மைத் தகுதியாக்கிக் கொள்ளாது தெய்வத்திடம் எதையும் கேட்கக் கூடாது. நம்மைத்தகுதி உடையவராகச் செய்து

கொண்டால் தெய்வத்திடம் இருந்து நமக்குத் தேவையானது வந்துகொண்டே இருக்கும். “பொய் வார்த்தை சொல்லிலோ திருவருட்கு அயலுமாய்ப் புன்மையேன் ஆவன் அந்தோ!” என்று தாயுமானவர் பகர்கிருர். நம்மைப் பக்குவப்படுத்தித் தகுதி உடையவர்களாகச் செய்துகொண்டு தெய்வத்திடம் விண்ணப்பிக்க வேண்டும். நடனப்பெண்கள் வெண்கொற்றக் குடையைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்கள். எனவே ஹரிச்சந்திரன் அவர்களுக்குத் தரமாட்டேன் என்று சொன்னது அவன் பொய் சொன்னது ஆகாது. சந்தர்ப்பத்திற்கேற்றபடி நாம் விவேகத்தைக் கையாண்டு நடந்து கொள்ளவேண்டும். நம்முடைய விவேகத்தைக் கையாண்டு பொருள்களைத் தக்கவர்களிடத்தில் ஒப்படைக்கவேண்டும். பொருளுக்கு உரிய தக்கவர்கள் அமையாவிட்டால் சொன்ன சொல்லை மீறியும் நடந்து கொள்ளுவதில் குற்றமில்லை.

“நடனப்பெண்கள் தங்களை மணந்து கொள்ளவேண்டுமென்று கேட்டபொழுது, ஏன் நீ அவர்களை மணந்துகொள்ள மறுத்தாய்? அப்படி நீ மணந்துகொள்ள மறுத்ததால் சொன்ன சொல் தவறியவன் ஆகின்ருய்” என்று ஹரிச்சந்திரன் மீது விசுவாமித்திரர் இரண்டாவது குற்றம் சாற்றினர். “யார் எதைக் கேட்டாலும் தந்து விடுவது முறையன்று. தனக்குப் பயன்படுகின்ற ஒன்றைப் பிறருக்குக் கேடு இல்லாமல் கேட்பதுதான் முறை. அப் பெண்கள் கேட்டது முறைதவறிய செயலாகும். ஆகையால் அவர்கள் வேண்டுதலை மறுத்ததின் வாயிலாக நான் பொய் பேசியவன் அல்லன்” என்று ஹரிச்சந்திரன் பகர்ந்தான். எது வேண்டுமென்ருலும் செய்து விடுவது மெய்யா காது. ஹரிச்சந்திரனுக்கு வந்த சோதனை எல் லார்க்கும் வராது. அவரவரின் தரத்திற்கேற்பச் சோதனைகள் வந்து அமையும். இன்றைக்கு அரசாங்கத்தினர் கொண்டுவந்துள்ள சட்ட திட்டங்கள் மக்களை உண்மையாக நடந்து கொள்ள உதவி செய்வதில்லை. இன்றைக்குச் சட்டதிட்டம் பொய் பேசுவதற்கு தான் துணை செய்கிறது. அடிப்படைக் குற்றம் சட்டதிட் டத்தில் இருக்கிறது. கட்டுப்பாடு இருக்கும் காலத்தில் சட்டம் ஒன்று கொண்டுவந்தார்கள். அந்தச் சட்டப் பிரகாரம் அரிசிக் கட்டுப்பாடு இருந்தது. அவர்கள் சட்டப்படி குருகுலத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையைக் கொடுத் தால் குருகுலத்தினர் ஒரு வேளை உணவு தான் உண்ணமுடியும். மற்ற இருவேளைகள் பட்டினிதான் இருக்கவேண்டும். ஏன் அப்படிச் சட்டம் கொண்டு வந்தீர்கள் எனக் கேட்ட பொழுது நீங்கள் சட்டப்படி கணக்குக் கொடுத்துவிட்டுச்சட்டத்திற்கு ஒத்ததாக எழுதி வைத்து விட்டு ஏதாவது செய்து கொள்ளுங்கள் என்று பொய்சொல்ல வழிகாட்டித் தந்தார்கள். அப்படிப் பொய் சொல்லாவிட்டால் இருவேளை பட்டினியாக இருக்க நேரிடும். வியாபாரத்தில் உண்மையான கணக்கு எழுதி வைத்தால் அகப் பட்டுக்கொள்வார்கள். வியாபாரமே அவர் களால் செய்யமுடியாது. அப்படிச் சில சட்டங் களைப் போட்டு நிர்ப்பந்தம் பண்ணிஞல் சூழ் நிலைக்கு ஏற்ற பிரகாரம் நடந்துகொள்ளுதல் வேண்டும். “நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை, தன்நெஞ்சறிவது பொய்யற்க” என்ற வாசகங்களைக் கருத்தில்கொள்ளுதல் வேண்டும். ஒரு பொருளை வாங்கி வைத்திருந்து அதன் விலை நான்கு மடங்கு அதிகரித்து விட்டால் வருகின்ற லாபத்தை என்ன செய்வது என்று ஐயம் எழலாம். தங்களுக்குரிய இலாபத்தை எடுத்துக்கொண்டு பாக்கி வரும் இலாபத்தைப் பல நற்காரியங்களுக்குப் பகிர்ந்து கொடுக்க லாம். எல்லா இலாபத்தையும் தனக்குரிய தென்று எடுத்துக் கொண்டால் ஸத்தியத்தி னின்று பிறழ்வது ஆகிறது. நம் நெஞ்சு அறிய நன்னெறியிலிருந்து பிசகக்கூடாது. நமக்குரி யதை ஏற்றுக்கொள்வதற்கு நமக்குச் சுதந்திரம் உண்டு. நமக்கு உரியதற்கு மேல் பேராசை பிடித்து இருக்கிற இடத்துப் பொய்சொல்லித் தான் ஆகவேண்டும். அப்படிப் பொய்பேசுகிற வர்களுக்கு அவர்கள் நெஞ்சே அவர்களைச் சுடும். ஸத்தியத்தை அஸ்திவாரமாகவைத்துக் கொண்டு சேர்க்கின்றசெல்வம் நிலைத்திருக்கும். பொய்யை அஸ்திவாரமாகக்கொண்டு சேர்க் கின்றசெல்வம் விரைவில் அவர்களை விட்டுப் போய்விடும். பொய்யை அஸ்திவாரமாகக் கொண்டுசேர்க்கின்ற செல்வம் கனவு போன்று வந்து கனவு போன்று போய்விடும். பொய் ஒருநாளும் மனிதன் விருத்தி அடைவதற்கு

இடம் தருவதில்லே. நம் உலக வாழ்வில் ஸத்தியத்தைக் கையாண்டாகவேண்டும். ஸத்தியத்தைக் கையாண்டு ஆத்மபரிபாகம் அடைந்து வரவேண்டும்.ஸத்தியத்தைக் கையாளும்போது தான் பலவான்கள் ஆகமுடியும். ஆத்மீகத் துறையிலும், ஒழுக்கத்துறையிலும் முன்னேற்ற மடைவதற்கு ஸத்தியம் தேவை. ஸத்தியத்திலிருந்து பிசகாது இருப்பவர்களுக்கு மன உறுதிப்பாடு வருகிறது. காற்றடிக்கும் பொழுது மரம், செடி, கொடிகள் அசைகின்றன. காற்றில் அசைந்து, அசைந்து வளருகின்ற மரங்கள் உறுதி பெறுகின்றன. ஸத்தியத்தை அனுஷ்டிக்கும்போது சோதனைகள் வருகின்றன. அச்சோதனைகளை எல்லாம் தாங்குவதற்குரிய மனவுறுதி ஸத்தியத்தில் நிலைபெறுபவர்களுக்கு வருகிறது. ஹரிச்சந்திரனுக்குச் சோதனைக்குமேல் சோதனை வந்தது. கடைசி வரையில் அச்சோதனைகளை மன நடுநிலையோடு இருந்து ஏற்றுக்கொண்டான். வாழ்க்கையில் வரும் துக்கத்தை ஏற்றுக்கொண்டு ஸத்தியத்தினின்றும் பிசகாது இருந்தவன் ஹரிச்சந்திரன்.

நாம் நம்மைப் பண்படுத்துவதற்காக உலகுக்கு வந்து இருக்கின்றோம். இங்குப் பெற்ற செல்வத்தைச் சாகும்பொழுது உடன் கொண்டு போகமுடியாது. இதுவரையிலும் அப்படிக் கொண்டுபோனவர்கள் யாரும் இல்லே. சாகின்றவர்கள் கொண்டுபோய் இருந்தால் மீதி இருக்கமுடியாது. நாம் சம்பாதித்தவற்றை எல்லாம் இங்கேதான் விட்டுப் போயாகவேண்டும். இவ்வுலக வாழ்க்கையில் நாம் அடைகின்ற பண்பாடுதான் நம்முடன் வருகின்றது. பண்பாட்டைத் தவிரமற்றவற்றை எல்லாம் நாம் விட்டுவிட்டுப் போயாகவேண்டும். இவ்வுலக வாழ்வில் பண்பாட்டை ஒதுக்கிவிட்டுச் செல்வத்தைச் சேகரிப்பவர்கள் சாகும்பொழுது பண்பாடு, செல்வம் ஆகிய இரண்டையும் இழந்தவர்கள் ஆகின்றார்கள். கேடடைந்த நிலேயில் உலகத்தை விட்டுப் போவது அவர்கள் அடைந்த நஷ்டம் ஆகிறது. பொருள் எவ்வளவு விரயம் ஆனாலும் பண்பாட்டிலிருந்து பிசகாதவர்கள் சாகும்பொழுது பெரிய லாபம் அடைந்தவர்கள் ஆகின்றார்கள்.பொருளை இழக்கின்றவர்கள் பொருளை மீண்டும் பெற்றுவிடலாம். வியாபாரத்தில் நொடித்துப் போனவர்கள் மறுபடியும் மேல்நிலேக்கு வந்து இருக்கிறார்கள். ஸத்தியம் தவறாது இருப்பவர்களுக்கு என்றைக்கும் நஷ்டமில்லே. ஸத்தியத்திலிருந்து தவறியவர்களுக்கு என்றைக்கும் லாபம் இல்லே. பூலோக வாழ்வை வாழ்வாங்கு வாழ்கின்றவர்கள் ஸத்தியத்திலிருந்து பிசகாது அதைக் கடைப்பிடித்தாக வேண்டும்.

ஸத்தியத்தைத் தவறாது கடைப்பிடிப்பவர்களுக்கு மனத்தெளிவு உண்டாகிறது. மனத்தெளிவடைந்து வரும்பொழுது மெய்ப்பொருள் காட்சி உண்டாகிறது.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்பது வள்ளுவர் வாக்கு.

காணப்படும் பொருள்களின் யதார்த்த சொருபத்தை உள்ளபடி பார்க்கின்றவன் அறிவு படைத்தவன் ஆகின்றான். காணப்படும் பொருள்கள் எல்லாம் பிரபஞ்சம் அல்ல. பரம் பொருள்தாம் பிரபஞ்ச மயமாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார். எனவே, பரம் பொருள் மயமாகக் காண்பது மெய்க்காட்சி ஆகும். காணப்படுபொருளைப் பிரபஞ்சமாகக் காண்பது பொய்க்காட்சி ஆகின்றது. இருளும், வெளிச்சமும் கலந்து இருக்கின்ற மாலே வேளேயில் நாம் செல்லும் பாதையிலுள்ள ஒருபொருளைப் பார்த்துப் பாம்பு என்று பொருள்படுத்துகிறோம். கயிற்றைப் பாம்பாகப் பொருள்படுத்திக்காணும்பொழுது அது பொய்க்காட்சி ஆகிறது. பிறகு அதைக் கயிறாகக் காணும் பொழுது தான் அது மெய்க்காட்சி ஆகின்றது. பாம்பாகக் கண்ட பொழுதும் அது கயிறாகத்தான் இருந்தது. நாம் அஞ்ஞான நிலேயில் பிரபஞ்சமாகக் கண்டு கொண்டு இருக்கின்ற பொருள் உண்மையில் பிரபஞ்சமன்று. நாம் இப்பொழுது மெய்ப்பொருள் காட்சி பெறவில்லே. நம் மனம் இன்னும் ஸத்தியத்தில் நிலேபெறவில்லே. மனம் ஸத்தியத்தில் நிலே பெறுவதற்கேற்ப அதனிடத்துப் பக்குவம் வருகிறது. பொய்யை நிலே நாட்டிப் பழகிய மனது பொய்க்காட்சி கண்டு கொண்டிருக்கிறது. ஸத்தியத்தைக் கடைப் பிடித்து வாழ்ந்து வந்தால் நமக்கு நஷ்டம் எதுவுமில்லே. நஷ்டம் வருவதுபோல் தென்படினும், கடைசியில் லாபம் ஆக முடியும். ஸத்தியத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்கு எத்தகைய

மனத்தெளிவு உண்டாகிறது என்பதைத் தம் வாழ்க்கையில் நிரூபித்துக் காட்டியிருக்கிறார் மகாத்மா காந்தி. வாழ்க்கையில் நெருக்கடி வந்த காலமெல்லாம்விருப்புவெறுப்புக்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு ஈசனைச் சார்ந்து இருப்பார். அவர் உள்ளத்தில் இருந்து சரியான வழி இது என்று விடை வரும். அதை அவர் செயல் முறைக்குக் கொண்டு வருவார். ஈசனிடம் "ஈசா எனக்கு எது நலமோ அதைத்தந்தருள்" என்று கேட்டால் அது நல்ல பிரார்த்தனை ஆகும். "எனக்கு அது வேண்டும். இறைவா, நீ அதைத் தா" என்று கேட்பது இச்சையை வலியுறுத்திக் கேட்பதாகும். நாம் எதற்குத் தகுதி உடையவர்களோ, எது நமக்கு நலம் தருமோ, அதைத்தான் தெய்வம் கொடுப்பார். நாம் கேட்பதையெல்லாம் அவர் தருவதில்லை. அது அவருடைய கருணையாகும். நாம் கேட்பதை எல்லாம் கொடுத்தால் நாம் கெட்டுப் போய் விடுவோம். நாம் எதற்குத் தகுதி உடையவர்களோ அதை அவர் தந்து கொண்டே இருக்கிறார். தெய்வத்தை நமக்குச் சொந்தமாக்க விரும்புவது ஸத்தியத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் சாத்தியமாகிறது. ஸத்தியத்தை கடைப்பிடித்து வருபவர்களுக்கு மெய்ப்பொருளை உள்ளவாறு காணும் ஞானக்காட்சி உண்டாகிறது.

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதல் பூதமே."

இது திருமூலர் வாக்கு.

ஒரு வீட்டின் வாசலில் துதிக்கையைத் தூக்கிக்கொண்டு யானை ஒன்று நின்றது. அதை எட்ட இருந்து பார்த்த ஒருவர் யானைதானா என்று சந்தேகப்பட்டார். யானை ஓயாது காதை ஆட்டிக் கொண்டிருக்கும். அதன் காது அசையாது இருப்பது ஏன்? என்று யோசித்துப் பார்த்தார். இன்னும் கவனித்துப் பார்த்தபொழுது கண் சிமிட்டாது இருந்தது தெரிய வந்தது. நிற்பது யானை தானா என்று சந்தேகப்பட்டுக் கல்லை எடுத்து அதன்மீது எறிந்தார். கல் பட்டும் அது அசையாது நின்றது. பிறகு கவனித்துப் பார்த்ததில் அவ்வடிவம் மரத்தால் செய்யப்பட்ட யானையாக இருந்தது. யானையாகப் பார்த்தபொழுது, மரம் மறைந்துபோய்விட்டது. மரமாகப் பார்த்த போது, யானை மறைந்து போயிற்று. அதே போன்று பரமனுடைய காட்சியைப் பஞ்ச பூதங்களால் ஆன பிரபஞ்சம் மறைத்துவைத்து இருக்கிறது. ஆராய்ச்சி செய்து பரத்தின் காட்சி பெறும் பொழுது பஞ்ச பூதங்களின் காட்சி மறைந்து போய்விடுகிறது. ஸத்தியத்தைக் கடைப்பிடித்து வருகின்றவர்கள் ஞானக் கண் பெறுகின்றார்கள். மனம் கெட்டுப் போகாது தூய நிலையில் வைத்து இருப்பது ஸத்தியம் பேசுகிறவர்கள் பெறுகின்ற இலாபம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பராசக்தியை முற்றும் சார்ந்து இருந்தார். அவர் தக்ஷிணேசுவரம் ஆலயத்தில் இருந்தபொழுது ஆலயத்திற்குப் பக்கத்தில் ஒரு தோட்டம் இருந்தது. அத் தோட்டத்தில் எலுமிச்சை மரங்கள் இருந்தன. அத்தோட்டக்காரர் அவருக்கு வேண்டிய எலுமிச்சம் பழங்களை எடுத்துக்கொள்ளலாம் என்று அனுமதி கொடுத்து இருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஓர் எலுமிச்சங் கனியைக் கொண்டு வந்து பாதி அரிந்து எடுத்துக்கொண்டு மற்றப் பாதியை ஈரத்துணியால் சுற்றி அடுத்த நாள் உபயோகத்திற்கு வைத்துக்கொள்வார். தோட்டத்தில் இருந்து எலுமிச்சங்கனிகளை வேண்டியவாறு எடுத்துக்கொள்ளலாம் என்று அனுமதி இருந்தும், அவருக்குத் தேவையான ஒரு கனியை மட்டும் எடுத்துக்கொள்வார். அவர் செய்ததில் நமக்கு ஒரு பெரிய பாடம் இருக்கிறது. பிரபஞ்சத்திலிருந்து நம்முடைய தேவைக்கு மேல் நாம் எதையுமே எடுத்துக் கொள்ளக்கூடாது. மேலும் ஒரு சமயம் தமக்காகக் கொண்டு வந்திருந்த எலுமிச்சங்கனியை, அவரால் தொட முடியவில்லை. அதில் குற்றம் ஏதோ இருக்கிறது என்று ஸ்ரீ ராமகிருஷ்ணானந்த சுவாமிகள் எண்ணினர். தோட்டத்தில் என்ன நடந்தது என்பதை விசாரித்துப் பார்த்தார். அத்தோட்டத்தைக் குத்தகைக்கு எடுத்திருந்த குத்தகைக்காரன் காலாவதியாகிப் போய்விட்டான். புதிய குத்தகைக்காரன் வந்து இருந்தான். இது யாருக்கும் தெரியாது. வழக்கம் போன்று எலுமிச்சங்கனியை ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பறித்து வந்தவர் புதிய குத்தகைக்காரனிடமிருந்து அனுமதி பெறவில்லை.

புதிய குத்தகைக்காரன் அனுமதி இல்லாது பழத்தைக் கொண்டு வந்தது திருடியதற்கு நிகர். எனவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதைத் தொட முடியவில்லை. அவர் ஸத்திய நெறியில் நின்றதால் அவரை அறியாது கூடத் தவறு பண்ண முடியவில்லை. முக்கரணங்களால் சத்தியத்தை விட்டுப் பிசகாது அவர் வாழ்ந்து இருந்தார். ஸத்தியத்தை நாம் உறுதியாகக் கடைப்பிடித்தால் ஸத்தியம் நம்மைக் காப்பாற்றுகின்றது.

மகாத்மா காந்தி ஸத்தியத்தைக் கடைப்பிடித்ததன் மூலம் அரசாங்கத்தை நேர் வழியில் நடாத்திச் சென்றார். ஸத்திய நெறியில் நின்ற அவருக்கு உப்பு ஸத்தியாக்கிரகம் பண்ண அவருடைய தூய உள்ளத்திலிருந்து தூண்டுதல் வந்தது. அவர் செய்த உப்பு ஸத்தியாக்கிரகத்தைப் பொருள்படுத்தாது பைத்தியக்காரன் செயலென்று ஆங்கில அரசாங்கம் விட்டு வைத்தது. இலட்சக்கணக்கான மக்கள் மகாத்மா காந்தியின் உப்பு ஸத்தியாக்கிரகத்தைப் பின்பற்றி அரசாங்கச் சட்டத்தை அர்த்தமில்லாததாக ஆக்கி விட்டார்கள். நாடு முழுவதும் விழித்து எழுந்த மக்களை அரசாங்கம் அடக்க முடியாது போய்விட்டது. மகாத்மா காந்தி அதில் வெற்றியடைந்தார். தேசிய இயக்கத்தைக் கொண்டு செலுத்துதற்குரிய வழிமுறை ஸத்தியத்தின் மூலம் அறிந்து கடைப்பிடித்து மகாத்மா காந்தி வெற்றியடைந்தார். தனி மனிதனுடைய வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை, பெரிய தேசிய இயக்கம், பரமனை அடைதல் ஆகிய எல்லாக் காரியங்களிலும் நாம் ஸத்தியத்தை எவ்வளவு உறுதியாகக் கடைப்பிடிக்கின்றோமோ, அந்த அளவுக்கு வெற்றி உண்டாகிறது. ஸத்தியமே கடவுள். ஸத்தியத்தைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பது நல்ல ஆத்மசாதனம் ஆகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஸத்தியத்தை மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களாலும் கடைப்பிடித்தார். கடவுள் சம்பந்தமான எண்ணங்களைத் தவிர வேறு எண்ணங்கள் அவர் மனதில் எழுவது இல்லை. ஸத்தியப் பொருளை அவர் யாண்டும் நினைத்து வந்ததால் மனதால் அவர் ஸத்தியத்தைக்கடைப்பிடித்தவர் ஆகிறார். அவர் வாக்கிலிருந்து ஸத்திய சொற்களே வெளிவரும். ஒரு தடவை பக்தர் ஒருவர் ஒரு தேதி கொடுத்து அந்தத் தேதியில் தம் வீட்டிற்கு வரவேண்டுமென்று அழைத்திருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவர் வேண்டுகோளுக்கு இணங்கினார். அவரை அழைத்த பக்தர் குறித்த நாள் வந்தபொழுது தாம் அழைத்ததை மறந்து விட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அன்று அவர் வீட்டுக்குப் போகவில்லை. அன்று இரவு படுக்கைக்குப் போனபொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. மனதில் ஏதோ தவறு செய்துவிட்டதாக உணர்ச்சி இருந்தது. சிந்தித்துப் பார்த்தபொழுது பக்தர் ஒருவர் வீட்டுக்குப் போவதாக ஒத்துக்கொண்டபடி போகாமல் இருந்தது நினைவுக்கு வந்தது. உடனேபுறப்பட்டுப் பக்தர் வீட்டுக்குச்சென்றார். பக்தர் வீட்டில் அனைவரும் தூங்கிக்கொண்டு இருந்தார்கள். பக்தர் வீட்டின் மதிற்சுவரின் மீது ஏறிக் கால்கள் இரண்டையும் அவர் வீட்டுக்குள் தொங்க விட்டு "அன்பரே, உமக்கு வாக்குக் கொடுத்தபடி உம் வீட்டிற்கு வந்து விட்டேன்" என்று கூறிவிட்டு வந்த பிறகு தான் அவர் தூங்க முடிந்தது.

ஸத்தியத்துக்குப் புறம்பான எச்செயலிலும் அவர் ஈடுபடமாட்டார். அவர் அர்ச்சகர்தொழிலை மேற்கொண்டார். தேவியை ஆராதிப்பதில் அவர் பரமானந்தம் அடைந்தார். அவர் பரத்தையே முற்றும் சார்ந்திருந்து செயல்புரிந்து வந்தமையால் அவருடைய செயல்கள் எல்லாம் ஸத்தியத்திற்கு விளக்கமாக அமைவன ஆயின. அவர் முதலில் அர்ச்சகர் தொழிலை ஏற்றுக் கொண்டபொழுது அத்தொழிலுக்குரிய சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். "சம்பளம் பெற்றால் உலகத்துக்கு அடிமையாகிப்போக நேரிடும். கடவுள் தொண்டு செய்ய வந்த நான் உலகுக்கு அடிமையாகிற செயலைச் செய்யமாட்டேன்'' என்று கூறிச் சம்பளம் பெற மறுத்துவிட்டார். இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திரிகரணங்களும் ஸத்திய நெறியில் செயலாற்றி வந்தன.

நம்முடைய திரிகரணங்களும் ஸத்தியத்தை விளக்குவதற்குச் செயல் புரிதல் வேண்டும். அப்பொழுதுதான் நாம் ஸத் சொரூபமாக முடியும். ஸத்தியத்தைக் கடைப்பிடித்து ஸத்திய சொரூபமாவதற்கு நம் வாழ்வை அர்ப்பணிப்போமாக.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (220) கோபம் உள்ள இடத்தில் குணம் இருக்கும். கோபம் குடியைக் கெடுக்கும். அதே நேரத்தில் ''சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு, நிலத் தறைந்தான் கை பிழையாதற்று'' என்றெல்லாம் சினத்தைப்பற்றிப் பலப்பல வாறு கூறுகிறார்கள். இவற்றில் நாம் எவற்றினை அனுமானித்து ஒரு தீர்மானத் திற்கு வரவேண்டும்?

கோபம் அல்லது சினத்தில் இரண்டு பாங்குகள் இருக்கின்றன. அடக்கம் உடையவன் வேண்டுமென்றே சினத்தை வரவழைத்துக் கொள்ளுகிறான். அப்படிச் செய்வதில் பண்பு உண்டு. மற்றொருவன் சினத்திற்கு அடிமைப் பட்டவனாக இருக்கிறான். சினத்திற்கு அடிமைப் பட்டிருப்பவன் மனதைக் கட்டி ஆளாதவன். அன்னவன் மனம் போகிற போக்குக்கு அடிமைப்பட்டவனாக இருக்கிறான். அவனிடத்து எழும் சீற்றம் அவனுக்கே கேடாக வந்து முடியும். சினத்துக்கு அடிமைப்பட்டிருப்பவன் தாற்காலிகமாகப் பைத்தியம் பிடித்தவன் போன்று நடந்துகொள்ளுகிறான். செய்யத் தக்கது எது, தகாதது எது எனப் பாகுபடுத்த அவனுக்கு இயலாது. அத்தகையவன் சினத்தால் தூண்டப்பெற்றுச் செய்கிற செயல் அனைத்தும் தனக்கும் பிறர்க்கும் தீங்காக வடிவெடுக்கும். மற்று, வேண்டுமென்றே சினத்தை வரவழைத்துக் கொள்ளுகிறவன் பிறர்மீது ஆணைசெலுத்த வல்லவனாகிறான். தாய், தந்தையர் சினத்தைக் கையாண்டு தங்கள் செல்வர்கள் செல்விகளைத் திருத்தியமைக்கலாம். ஆசிரியர் ஒருவர் மாணாக்கன்மீது சினந்துகொண்டு அவனைப் படிப்பில் தூண்டலாம். ஆட்சிபுரிகிறவர்கள் சினந்து கொண்டவர்கள் போன்று தங்கள் அதிகாரத்தைச் செலுத்திப் பிழைபோனவர்களை நல்வழிக்குக் கொண்டுவரலாம். ஆகவே கட்டுக்கடங்கிய சினம் நலம் செய்ய வல்லது. வரம்பில் அடங்காத சினம் எத்தகைய பெருங்கேட்டை வேண்டுமென்றாலும் விளைவிக்கும்.

கேள்வி: (221) மானிடப் பிறவியே அரிது; ஆனால் இதனைக் குடும்பக்கட்டுப் பாடு மூலம் தடை செய்வது சரியா?

மானிடப் பிறவி அரிதிலும் அரிது என்பது உண்மை. ஆனால் மக்களாகப் பிறக்கின்றவர்கள் எல்லாரும் மனுஷத்தன்மை வாய்க்கப் பெற்றவர்கள் அல்லர். விலங்கினும் கொடிய மக்கள் உலகில் பிறப்பெடுத்து வருகின்றனர். அத்தகையவர்களால் சமுதாயத்திற்கு உண்டாகும் கேடு அளப்பரியது. சான்றோர்கள் உலகுக்குச் செய்யும் நலனும் அளப்பரியது. ஆக, மக்களுள் மிகமிக மேலோரும் மிகமிகக் கீழோரும் சமுதாயத்தில் இருக்கின்றனர். குடும்பக் கட்டுப்பாட்டை நன்னெறியில் நிலைநின்று, புலனடக்கம் பழகி, தவம் மிகப்புரிந்து, மகப்பேறு அதனை வரம்புக்கு உட்பட்டுத் தேடுகிறவர்களுக்கு நன்மக்கள் வாய்க்கின்றார்கள். காம வெறியை அடக்க முடியாது அதற்கு அடிமைப் பட்டுப் பிரஜாவிருத்தி செய்பவர்கள் பெரும்பாலும் கயவர்களையே ஈன்றெடுக்கின்றனர்.

இப்பொழுது சமுதாயம் கையாண்டு வருகிற குடும்பக்கட்டுப்பாடு சீலத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. சமுதாயத்திற்கு வரம்புக்கு அதிகப்பட்ட ஜனத்தொகை வேண்டாமென்னும் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. இம்முறையைக் கையாள்வதன் வாயிலாக ஜனத்தொகையை அளவுக்கு உட்பட்டதாக வைத்திருக்க முடியும். ஆனால், நல்லாரை ஏராளமாகத் தோற்றுவிக்க முடியாது. நன்மக்களைப் பெற்றெடுக்கக் குடும்பத்தார் கடமைப்பட்டிருக்கின்றனர். அதற்காக அவர்கள் தங்களைப் பெரிதும் ஆயத்தப்படுத்தவேண்டும். புலனடக்கமும், சீலமும், பண்பும் வாய்க்கப் பெற்றுள்ள பெற்றோர்கள் சமுதாயத்திற்குத் தேவை. நீண்ட நாள் நெறியான வாழ்வு வாழ்ந்து மகப்பேறு சிலவற்றை மட்டும் அவர்கள் பெற்றெடுப்பார்களாகில் அது நல்ல குடும்பக்கட்டுப்பாடு ஆகிறது. அதன் வாயிலாகச் சமுதாயத்தில் ஜனத்தொகையும் அளவுக்கு உட்பட்டதாகவே இருக்கும். தவசீலர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் நன்மக்களாகவே இருப்பார்கள். ஆதலால், குடும்பக் கட்டுப்பாடு அறநெறியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அதில் நலன் நன்கு விளையும். இப்பொழுது சமுதாயம் கையாளுகிற செயற்கை

முறையில் நலனைவிடக் கேடே அதிகரிக்கும். ஆதலால் அறிஞர்கள் இந்தச் செயற்கை முறையை ஒதுக்கி அறநெறியில் நிலைத் திருந்து மகப்பேற்றைக் கட்டுப்படுத்தலாம்.

கேள்வி: (222) பீஷ்மர் ஏன் துரியோதனனைத் திருத்தவில்லை?

பாட்டனர் என்கின்ற முறையில் பீஷ்மர் தம்முடைய அதிகாரத்தைத் துரியோதனன் மீது செலுத்தி அவனைத் திருத்த முயலவில்லை. ஆனல் ஒரு தத்துவ ஞானியினுடைய ஸ்தானத் திலிருந்துகொண்டு அவனுடைய போக்கு அவனுக்குக் கேடு விளைவிக்கும் என்பதைத் தெரிவித்தார். அப்படித் தெரிவித்தும் துரியோதனன் நல்வழிக்குத் திரும்பவில்லை. அங்ஙனம் திருந்தாதவனை உதாசீனனாக இருந்து பீஷ்மர் புறக்கணித்திருக்கலாம். அப்படிச் செய்யாது அவனுக்குச் சேனாதிபதியாக இருக்க ஏன் சம்மதம் கொடுத்தார் என்னும் கேள்வி அடுத்தபடியாக எழக்கூடும்? கெட்டவனாகிய துரியோதனனுக்குப் பீஷ்மாச்சாரியர் சேனாதிபதியாக இருந்ததிலும் கோட்பாடு ஒன்று உளது. தம்மிடத்திலிருக்கும் தகைமையை யார் கேட்டாலும் தடையின்றி அதை எடுத்துக் கொடுப்பது அவர் கொள்கையாயிருந்தது. அதைத் துரியோதனனுக்கு அவர் எடுத்து இயம்பினர். "நீ கேட்பது என்னிடத்து இருப்பதினல் நான் பூண்டுள்ள கொள்கைப்படி அதை உனக்கு எடுத்துக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். நீ விரும்பியபிரகாரம் உனக்குச் சேனாதிபதியாகஇருந்து செயல்புரிகிறேன். ஆனல் யுத்தத்தில் நீ தோற்றுப் போவாய்" என்று அவர் இயம்பினர். அப்படிச் சொன்னது அவனுக்குப் பேருபகாரம். ஆனல் துரியோதனன் அதைக் கேட்டுக்கொள்ள வில்லை. பீஷ்மர் துணைபுரிந்தாலும் கேடு வெல்லாது என்பது பீஷ்மர் உலகுக்கு வழங்கியுள்ள பெரிய கோட்பாடு ஆகும்.

கேள்வி: (223) துரோணர் ஏகலைவ்யனைச் சிடனாக ஏற்றுக்கொள்ளமறுத்துவிட்டார். பிறகு எதற்காக அவர் அவனிடமிருந்து குருதக்ஷிணை கேட்டார்?

துரோணச்சாரியர் ஏகலைவ்யனைச் சிஷ்யனாக ஏற்றுக்கொள்ள மறுத்ததில் சிறந்ததொரு கோட்பாடு இருக்கிறது. அவர் மறுத்ததைக் குறித்து ஏகலைவ்யன் ஏமாற்றம் அடையவில்லை. துரோணச்சாரியரிடம் அவன் கேள்வியொன்று கேட்டான். "நான் தங்களை என்னுடைய குருவாகக்கருதிக்கொள்ளுவதற்கு ஆக்ஷேபம் உண்டா?" என்பது அவன் கிளப்பிய கேள்வி. "மானசீகமாக யார்வேண்டுமானலும் யாரை வேண்டுமானலும் குருவாக வைத்துக் கொள்ளலாம். அதற்குத் தடைசொல்லுவது யாருக்குமே ஒவ்வாது." என்று துரோணர் விடைவிடுத்தார். அக்கோட்பாட்டுக்கு இணங்க ஏகலைவ்யன்துரோணரைத் தன்குருவாகக்கருதி குருபக்தியை வளர்த்தான். சிஷ்யன் ஒருவன் பூணுகிற குருபக்தி குரு புரிகிற உதவியைவிட மேலானது என்பதற்கு ஏகலைவ்யன் அடைந்துள்ள திறமையே சான்றாகிறது. இவ்வுண்மை உலகுக்கு விளங்க வேண்டும். அதை விளக்குதல்பொருட்டுத் துரோணச்சாரியர் ஏகலைவ்யனிடம் கேள்வி ஒன்று கேட்டார்: "நான்தான் உன்னைச் சிஷ்யனாக ஏற்கவில்லையே! அப்படி இருந்தும் இத்திறமையையெல்லாம் நீ எப்படிப் பெற்றாய்?" ஏகலைவ்யன் விடுத்த விடையாவது: "நான் தங்களிடம் குருபக்தி மிகப் பூண்டிருக்கிறேன். ஆகையால் தங்கள் அருளாலும் அனுக்கிரஹத்தாலும் வில் கலைகளெல்லாம் தாமாக எனக்கு வந்து வாய்த்தன."

துரோணர்: "அப்படியானல் நீ எனக்குக் குருதக்ஷிணை செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறாய் அல்லவா?"

ஏகலைவ்யன்: "ஆம் இறைவா! தக்ஷிணை வேண்டுவதன்வாயிலாகத் தாங்கள் என்னை ஒரு சிஷ்யனாக அங்கீகரித்தாயிற்று.என் உயிரையே தக்ஷிணையாக வழங்க ஆயத்தமாயிருக்கிறேன்."

துரோணர்: "உயிர் உனக்குரியதாயிருக்கட்டும். வலக்கை கட்டைவிரலை வெட்டி தக்ஷிணையாகத் தா."

ஏகலைவ்யன்: "இவ்வளவுதானா. இதோ தருகிறேன்" என்று விரலைச் சிதைத்து குருவின் முன்னிலையில் வைத்தான்.

குருபக்தியில் ஏகலைவ்யன் அடைந்துள்ள பெருநிலையை அடைகிறவர்கள் எல்லார்க்கும் அவரவர் விரும்புகிற கலைஞானம் தானாக வந்து வாய்க்கிறது என்பதை விளக்கிக் காட்டுதற்கே கொடியசெயல் போன்று தென்படுகிற இச் செயலைத் துரோணச்சாரியர் செய்தார்.

அனுமன் - 15

(சுவாமி ஆத்மானந்தர்)

பட்டாபிஷேகம்

இராவண வதம் முடிந்ததும் 'வெற்றிச் செய்தியை விளம்பி வா' என்று அனுமனைச் சீதையின்பால் அனுப்பிய இராகவன், இலங்கைக்கு முடிசூட்டப்பெற்ற விபீஷணனை அழைத்துச் சர்வ அலங்காரத்துடன் சீதையை அழைத்து வரும்படி கூறுகிறான். அதன்படியே சீதை ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு இராமன் முன்னிலைக்கு அழைத்துவரப்படுகின்றாள். பலமாதங்கள் தன் கணவனிடம் இருந்து பிரிந்திருந்த சீதை ஆருயிர் கணவனைக் காணப் போகின்றோம் என்ற பெரு மகிழ்வுடன் செல்லுகின்றாள். அந்நிலையிலும் அந்த மகிழ்ச்சிக்குக் காரணமாக இருந்த அனுமனை அவள் நன்றி உணர்வோடு நினைவுகூறுகின்றாள். "என் நல்லொழுக்கத்தின் நிலையினை இராகவனுக்கு எடுத்துரைத்தும், என் கணவன் வலிமையினை உலகறியச் செய்தும், என் குலத்தின் பெருமையினை யாவரும் அறியும்படி செய்தும், இவ்வுலகத்தை அழியாது காப்பாற்றிய அனுமனை என் கற்பொழுக்கம் சிரஞ்சீவியாக வாழும்படி செய்யுமோ?" என்று தனக்குள் எண்ணுகிறாள்.

'சீலமும் காட்டி, என் கணவன் சேவகக்
கோலமும் காட்டி, என் குலமும் காட்டி, இஞ்
ஞாலமும் காட்டிய கவிக்கு நாள் அருக்
காலமும் காட்டும் கொல், என் கற்பு ?' என்றாள்.

மகிழ்ச்சியோடு சென்ற சீதையை இராமன் மகிழ்ச்சியோடு வரவேற்கவில்லை. நெடுங்கணீர் ஆறுபாய்தர வணங்கிய சீதையைப் படமெடுத்த பாம்பு போல் இராமன் சீறிப் பார்க்கிறான். நாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத கடுமொழிகள் பல கூறிப் புறக்கணிக்கின்றான். 'செத்துப்போ அல்லது உன் விருப்பம் போல் எங்கேயாவது செல்' என்று கூறிவிடுகிறான். இராமன் கடுமொழிகளைக் கேட்ட சீதை இலக்குவனை எரிமூட்டச் செய்து அதில் பாய்கின்றாள். ஆனல் கற்புக்கரசி சீதையை அக்கினிபகவான் எரிக்கவில்லை. சீதையின் கற்பினை உலகறியச்செய்த இராமன் பின்னர் அவளை ஏற்றுக்கொள்ளுகிறான். புஷ்பகவிமானம் கொண்டுவரப்படுகிறது. இராமன் இலக்குவன், சீதை, அனுமன், விபீஷணன், சுக்ரீவன், அங்கதன் உட்படவானரப்படைஅனைத்தும் புஷ்பக விமானத்தில் அயோத்தி புறப்படுகின்றனர். போகின்ற வழியில் பாரத்துவாஜ முனிவர் ஆச்ரமம் செல்கின்றனர், இராமன் அங்குவிருந்துஏற்றுக்கொள்ளுகிறான். விருந்துக்கிடையில் இராமனுக்குப் பரதன் நினைவு வருகிறது. அயோத்திக்குத்தான் திரும்பி வருவதாகக் கூறிய நாளில் செல்லவில்லையென்றால் பரதன் உயிர்விட்டுவிடுவானே என்று எண்ணுகிறான். உடனே அனுமனை அழைத்துத் தன் வரவினைப் பரதனுக்குத் தெரிவிக்கும்படி பணிக்கின்றான். பரதனுக்குக் காண்பிக்கத் தன் கணையாழியையும் அடையாளப் பொருளாகக் கொடுத்தனுப்புகிறான். அத்துடன் பரதன் மனநிலையினையும் தெரிந்துவா என்று சொல்லி அனுப்புகிறான்.

இராமன் கட்டளையைச் சிரமேற்கொண்ட அனுமன் அடையாளப் பொருளுடன் உடனே புறப்படுகின்றான். தன் தந்தையாகிய வாயுவின் வேகமும், தன் தலைவனாகிய இராமன் வில்லினின்று வெளிப்படுகின்ற அம்பின் வேகமும், தன் மனத்தின் வேகமும் பின்தங்கும்படி வேகமாகச் செல்லுகின்றான். வழியில் குகனைச் சந்தித்து இராமன் வரவு கூறிப் பின்னும் புறப்பட்டுப் போகின்றான்.

தந்தை வேகமும், தனது நாயகன் தனிச் சிலையின்
முந்து சாயகக் கடுமையும், பிற்பட முடுகி,
சிந்தை பின்வரச் செல்பவன், குகற்கும் அச்சேயோன்
வந்த வாசகம் கூறி, மேல் வான் வழிப் போனான்.

இனி, அயோத்தியில் பரதன் நிலையினைப் பார்ப்போம். இராமனைப் பிரிந்ததிலிருந்துநந்திக்கிராமத்தில் இருந்து கொண்டு சதா இராமத்தியானத்தில் ஈடுபடுகிறான் பரதன். இராமன் பிரிவால் நெஞ்சம் நெக்குருகி, மனம் நொந்து, உடல் இளைத்துத் தவக்கோலத்தில் தென்படுகின்றான். இராமபிரான்மீது வைத்த பேரன்பின் புறத்தோற்றமாகத் தென்படுகிறான் பரதன். இராமனை நினைந்து நினைந்து கண்ணீர் சொரிகின்றான். தென்திசையன்றி வேறு திசைகளை நோக்காதிருக்கின்றான். இராமன் வருவான்

வருவான் என்று பெருமூச்சு விட்டுப் புலம்பிக் கொண்டிருக்கின்றான். வாக்குக் கொடுத்தபடி இராமன் வரவேண்டிய நாள் இன்றுதான் என்பதை அறிந்த பரதன், இராமன் வராமையினால் உயிர்த் தியாகம் செய்யப்புகுகிறான். நெருப்பு மூட்டி அதில் விழுந்து மாயத் தீர்மானிக்கிறான். அவன் முடிவு கண்டு அயோத்தி மக்கள் அலறுகின்றனர். அன்னை கோசலை கதறுகின்றாள். கோசலை தடுத்தும் நெருப்பில் விழப் போகும் பரதனைக் கண்ட அயோத்தி மக்கள் 'ஐயோ, ஐயோ' என்று கதறுகின்றனர். இந்த அலறல்களுக்கிடையே கூப்பிய கரங்களுடன் பரதன் நெருப்பினை வலம் வருகின்றான். இதற்கிடையில் 'ஐயன் வந்தனன், ஆரியன் வந்தனன்' என்ற அனுமன் குரல் கேட்கிறது. திடீரென்று அக்கூட்டத்தினுள் புகுந்த அனுமன் தன் கைகளினால் எரிகின்ற அக்கினியைக் கரியாக்கி விடுகின்றான். பரதனைப் பார்த்து, "சத்தியத்திற்கு ஆதாரம் போன்றவனாகிய நீ உயிர் விட்டால் அவ் இராமபிரான் உயிர் வாழ்வானா?" என்று கேட்கிறான்.

'அய்யன் வந்தனன்; ஆரியன் வந்தனன்;
மெய்யின் மெய் அன்னநின் உயிர் வீடினால்,
உய்யுமே, அவன்?' என்று உரைத்து, உள்புகா
கையினால் எரியைக் கரி ஆக்கினான்.

பரதனுக்கு இராமன் வருகையைக் கூறி, அவன் தந்தனுப்பிய கணையாழியையும் காட்டுகிறான். மோதிரம் கண்ட பரதனுக்கு வந்த ஆனந்தத்திற்கு ஓர் அளவில்லை. நின்ற அனுமனைப் பலமுறை வணங்கி ஆனந்தக் கூத்தாடுகின்றான். ஆடியும் பாடியும் அகமகிழ்கிறான். இங்குமங்கும் உவகை மிகுதியால் ஓடுகிறான்; சூழநின்ற அனைவரையும் தொழுகின்றான்; தன்னைத்தானே தொழுது கொள்கின்றான். காண்பதற்குக் கள்ளுண்டவன் போல் காட்சியளிக்கின்றான். இந்நிலையில் இராமன் ஏறிய புஷ்பக விமானம் வந்திறங்குகிறது. புஷ்பக விமானத்திலிருந்து வந்திறங்கிய இராமன் வசிஷ்ட முனிவரையும், தாய்மார்களையும் பணிந்தெழுகின்றான். பரதனும் இராமன் திருவடிகளில் வீழ்ந்து பணிகின்றான். பரிவாரங்கள் புடைசூழப் பரதனோடு இராமன் அயோத்தி நகர் புகுந்து அரண்மனை சேர்கின்றான். அயோத்தி மாநகரம் இராமன் வருகை கண்டு ஆனந்த வெள்ளத்தில் மூழ்குகிறது. மறுநாளே, பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. பல்வேறு இடங்களிலிருந்தும் புண்ணிய தீர்த்தங்கள் வந்து சேருவதற்குத் தாமதமாகின்றது. உடனே அனுமன் புறப்பட்டுத் தீர்த்தங்களைக் கொண்டு சேர்க்கின்றான். பல்வகை இரத்தினங்களைக் கொண்டு அமைக்கப்பெற்ற மகுடாபிஷேக மண்டபத்தில், இராமனும் சீதையும் சிங்காதனத்தில் வீற்றிருக்க இராம பட்டாபிஷேகம் சீரும் சிறப்புமாக நடந்தேறியது. சிம்மாசனத்தை அனுமன் தாங்கவும், அங்கதன் உடைவாளைக் கையில் ஏந்தியிருக்கவும், பரதன் தூய வெண்கொற்றக் குடையைப் பிடிக்கவும், இலக்குவனும், சத்ருக்கனும் வெண்சாமரை வீசவும், சீதை மலர்களால் தம் கூந்தலை அலங்கரித்துக் கொண்டு வீற்றிருக்கவும், திருவெண்ணெய் நல்லூருக்கு வேந்தனை சடையப்ப வள்ளலின் வம்சத்து முன்னோர் மகுடம் கொணர்ந்து கொடுக்க, அதை வசிஷ்ட முனிவன் வாங்கித் தன் திருக்கரங்களால் இராமனுக்குச் சூட்டுகிறார்.

"அரியணை அனுமன் தாங்க,
அங்கதன் உடைவாள் ஏந்த,
பரதன் வெண்குடை கவிக்க,
இருவரும் கவரி பற்ற,
விரை செறி குழலி ஓங்க,
வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி,
வசிட்டனே புனைந்தான், மௌலி."

சீதா இராமன் பரிசு

முடிசூட்டு விழா இனிது முடிந்தது. இராமன் பட்டாபிஷேகத்திற்கு வந்திருந்த விருந்தினர் அனைவருக்கும் பரிசுகள் பலப்பல தந்து விடைகொடுத்தனுப்புகிறான். குகன், சுக்ரீவன், விபீஷணன், அங்கதன் முதலாயினோருக்கும் அவரவர்க்கேற்ற பாங்கில் பரிசுகள் கொடுத்தனுப்புகிறான். இறுதியாக அனுமனுக்கு விடைகொடுத்தனுப்பும் சமயம் வருகிறது. இராமன் அனுமனை அன்பினோடு நோக்குகிறான். அவனைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லுகிறான். "உலகில் உதவி செய்வதில் உனக்கு நிகரானவர் யார் இருக்கின்றனர்? உன்னைத் தவிர வேறு யாருமில்லை. அன்று நீ அசோகவனத்தில்

சீதையைக் கண்டுவந்து 'கண்டனன் கற்பினுக் கணியினைக் கண்களால்' என்று சொல்லி, சோகத்தில் மூழ்கிக்கிடந்த என்னை மகிழ்வித்த உனக்கு நான் செய்யும் கைம்மாறு என்ன இருக்கிறது ? ஒன்றுமில்லை. போரில் பேருதவி செய்த பைம்பூண் அணிந்த திண்ணிய தோள் களை உடையவனே, என்னை நீ இறுகக் கட்டித் தழுவிக்கொள்ளுக" என்று கூறுகிறான்.

"மாருதிதன்னை ஐயன் மகிழ்ந்து, இனிது அருளின்
நோக்கி,
'ஆர் உதவிடுதற்கு ஒத்தார், நீ அலால்? அன்று செய்த
பேர்உதவிக்கு யான்செய் செயல் பிறிது இல்லை;
பைம் பூண்
போர்உதவிய திண் தோளாய்!பொருந்துறப்
புல்லுக!'

என்றான். தன் ஒப்பற்ற பக்தனாகிய அனும னுக்கு இராமன் தன்னையேதரத் தீர்மானிக் கிறான். அதனால்தான் தன்னைத் தழுவிக் கொள்ளுமாறு கூறுகிறான். இராமனுக்கு அடிமைபூண்ட அனுமன் இறுதியில் இராம னையே தனக்குச்சொந்தமாக்கிக்கொள்ளுகிறான்.

முடிவுரை

"இராமாயண மஹா மாலா ரத்னம்." இராமா யணம் என்ற ஒப்பற்ற மாலையில் இரத்தினப் பதக்கம் போன்று திகழ்பவன் அனுமன் என்று இராமநாம சங்கீர்த்தனத்தில்கூறப்படுகின்றது. இராமாயணம் முழுவதுக்குமே நந்தாவிளக்காய் இருந்து ஒளியூட்டுபவன் அனுமன். இராமா யணத்தில் அனுமன் செய்த செயற்கரிய செய லுக்கு ஈடுஇணையே கிடையாது. இராமா யணத்தில் வருகின்ற மிகவுயர்ந்த பாத்திரங் களான இராமன், சீதை, இலக்குவன், பரதன் ஆகிய நால்வருக்கும் நெருக்கடியான காலங்களி லெல்லாம் பேருதவி செய்து அவர்களுடைய உயிரைக் காப்பாற்றியவன் அனுமனேயாவான்.

இராமன் பெருமையினை உள்ளபடி அறிந்து கொண்டவன் அனுமன். இராமன் நம்பிக் கைக்கு முற்றிலும் பாத்திரமானவன் அனுமன். இராம கைங்கர்யத்தையே தன் வாழ்க்கையின் உன்னத லக்ஷியமாகக் கொண்டவன் அனுமன்.

இராமபக்தியில் ஒப்பாரும் மிக்காரும் இல் லாதவன் அனுமன். இராம நாமத்தை உறுதி யாகப் பிடித்துக்கொண்டவன் அனுமன். துன்ப துயரங்கள் அனைத்தினின்றும் விடுவிக்கும் அரு மருந்து இராம நாமமாகிய தாரகமந்திரமே என் பதை உலகறியச் செய்தவன் அனுமன்.

சூரியகுலத்துதித்த இராமனுக்குத் தொண்டு செய்த அனுமன், சூரியபுத்திரனான சுக்ரீவனுக்கு மந்திரியாகவும் இருந்தான். உலகனைத்துக்கும் ஒளியூட்டும் சூரியனையே குருவாகக்கொண்டு ஒன்பது வியாகரணங்களையும் கற்றுத்தேர்ந் தான். அவன் கல்லாத கலை என்பது உலகில் இல்லவே இல்லை. அவன் சகலகலாவல்லுநன். 'சொல்லின் செல்வன்' என்று இராமனால் பட் டம் சூட்டப் பெற்றவன். எல்லா நற்குணங் களும் ஒருங்கே அமையப் பெற்றவன். தான் கற்ற கல்விக்கும், பெற்ற நற்குணங்களுக்கும் ஏற்பத் தன்னடக்கமே வடிவெடுத்தவன்.

நிறை ஞானம் கைவரப் பெற்றவன். அச் சம் என்பதனையே அறியாதவன். அவன் யாரைக் கண்டும், எதைக்கண்டும் அஞ்சியது இல்லை. எல்லையற்ற பேராற்றல் படைத்தவன். சாகாவரம் பெற்றவன். இந்திரன் வஜ்ராயுத மும், பிரம்மாவின் பிரம்மாஸ்திரமும் அவனை ஒன்றும் செய்யமுடியா. விரும்பிய வடிவெடுக்க வல்லவன். அணுப்போன்று மிகச்சிறிய வடிவ மும், திரிவிக்ரமனைப்போன்று மிகப் பெரிய வடி வமும் எடுக்கவல்லவன். சோம்பல் என்பதையே அறியாதவன். அடியவர்க்கு எளியவன். தீனர் களை ரக்ஷிப்பவன். அத்தகைய அனுமனைப் பணிந்தும், வணங்கியும், பக்திசெய்து பாடியும், அவன் திருவடிகளைத் தியானித்தும் அவன் அருளுக்குப் பாத்திரமாக முயலுவோமாக.

यत्र यत्र रघुनाथकीर्तनं
तत्र तत्र कृतमस्तकाञ्जलिम्
बाष्पवारिपरिपूर्णलोचनं
मारुतिं नमत राक्षसान्तकम् ॥

யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ர தத்ர க்ருதமஸ்த காஞ்ஜலிம்
பாஷ்பவாரி பரிபூர்ணலோசநம்
மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம்.

ஸ்ரீராமனுடைய கதையைச் சொல்லுமிடங் களிலெல்லாம், கையை அஞ்சலி பந்தம் செய்து கொண்டிருப்பவரும், ஆனந்த பாஷ்பத்தினால் நீர்மல்கிய கண்களை உடையவரும், ராக்ஷஸர் களுக்கு யமன் போன்றவருமான அனுமனை நாம் அனைவரும் துதிப்போமாக.

வாசுதேவமனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

கேள்வி : வெளிச்சம் வந்தால் அன்றி இருள் நீங்காது. விழித்துக்கொண்டால் அன்றி கனவின் இன்ப துன்ப அனுபவங்கள் போகா. அதேபோல ஞானத்தாலன்றி அக்ஞானம் அழியாது. இப்போது கேள்வி ஒன்று எழுகிறது. பிரம்மஹத்தி தோஷம் போன்ற பெரிய பாபகர்மாக்களுக்கும் கூடப் பிராயச்சித்தமாக ஸத் கர்மங்கள் விதிக்கப்படுகின்றன. அவைகளை மனப் பூர்வமாகச் செய்தால் அந்தத் தோஷங்கள் எல்லாம் விலகிவிடுகின்றன. அப்படி இருக்க இந்த அல்பமான, பொய்யான அக்ஞானத்தை ஸத்கர்மங்கள் ஏன் போக்க மாட்டா?

பதில்: ஸத் கர்மங்கள் அக்ஞானத்தைப் போக்க மாட்டா. ஏனென்றால் கர்மாவுக்கும் அக்ஞானத்திற்கும் விரோதமில்லை. அமாவாசையன்று இரவில்தோன்றும் மேகத்தின் கூட்டம் மேலும் இருளைப் பெரிதாக்குவதைப் போல கர்மா அக்ஞானத்தை விருத்தி செய்யுமே தவிர ஒழிக்காது. ஆனால் அந்த இருளைச் சூரியன் போக்கடித்து விடுகிறான். அதைப்போல ஞானம் தான் அக்ஞானத்தைப் போக்கடிக்கும்.

கேள்வி : மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களால் ஏற்படுவது, செய்யப்படுவது தான் கர்மா எனப்படுகிறது. ஞானம் அந்தக் கரணத்தின் ஒரு விருத்திதான். ஆகையால் ஞானம் சூக்ஷ்ம கர்மமாகும். அது எப்படி அக்ஞானத்தைப் போக்க முடியும்?

பதில்: ஞானமும் சித்த விருத்தி என்பது உண்மைதான். ஆனால் அந்த விருத்தி அக்ஞானத்தைப் போக்குவதில்லை. அந்த விருத்தி ஏற்றுள்ள நித்தியமான ஞானம் தான் அக்ஞானத்தைப் போக்குகிறது. ஞானத்திற்கு விருத்தி உபாதியாகிறது. தன்னிடம் காரியம் செய்யும் சக்தி இருந்தும் அதை வெளிப்படுத்திக் காரியம் நடைபெறுவதற்கு அனுகூலமாக அதனுடன் சேர்ந்துள்ள வஸ்துவிற்கு உபாதி என்று பெயர். ஆத்மாவிற்கு இந்தச்சரீரம் உபாதியாகும். இந்தச்சரீரத்தின் மூலம் அது தன் மகிமைகளையெல்லாம் விளக்குகிறது. ரயில் என்ஜின் மூலம் நீராவி தன் சக்தியை வெளிப்படுத்துகிறது. விரிந்த நீர்ப் பரப்பின் மேல் மோதி அலையாக எழும்பி காற்று தன் சக்தியைக் காட்டுகிறது. நூறு பேர் ஏறியுள்ள படகை அலையால் ஏந்தி, சிறு பெண் குழந்தை ஒன்று கையில் பூப்பந்தை வைத்துக்கொண்டு நர்த்தன மாடுவதைப்போல, நீர் விளையாடுகிறது. உபாதி ரஹிதன், உபாதி ஸஹிதன், மாயா ரஹிதன், மாயா ஸஹிதன் என்று இறைவன் இரண்டு விதமாக விளக்கப் படுகிறார். இப்பிரபஞ்சத்தை இறைவனின் உபாதி என்று சொல்லலாம். நாம் அணிந்துள்ள மூக்குக் கண்ணாடி பொருள்களைப் பார்ப்பதில்லை என்பது நமக்கு எளிதில் விளங்குகிறது. அதே போல நம் ஸ்தூலக் கண்களும் புறப் பொருள்களைப் பார்ப்பதில்லை. அது வெறும் கருவி மாத்திரமே. அது ஜடப்பொருள். உணர்தல், அறிதல் அதற்கு இல்லை. கண்ணின் வழியே ஒளிக்கதிர்கள் உள்ளே சென்று நரம்பு மண்டலத்தின் மூலம் மூளையில் படுகின்றன. ஆத்மா அவற்றைக் காண்கிறது. தூங்கும் போது கண் பாதி திறந்திருந்தும், நரம்பு மண்டலம், மூளை இவற்றில் இரத்த ஓட்டம் நிகழ்ந்தும் பிரபஞ்சத்தை பார்ப்பதற்கு, கிரஹிப்பதற்கு மனம் வேலை செய்யாததினால் காட்சி தென்படுவதில்லை. திருக்-திருச்ய ஆராய்ச்சி தான் விவேகம் எனப்படுகிறது. இம்முறையில் ஞானத்தின் கருவியாகச் சித்தவிருத்தி வேலை செய்கிறது. சித்தவிருத்தியைக் கருவியாகப் பயன்படுத்தும் ஞானமே அக்ஞானத்தைப் போக்குகிறது.

இத்துடன் கர்மகாண்டம்—ஞானகாண்டம் என்று வேதத்தில் பேசப்படுகிற விஷயத்தையும் ஆராய்தல் நல்லது. ஞானத்தைக் கிரஹிப்பதற்கு, உதவியாகக்கிரியைகளை வைத்தார்கள். நூல்களைப்பயன்படுத்தி அவற்றில் புகட்டப் பட்டிருக்கிற சத்விஷயங்களை மனதில் வாங்கி வாழ்க்கையை அவற்றின் மயம் ஆக்குதல் நல்ல ஸரஸ்வதிபூஜை ஆகும். பசுவையும் கன்றையும் நன்கு வளர்த்து அதிலிருந்து பால் பெறுதல் நல்ல கோபூஜை ஆகும். கோமாதாவைப் பட்டினி போட்டுப் பால் பெறுதல் மனிதனுக்குத்

தகாது. திருநீறு இடுகிறோம். அது புகட்டுகிற சரீரம் நிலையாமை, கடவுள் ஒருவரே சாஸ்வதமான பொருள் என்கிற ஞானத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும். நாம் பசுவை ஆற்றில் குளிப்பாட்டுவதைப்போலக் கங்கையில் நீராடினால் எப்படிப் புண்ணியம் கிடைக்கும்? கங்கை புனிதமானது என்று உணர்ந்து நீராடினால் நாம் நிச்சயம் வாழ்க்கையில் திருத்தம் பெறுவோம். ஒருவில்வ மரத்தடியில் ஒரு லிங்கமோ, வேலோ, விநாயகமூர்த்தியோ இருந்து அந்த மரத்திலிருந்து உதிர்கிற வில்வபத்திரங்களை மரம் சிவ அர்ச்சனை செய்கிறது என்றுயாராவது சொல்லுவார்களா? கோபுரத்தில் கட்டப்பட்டிருக்கிற ஒலிபெருக்கி திருவெம்பாவை, திருப்பாவை, தேவாரம் தினம் பாடுகிறது. அதை ஆத்ம சாதனம், சுவாத்யாயம், பாராயணம், பஜனை செய்கிறது என்று யாராவது சொல்வார்களா? தான் ஒரு மரம் என்றோ கீழே உள்ளது கடவுள் என்றோ மரத்திற்குத் தெரியாது. பின் எப்படிப் பூஜாபலன் உண்டாகும்? ஜடப்பொருளாகிய ஒலிபெருக்கிக்குத் தன்னைப் பற்றியோ தன் தலைவனாகிய இறைவனைப் பற்றியோ ஒன்றும் தெரியாது. நாம் செய்கிற கர்மத்தால் மட்டும் பிரயோஜனமில்லை. உணர்ந்து செய்யும்போது அது ஆத்மசாதனம் ஆகிறது. நாம் ஞானமுன்னேற்றம் அடைகிறோம். ஆகையால் கர்மா அக்ஞானத்தைப் போக்காது. அது ஏற்றிருக்கிற ஞானம் தான் அக்ஞானத்தைப் போக்குகிறது.

கர்மாவுக்கும் அக்ஞானத்துக்கும் விரோதமில்லை என்பதையும் நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். நம்மைச் செயலில் தூண்டுவது ஆசை. ஆசை என்பது ஏதோ ஒரு குறையைநீக்குவதற்குச் செய்கிறமுயற்சியாகும். ஆத்மாவோ ஒருகுறைபாடும் அற்றது. அதற்கு வேண்டியது எதுவும் இல்லை. அது எதைக் குறித்து ஆசைப்படுவது? உள்ளதெல்லாம் அது ஒன்றே. ஆசைப்படுவதற்கு இரண்டாவது பொருள் இல்லை. ஆசையும், அது விரிக்கும் எண்ணங்களும், எண்ணங்கள் செயல்களாக வடிவெடுப்பதும் எல்லாம் அவித்தையின் மாற்று உருவங்களே ஆகும். ஆகையால் முடிந்த நிலையில் கர்மங்கள் ஓய்ந்துவிடுகின்றன. ஆரம்ப நிலையில் சத் கர்மங்களால் தீய கர்மங்களைப் போக்கி மனதை ஞானத்துக்குத் தகுதியுடையதாக்க வேண்டும். மனம் போராட்டமின்றி ஞானத்தில் நிற்கிறபோது, கர்மங்கள் ஓய்ந்துவிடுகின்றன. ஆகையால் ஞானமே அக்ஞானத்தைப் போக்கவல்லது, கர்மா அன்று என்று வலியுறுத்திச் சொல்லப் படுகிறது.

இந்த ஞானம் ஸ்வரூப ஞானம் என்றும் விருத்தி ஞானம் என்றும் இரண்டு வகைப்படும். கனவற்ற உறக்கத்தில் அக்ஞானத்தைப் பிரகாசப்படுத்தும் ஞானம் ஸ்வரூப ஞானம் ஆகும். விழிப்பிலும் சொப்பனத்திலும் விஷயங்களைப் பிரகாசப்படுத்தும் ஞானம் விருத்தி ஞானம் எனப்படும். பகல் வேளையில் சூரியப் பிரகாசத்தால் சுவர் விளங்குகிறது. கண்ணாடியைச் சூரியனுக்கு நேராகப் பிடித்தால் சூரிய ஒளி கண்ணாடியில் பட்டுச் சுவற்றில் ஒளிவீசும். இது போன்றது ஜாக்கிரதம், சொப்பனம் அவஸ்தைகளில் ஏற்படுகிற விருத்தி ஞானம். கண்ணாடிகளுக்கு இடைவெளியில் விழும் சூரியப் பிரகாசம் நேர் கீழே போய்த் தரையில் விழுகிறது. பிரதிபிம்பம் ஏதும் ஏற்படுவதில்லை. இது போன்றது சுஷுப்தி அவஸ்தையில் நிலவுகிற சொரூப ஞானம் என்று விளக்குகிறார்கள். இக் கருத்துக்களை நாம் நன்கு விளங்கிக்கொள்ள முயல்வோம். காரண சரீரம், சூக்ஷ்ம சரீரம், ஸ்தூல சரீரம் என்று நமக்கு மூன்று சரீரங்கள் இருக்கின்றன. இப்பிறவியில் நாம் தாங்கியிருக்கும் இப்பருவுடல் ஸ்தூல சரீரம் ஆகும். பிராரப்த கர்மத்தை அனுபவிப்பதற்காக ஏற்ற சரீரம், ஏற்றசூழ்நிலையில் பிறப்பெடுத்திருக்கிறது. ஆகாமிய கர்மத்தை ஏற்றுக் கொள்ளக்கூடியதும், சஞ்சித கர்மத்தைத் தன்னுள் அடக்கி வைத்திருப்பதும் எதுவோ, அந்தச் சரீரத்திற்கு, சூக்ஷ்ம சரீரம் என்று பெயர். இந்த இரண்டு சரீரங்களுக்கும் ஆதாரமாய் இருப்பது அக்ஞானம் என்னும் காரண சரீரம் ஆகும். இக்காரண நிலையில் நாம் சுஷுப்தியில் ஒடுங்கி இருக்கிறோம். இந்த ஸ்தூல சரீரத்தின் கருவிகள் பஞ்சேந்திரியங்கள் அங்குச் செயல்படுவதில்லை. அந்தக்கரணமும் ஆங்குச் செயல்படுவதில்லை. அந்தக்கரணத்தையும் தாண்டி, அதன் உதவியின்றி, அறிதல், அனுபவித்தல், தன்

ளில் தானுய் இருத்தல் சுஷுப்தியில் சாத்திய மாகிறது. ஆனந்தமாய்த் தூங்கினேம், ஒன் றும் அறியவில்லை என்று விழித்தெழுந்துசொல் கிறேம். ஆனல் ஸ்வரூப ஞானம் என்கிற பதத் திற்கு ஏற்ப நமது நிஜ சொரூபம் நமக்குவிளங்க வில்லை. குருடனுக்கு எப்போதுமே இருட்டுத் தான் தெரிகிறது. அவன் தூங்கும்போது அவ்விருட்டு இன்னும் அதிகமாகிறது. விழித்த தும் பழையபடி இருட்டுத்தான். அதுபோல சுஷுப்தியில் நம் நிஜமான நிலையின்கண்-போய் வந்தும், தொடர்பு கொண்டும், மீண்டும் விழித்தவுடன் அக்ஞான நிலையிலேயே இருக் கிறேம். நிஜசொரூபத்தை அறிந்து விட்டால், நமக்குச் சொரூப ஞானம் சித்தியாகி விட்டது என்று சொல்லுகிறேம். இந்நிலை எங்கே, சுஷுப்தியில் அக்ஞானத்தைப் பிரகா சப்படுத்தும் ஞானம் சொருபஞானம் என் கிற நிலை எங்கே? முரண்பாடு போல் தோன்று கிறது. ஆனல் முரண்பாடு இல்லை. தூக்கத் துக்கு நித்தியப் பிரளயம் என்றும் பிரம்ம அவஸ்தை என்றும் பெயர். ஆத்மாவின் உண்மையான நிலைமையில் தூக்கத்தில் நாம் ஐக்கியப்பட்டிருக்கிறேம். ஆங்கு எந்தப் பேத மும் இல்லை, துன்ப துயரங்கள் இல்லை. பால் வேற்றுமை இல்லை, ஒரே ஆனந்த நிலை. திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்ட ராஜகுமாரன் தன் தாய் தந்தையரைப் பார்க்க ஏங்கினுன், தவித்தான். ஒரு நல்ல திருடன் அந்த ராஜகுமாரனை இரவில் அரண்மனைக்கு அழைத்து வந்து அவன் தாய் தந்தையரை, அவர்களுடன் தொடர்பு கொள்ளாமல், அவர் கள் தூங்கும்போது காட்டிவிட்டுக் காட்டிற்கு அழைத்துப் போய்விட்டான். வழியில் கண் ணைக்கட்டி அழைத்து 'வந்தார்கள். வழியோ அடையாளமோ தெரிந்துகொள்ளக் கூடாது என்பதற்காக அப்படிச் செய்தார்கள். இந்த நிலையைப்போல அக்ஞானத்தினுல் கவரப்பட்ட தாக இருக்கிற ஜீவன் மானுட ஜன்மத்திலா வது தன் மூல நிலையைப்பற்றி அறிந்து அதில் கலந்துவிட முயல்கிறது. இரவில் தூக்கத்தில் பிரம்ம அவஸ்தையில் அது இருந்து திரும்பு கிறது. அனுபவத்தில், நிலைமையில் வித்தியா சம் இல்லை. நாம் அறிதலில், அதில் நிலைத் திருத்தலில் வித்தியாசம் இருக்கிறது. ஆகை யால் இரண்டு நிலைகளும் சொரூப ஞானம் என்றே சொல்லப்படுகின்றன.

அப்படியானுல் விழிப்பு, சொப்பன நிலை களில் சொருப ஞானமே கிடையாதா என்கிற கேள்வி எழலாம். சொருப ஞானம் என்பது எல்லா அவஸ்தைகளிலும் எப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. சுஷுப்தி யில் மனம் இல்லாததால் மனத்தின் பரிணும மான விருத்திகள் இல்லை. ஞானம் என் பது ஆத்ம சொருபமானது. இந்த ஞானம் விருத்திகளில் புகுந்துகொண்டு அக்ஞானத் தைப் போக்குகிறது. விருத்திகள் தாங்களா கவே அக்ஞானத்தைப் போக்கடிக்க சக்தியற் றவை. ஆகையால் ஆத்மாவை ஒட்டிய அக் ஞானமும், ஆத்மாகாரமான மனேவிருத்தியில் பிரவேசித்த ஸ்வரூப ஞானத்தினுல் நாசமடை யுமே தவிர புத்தியின் விருத்தியினுல் நாசமடை யாது. கோடிக்கணக்கான கர்மாக்களைச் செய் தாலும் இந்த அக்ஞானம் அழியாது. எப்படி ஸத்கர்மாதான் பாபகர்மாவைப் போக்கடிக் குமோ அப்படியே விருத்தியில் பிரவேசித்த ஞானமே அக்ஞானத்தை அழிக்கும். மாணிக்கம் கல்தான் என்ருலும் பிரகாசிக்கும் தன்மை அதற்கு இருப்பதால் ரத்தின தீபம் என்று அதைச் சொல்கிருர்கள். அதேபோல விருத்தி என்பது மனத்தின் பரிணுமமாக இருந்தாலும் அதற்குள் சொருப ஞானம் இருப்பதால் விருத் திக்கும் ஞானம் என்றே பெயர் சொல்லப்படு கிறது. ஆகையால் பரசம்பந்தமான விருத்தி யைக் கர்மம் என்று சொல்வதில்லை. இதற்கு ஆத்ம போதத்தில் ஒரு நல்ல உதாரணம் சொல்லப்பட்டிருக்கிறது. அழுக்கு நீரைக் கெடுக்கக்கூடியதே. ஆனல் தேத்தான் கொட் டைப் பொடியைத் தண்ணிரில் சேர்த்தவுடன் மற்ற அழுக்குகளையும் அழித்து நீரைச் சுத்த மாக்கிவிட்டுத் தானும் மறைந்து விடுகிறது. தூங்கவேண்டும் என்று நாம் முயலுகின்ருேமே அந்தமுயற்சி தூக்கத்துக்கு உதவுகிறது. இதே போல ஞான சாதனங்களும் கர்மங்களே என்ருலும் அவைகள் ஒதுக்கத் தகுந்த கர்மங் களில் சேரா. அக்கர்மங்களுள் புகுந்துள்ள ஞானமே அக்ஞானத்தை அழிக்க வல்லது என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல் லப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் சமயக் கருத்துக்கள்

(வித்துவான். ஆதி. பாலசுந்தரன் M. A.)

சங்க இலக்கியங்களுள் ஒன்றுகலித்தொகை. இந்த நூலில் உள்ள கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் மதுரை ஆசிரியர் நல்லந்துவனர் என்பவராவார்.

கடவுள் வாழ்த்துப் பாடலில் சிவபிரானின் இயல்புகளை ஆசிரியர் விளக்கிக் கூறியுள்ளார்.

"ஆறுஅறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்துக்
கூறுமல் குறித்துஅதன் மேல்செல்லும் கடும்கூளி
மாறுப்போர் மணிமிடற்று எண்கையாய் கேள்இனி."

— வேதத்தின் பிரிவுகளாகிய ஆறு அங்கங்களையும் அறிகின்ற அந்தணர்க்கு வேதங்கள் பலவற்றையும் பகர்ந்தவன் சிவபெருமான். பகீரதனுடைய வேண்டுகோளுக்கு இணங்கப் பூமியில் பாய்ந்து வந்த வானதி(கங்கை)யின் வேகத்தைச் சடையின் ஒரு பகுதியில் அடக்கியவர் சிவபெருமான். விண்ணவர்களுக்கும், மண்ணவர்களுக்கும் இடையூறு செய்து வந்த அரக்கர்களின் மூன்று கோட்டைகளையும் சாம்பலாக்கியவர் சிவபெருமான். இப்படிப்பட்டவர் என வாக்கினல் கூறமுடியாத இயல்பினர்; மனத்தால் கருதப்படுகின்ற எப்பொருளுக்கும் அப்பாற்பட்டவர் சிவபெருமான். ஒரே குறிக்கோளுடன் புறமுதுகு காட்டாமல் போரிடுகின்ற பேயின் போர்த்தன்மை கொண்டவர். ஆலமுண்ட நீலகண்டன்; எட்டுக் கைகளை உடையவர் சிவபெருமான்.

உலகத்தில் வழங்கப்படுகின்ற சொல்லை நீக்கி வைதிகச் சொற்களை மட்டும் ஆராய்ச்சி செய்கின்ற நிருத்தம்; உலகியல் சொல் வைதிகச் சொல் இரண்டையும் தெளிவாக ஆராய்கின்ற வியாகரணம்; போதாயனீயம், பாரத்துவாசம், பரமார்த்தம், பரமாத்திரையம் முதலான கற்பங்கள்; நாராயணீயம், வராகம் முதலிய கணிதங்கள் எழுத்து ஆராய்ச்சியாகிய சிட்சை; செய்யுள் இலக்கணமாகிய சந்தம்—இவை ஆறும் வேதத்தின் ஆறு அங்கங்கள் ஆகும். "ஆறு அங்கம் நால் வேதம் ஆனய் போற்றி" என அப்பர் சுவாமிகள் போற்றுவதும் இங்கு நினைக்கத்தக்கது.

தைத்ரியம், பௌடியம், தலவகாரம், சாமவேதம் ஆகியவை நான்கு வேதங்கள். வேத வியாசர் வரையறை செய்த நான்கு வேதங்கள் எனவும் கூறுவார்கள்.

சிவபெருமான் சடாமுடியை விரித்துச் சினம் கொண்டு, எட்டுக் கைகளையும், எட்டுத் தோள்களையும் வீசிப் பேய் போல் ஆடுகின்ற நடனம் அழிக்கும் திருநடனம் ஆகும். சம்ஹார காலத்தில் எல்லாவற்றையும் அழிப்பதற்காகச் சிவபெருமான் இத்தகைய நடனம் ஆடுவார். "எண்டோள்வீசி நின்று ஆடும்" என்று சிவன் எம்மானை ஏனையோரும் புகழ்கின்றனர்.

"படுபறை பலஇயம்பப் பல்உருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி ஆடுங்கால் கோடுஉயர் அகல்குறிக்
கொடிபுரை நுசுப்பினுள் கொண்டசீர் தருவாளோ"

— சிவபெருமானே! உம் கையில் பறை முதலான பலவகை வாத்தியங்கள் ஒலிக்கின்றன. கண்ணுக்குப் புலனகின்ற எல்லாப் பொருள்களின் வடிவங்களையும் உம்மிடத்திலே ஒடுக்கிக் கொண்டுள்ளீர். இந்நிலையில் நீர் "கொடு கொட்டி" என்னும் நடனத்தை (கூத்தை) ஆடுகின்றீர்!

எல்லாவற்றையும் அழிப்பதற்காகப் பலவகை வாத்தியங்களையும் இசைத்துக் கொடுகொட்டி என்னும் கூத்தை நீர் ஆடுகின்றீர். ஆடி முடிக்கின்ற போது, இசைக் கருவிகளின் இயக்கமும் நின்றுவிடும். அக்காலத்தில், ஒடுக்கப்பட்ட உயிர்களைத் தம் மூலம் தோற்றுவிப்பதற்கு உமையம்மையாகிய சக்தி உதவுகிருள். சக்தியின் மூலம் சிவபெருமான் உயிர்த் தோற்றத்துக்கு வழி செய்கிருர்.

அம்மையாகிய சக்தி அருட்குணம் உடையவள். எனவே, இறைவனின் அழிக்கும் செயலில் அவள் கலந்துகொள்ள மாட்டாள். எனவே, இறைவனின் அழிக்கும் ஆட்டத்துக்கு அம்மை "சீர்" என்ற தாளத்தைத் தருவாளோ? தரமாட்டாள். சிவபிரான் திருநடனம்புரிந்து எல்லாவற்றையும் அழிக்கும்போது, அவர் கைகொட்டி ஆடும் கூத்து, "கொடு கொட்டி" என்று பெயர்.

"மண்டுஅமர் பலகடந்து மதுகையால் நீறுஅணிந்து
பண்டரங்கம் ஆடுங்கால் பணைஎழில் அணைமென்றோள்

வண்டுஅரற்றும் கூந்தலாள் வளர்தூக்குத்
தருவாளோ''

—மிகுந்த அளவில் போர் செய்து திரிபுரங்களை எரித்தவர் சிவபெருமான். முப்புர அசுரர்கள் வெந்து வீழ்ந்த சாம்பலைத் தமது திருமேனி எங்கும் சிவன் பூசுகின்ற சமயத்தில், "பாண்டரங்கம்" என்னும் கூத்தை ஆடுவார். அங்ஙனம் அழிக்கும் செயலில் ஆடுகின்ற ஆட்டத்திற்கு அருள் பண்புடைய அம்மை துணையாக மாட்டாள். எனவே, அதற்கேற்ற தூக்குஎன்னும் தாளத்தை அவள் தருவாளோ? தரமாட்டாள். சிவனுடைய அழிக்கும் ஆட்டத்திற்கு உமையம்மை உறுதுணையாக இருக்க மாட்டாள்.

சாம்பலைப் பூசி ஆடுகின்ற ஆட்டம் பாண்டரங்கக் கூத்து. பாண்டு அரங்கம்—வெள்ளை அரங்கம். வெள்ளை அரங்கம் என்பது சாம்பல் நிறைந்த சுடுகாடு. "காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளங் கவர் கள்வன்" என்கிறார் ஞானசம்பந்தர். சுடலைப் பொடி மேனியெல்லாம் பூசி ஆடுகின்றவர் சுடலைமுத்து; சுடலையாண்டி.

"கொலைஉழுவைத் தோலசைஇக் கொன்றைந்தார்
சுவல்புரளத்
தலையங்கை கொண்டுநீ காபாலம் ஆடுங்கால்
முலையணிந்த முறுவலாள் முன்பாணி தருவாளோ."

—கொலைத் தன்மை கொண்ட வேங்கை வரிப்புலியைக் கொன்று தோலை இடையிலே அணிந்துகொண்டு, கொன்றைமாலை தோளிலே அசைய, பிரம்ம கபாலத்தைக் கையிலே கொண்டு சிவபெருமான் காபாலம் என்னும் கூத்தை ஆடுகின்றான். அவ்வாறு ஆடும்போது, சக்தி அதற்கேற்ற தாளத்தைத் தருவாளோ! தரமாட்டாள்.

பிட்சாடன கோலத்தோடு வந்த சிவபிரான் மீது சினம் கொண்ட தாருகாவனத்து முனிவர்கள் இயற்றிய யாககுண்டத்திலிருந்து வேங்கைப்புலி வெளிவந்து சிவனைக் கொல்லப் பாய்ந்தது. அவர் அதனைக் கொன்று, அதன் தோலை ஆடையாகப் புனைந்துகொண்டார்.

விநாயகருக்கு வெள்ளை எருக்கு, அறுகம் புல் இரண்டும் உகந்தவை. முருகனுக்குக் கடம்ப மலர். திருமாலுக்குத் துளசி. சிவனுக்கு உகந்தது கொன்றை மலர்.

"பாணியும் தூக்கும் சீரும் என்று இவை
மாண்இழை அரிவை காப்ப
வாணம்இல் பொருள்எமக்கு அமர்ந்தனை ஆடி"

—சிவனே! எல்லாவற்றையும் நீ அழிக்கும் காலத்து, அவ் அழித்தல் தொழிலுக்கு உமையம்மை உறுதுணையாக இருப்பாளோ? இருக்க மாட்டாள் எனக் கூறினேம். இருப்பினும் சம்ஹார காலத்துச் சிவனே, நீயும் அம்மையும் அல்லால் ஏனையவை அழிந்து விடும். எனவே, நீ ஆடுங்கால் உன் ஆட்டத்திற்கு ஏற்ற தாளங்களைத் தருபவள் உமையம்மையைத் தவிர வேறு யார் இருக்கக் கூடும்? எனவே, அவளே தரக்கூடியவளாய் அமைகின்றாள். அவள் தாளங்களைத் தர, அவற்றிற்கு ஏற்ப நீ ஆடுகின்றாய்.

காத்தல் தொழிலை நிகழ்த்துகின்ற காலத்துச் சிறிதும் நேயம் இல்லாத சடப்பொருளாகிய எங்களுக்கும் அருள் பாலித்தாய்!

இக்கலித்தொகைப் பாடற் பகுதிகள் ஒவ்வொன்றிலும் சிவபெருமானைப் பற்றிய புராண நிகழ்ச்சிகள் சித்திரிக்கப்படுகின்றன. புராண நிகழ்ச்சிகளாக இருப்பினும் அவற்றுள் பொதிபொருளாக அமைந்திருக்கும் தத்துவப் பொருளையும் உணர்ந்து கொள்ளலாம்.

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமைஅமர்ந்து உயர்மலை இருந்தனன் ஆக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையில் கீழ்புகுத்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல"

—இமயமலையை வில்லாக வளைத்து முப்புரம் எரித்த சிவபெருமான், உமையம்மையுடன் திருக்கைலாயமலையில் வீற்றிருந்தான். அப்போது பத்துத்தலை இராவணன், தன் கைகளை மலைக்குக் கீழே கொடுத்து, மலையை அசைத்தான். அவனால் இயலவில்லை. கைகள் அகப்பட்டுக் கொண்டன. கைகளை வெளியே எடுக்க இயலாமல் வருந்தினான்.

திருக்கைலாய மலையை இராவணன் பெயர்த்து எடுக்க முயன்று வருந்திய புராணச் செய்தி இப்பகுதியில் சொல்லப்பட்டுள்ளது.

இப்பாடல் பகுதி குறிஞ்சிக் கலியில் ஒரு செய்யுளின் பகுதி. இதைப் பாடியவர் கபிலர் என்னும் புலவர்.

காட்டில் வேங்கை மரம் நன்றாகப் பூத்துள்

ளது. இது பார்ப்பதற்குப் புலிபோலத் தெரிந்தது. ஆண் யானை கோபம் கொண்டு மரத்தைக் குத்தியது. தந்தம் மரத்தில் தைத்து, எடுக்க முடியாமல் யானை அலறியது.

இந்த இயற்கைக்காட்சியை விளக்க வந்த கபிலருக்கு மேற்கூறிய புராண நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது.

யானை இராவணனுக்கு உவமானம். இராவணன் கைகள் திருக்கைலாயமலையில் அகப்பட்டுக்கொண்டதைப் போல, யானையின் தந்தங்கள் வேங்கை மரத்தில் சிக்கிக்கொண்டன. இராவணன் வருந்தியதைப் போல யானை வருந்தியது.

நல் அந்துவனர் என்னும் புலவர் நெய்தல் கலிப்பாடல்களைப் பாடியவர். அவர் நெய்தல் கலியில்,

"ஞாலம் மூன்று அடித்தாய முதல்வற்கு முதுமுறைப்
பால் அன்ன மேனியான் அணிபெறத் தைஇய
நீலநீர் உடைபோல"

—மூன்று உலகங்களையும் தம் பாதங்களாலே தாவி அளந்தவன் திருமால். அவனுக்கு மூத்த முறைமையினை உடையவன் பலராமன். அவன் அணிந்த ஆடை நீலநிற ஆடை. அவ்ஆடையைப் போன்று, வெள்ளையான கடற்கரை மணலைச் சூழ்ந்து, நீல நிறப் பெருங்கடல் விளங்குகிறது.

பலராமன் வெண்மை நிறம் அமைந்தவன். அவன் அணிந்திருக்கும் ஆடை நீலநிற ஆடை.

இங்கே கடற்கரை வெண்மையான மணற்பரப்பு பலராமனுக்கு உவமானம். நீலநிறக் கடல், பலராமன் புனைந்துள்ள நீலநிற ஆடைக்கு உவமை.

இயற்கைக் காட்சியைக் கடல் அழகைக்கண்டு வியந்த அப்புலவருக்குப் புராண மரபு நினைவுக்கு வருகிறது; கூறுகிறார்.

இயற்கையில் இறை உணர்வைக் கண்டு உணர்ந்து அனுபவித்தவர்கள் நம்முன்னோர்கள்.

"மாநிலம் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கை யாக
விசும்பு மெய்யாகத் திசை கையாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ணாக
இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதுஅற விளங்கிய திகிரி யோனே."

— இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய நற்றிணை என்னும் நூலில் அமைந்துள்ள கடவுள் வாழ்த்துப் பாடல் ஆகும்.

இந்தப் பெரிய உலகம் திருவடி. தூய்மையான சங்குகளைக்கொண்ட கடல் ஆடை. ஆகாயம் உடம்பு. எட்டுத் திசைகளும் கைகள். சூரியன், சந்திரன் இரண்டும் இரண்டு கண்கள். எல்லா உயிர்களிடத்திலும் பொருந்தி உள்ளான். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் முதலிய எல்லாப் பொருள்களையும் தன்னுடைய உடம்பில் உள்ள உறுப்புக்களாக அடக்கி இணைத்து வைத்துள்ளான். வேதத்தில் முதன்மையான தெய்வமாகக் கூறப்படுகிறான். சக்கராயுதத்தைத் தன் கைகளிலே ஏந்தியுள்ளான். அவன் தான் மாயோன் என்று சொல்லப்படும் திருமால்.

— இவ்வாறு திருமாலாகிய காக்கும் கடவுளைப் பற்றிப் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்னும் புலவர் பெருமகனார் கூறுகிறார்.

இறைவனுக்குத் தனிப்பட்ட வடிவம் இல்லை. உருவம் அற்ற பரம்பொருளே இறை வடிவம். பெரிய ஞானிகளால் அகத்து உணர்வாக விளங்கும் அருவ வடிவம் கொண்ட பரம்பொருளை, சாமான்ய மனிதர்களும் கண்ணால் கண்டு, உள்ளத்தில் பதித்து வழிபாடு செய்தல் வேண்டும் என்ற பெரு நோக்கோடு நம் முன்னோர்கள் பரம்பொருளுக்கு உருவ வடிவமும் கற்பித்தார்கள்.

நம்மைப் போலவே சரீரத்தில் அமைந்துள்ள உறுப்புக்களைக் கொண்டவன் இறைவன் என்று கூறினார்கள். எனவே பாதம், கைகள், கண் என்றெல்லாம் உறுப்புக்களைக் கற்பித்துக் கூறினார்கள்.

அதே சமயம், அளவிடமுடியாத அக்ண்ட பரிபூரணன் இறைவன் என்பதையும் அறிந்திருந்தார்கள். எனவே, நம்மைப் போலவேபாதங்களையும், கைகளையும் உடையவன் இறைவன்என்று சொன்னால் இறைவனுடைய எண் குணங்களுள் ஒன்றாகிய அளவில்லாத ஆற்றலுக்குக் குறைவு நேரிடும் எனவும் கருதினார்கள்.

எனவே, இந்தப் பூலோகத்தையே திருமாலின் பாதங்களாகச் சொன்னார் பெருந்தேவனார். அளவிட முடியாத மிகப்பெரிய சமுத்திரத்தை, அகண்ட வடிவம் உடைய இறைவ

னுக்கு உடுத்தக்கூடிய உடையாகச் சொன்னர். எல்லையில்லாத ஆகாயத்தை உடம்பாகக் கூறினர். எல்லாத் திசைகளையும் கைகளாகக் கூறினர். சூரிய சந்திரர்களைக் கண்களாகச் சொன்னர்.

இயற்கையே இறைவடிவம். இயற்கைப் பொருள்களையே இறைக்கு உறுப்பாகக் கூறி விட்டார் புலவர்.

உயிர்கள் அனைத்தும் இறைவனை நினைத்து, உடம்பால் செய்யப்படும் வணக்கம் அனைத்தும், திருமாலைச் சரணுகதி அடைவதற்கு உரிய முறையில் அமையும். திருமாலின் பாதார விந்தங்களைச் சரணுகதியாக அடைதல் காரண மாக, திருமாலின் பாதங்களை முதலாவதாகக் கூறினர் புலவர்.

இறைவன் நமது நினைப்பிற்கு அப்பாற்பட்ட வன்; நமது கண்ணுல் காணும் காட்சிக்கும் அப்பாற்பட்டவன். எனவே, மனம், காட்சி இரண்டுக்கும் அகப்படாத ஆகாயத்தைத் திரு மாலின் உடம்பாகக் கூறினர்.

ஆத்மாக்களின் நல்வினை தீவினை இரண்டும் அறிந்து உதவுவதற்கு ஏதுவாக உயிர்கள் அனைத்திலும் உறைந்து இறைவன் ஆகிய திருமால் விளங்குகிருன். இறைவன் உள்ளுறை யாக அனைத்து உயிர்களிலும் பரிணமித்து விளங்குகிருன் என்று, பரம்பொருளின் அந்தர் யாமித்துவம் கூறினர்.

ஊழிக் காலத்தில் எல்லாவற்றையும் அழிக் காமல் இறைவன் கருணை செய்கிருன் என்ப தற்கு அடையாளமாக, அனைத்து உயிர்களை யும் தன்னகத்தே அடக்கிக் கருணைசெய்கிருன் என்றும் சொன்னர்.

இறைவன் பரத்துவம் உடையவன். எனவே வேத முதல்வன் என்று திருமாலைச் சொன்னர். திருமாலின் கையில் உள்ள திகிரி (சக்கரம்) சுதர்ஸன் என்னும் பெயரை உடையது.

பூலோகம், தேவலோகம், பாதாள லோகம் ஆகிய மூன்று லோகங்களிலும் அரக்கர்கள் செய்யக்கூடிய தீமைகளையெல்லாம் அழித்து ஒழிக்கும் தூய செயலைச் செய்வது சுதர்ஸன் என்ற சக்கரம். எனவே, "தீது அற விளங் கிய திகிரி" என்று சக்கராயுதத்திற்குச் சிறப் புக் கொடுத்துச் சொன்னர்.

"இறைவனே, மாயையாகவும் உயிர்களாக வும் பரிணமிப்பான்" என்பது வைஷ்ணவர்கள் கூறுகின்ற பரிணுமவாதக் கொள்கையாகும்.

"திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதுமாய் அவைஅவை தொறும்
உடல்மிசை உயிர்எனக் கரந்துஎங்கும் பரந்துளன்"

—ஆகாயம், காற்று, தீ, நீர், பூமி இவற்றுள் படர்ந்து நிற்கும் பொருளாகத் திகழும் பரம் பொருளாக இறைவன் திருமால் விளங்குகிருன். உடலில் உயிர் எவ்வாறு இருக்கிறதோ அது போலத் திகழ்கிருன். வானில் ஓசையாகவும், காற்றின் ஊறு ஆகவும், நெருப்பில் ஒளியாகவும், நீரில் சுவையாகவும், மண்ணில் மணமாகவும் இறைவன் தம்மை விளக்கிக்கொண்டிருக்கிருன். பஞ்சபூதங்களாகிய ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் ஆகிய இவற்றின் சேர்க்கையே உலக மாகவும், உயிர்களாகவும் வடிவெடுத்திருக்கின் றன. எல்லா உயிர்களிடத்தும் பரந்து பெருகி நிற்கிருன் திருமால் என்று திருவாய் மொழி கூறுவதும் இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வடமொழியில் உள்ள சமயக் கருத்துக்களும், தத்துவக் கருத்துக்களும் தமிழ்நாட்டில் பரவத் துவங்கின. அதன் காரணமாகத் தமிழ்ப் புலவர்கள் சிலரின் உள்ளத்தை அக்கொள்கை கள் ஈர்த்தன. மனதைப் பறிகொடுத்த அப் புலவர்கள், சந்தர்ப்பம் வந்த சமயத்தில், அக் கருத்துக்களைத் தங்கள் பாடல்களில் இணைத் துச் சொல்லிப் பாடினர்கள்.

இவ்வாறு சங்க இலக்கியத்தில் சில இடங் களில் ஆங்காங்கே புராணக் கதைகளும், தத்துவத்துடன் தொடர்பு உடைய சில சமயக் கருத்துக்களும் பொன் இழையைப் போலப் பொலிந்து காணப்படுகின்றன. உயிர் இல்லா விடத்து உடலால் பிரயோஜனம் இல்லை. உயிர் தான் உலகுக்கு எல்லாச் சிறப்புக்களையும் தரு கின்றது. உயிர், உடலை விட்டுப் பிரிந்துவிட் டால் அதைப் பிணம் என்று ஒதுக்கித் தள்ளு கிறோம். உடலுக்கு உயிர் எவ்வளவு அவசி யமோ ஒரு நூலின் சிறப்பிற்குச்சமயக்கருத்துக் கள் அவ்வளவு அவசியமாகின்றன. சமயக் கருத்துக்கள் இல்லாத நூல் உயிரற்ற உட லுக்கு ஒப்பாகிறது. சங்க கால இலக்கியங் கள் சமயக் கருத்துக்களைக் கொண்டிருப்பதால் போற்றுதற்கு உரியவை ஆகின்றன.

தக்ஷன் செய்த யாகம்

(சுவாமி துருவானந்தர்)

உயர்ந்த கோட்பாடுகளை மக்களுக்கு எளிதில் புகட்டுவதற்காகப் பெரியோர்கள் புராணத்தை எழுதினர்கள். புராணம் என்ருல் பழங்கதை அல்லது பழங்காலச் செய்தி என்பது பொருள். புராணக்கதையை நிராகரித்து விடமுடியாது. அக்கதையின் வளர்ச்சிக்கு அடிப்படைக் கருத்து ஒன்று இருப்பதைக் காணலாம். ஆக உயர்ந்த லட்சியக் கருத்தை மையமாக வைத்தே புராணங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

பக்தியைப் புகட்டும் புராணங்களில் ஸ்ரீமத் பாகவத புராணமும் ஒன்று. அதில் தக்ஷன் என்பவனைப் பற்றிய வரலாறு சித்திரிக்கப் பட்டுஇருக்கிறது.

பிரஜாபதிகளின் தலைவனுகத் தோன்றியவன் தான் தக்ஷன். அவன் தன் மகளைச் சிவபெருமானுக்கு மணமுடித்துக் கொடுத்துச் சிவனுக்கு மாமன் ஆனுன். அவனிடத்தில் செருக்கு இருந்தது.

ஒருதடவை பிரம்மா படைத்த பிரஜாபதிகள் அனைவரும் சேர்ந்து ஒரு யாகம் நடத்தினர். அந்த வேள்வியில் பங்கு கொள்ளுவதற்காகத் தேவர்கள், முனிவர்கள், இன்னும் ஏனைய பெரியோர்களெல்லாம் வந்து சேர்ந்தார்கள். யாகசாலை முழுதும் கூட்டம் நிரம்பி இருந்தது. அவரவர் அந்தஸ்து, தகுதியை முன்னிட்டு ஆங்காங்கு வந்தவர்களுக்கு இடம் தரப்பட்டது. இப்படிப்பட்ட கோலாகலமான யாக சாலைக்குள் செருக்குடன் உள்ளே நுழைந்தான் யாகத்துக்கு அதிபதியாக இருந்து நடத்திய தக்ஷன். அவன் உருவைக் கண்டமாத்திரத்தில் கூடியிருந்த அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். தான் வந்ததும் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தியவுடனே அவனுக்கு ஏற்பட்ட தற்பெருமை தலைக்கேறியது. இதற்கிடையே அக்கூட்டத்திலே இரண்டு பேர்கள் மாத்திரம் தக்ஷனைக் கண்டு எழுந்து நிற்காது அமைதியாக அமர்ந்தபடி இருந்தனர். ஒருவர் தக்ஷனின் தந்தை பிரம்மா. மற்ருெருவர் அவனுடைய மருமகன். பெற்ற தந்தைக்கு மட்டும் வணக்கம் செலுத்தி விட்டு மருமகனைக் கோபத்தால் பார்த்தான் தக்ஷன். தக்ஷனுடைய பதினறு பெண்களில் கடைசியாகப் பிறந்த பெண்தான் ஸதி என்ற பெயர் தாங்கிய உமாதேவி. அவளைத்தான் மணம் புரிந்திருந்தார் சிவபெருமான். ஆக, தனக்கு மருமகனுக வந்து வாய்த்தவன் அகிலாண்ட நாயகன் சிவன் என்ற எண்ணமில்லாது ஒரு சாமானிய மானுடன்தான் அவன் என்ற மமதையில் ஊறியிருந்தான் தக்ஷன். சினம் உள்ளத்தில் குடிகொண்டவுடன் வார்த்தைகளும் காரசாரமாக வெளியேறின. சிவனுரைக் குறித்து எவ்வளவு தரக்குறைவாகப் பேச முடியுமோ அவ்வளவு மட்டமாகப் பேசினுன். "இங்குக்கூடியுள்ள தேவர்களே, பிராம்மணர்களே கேளுங்கள். எனக்கு மருமகனுக வந்து வாய்த்த இவன், லோக பாலர்களுடைய பெருமையைக் குறைத்துவிட்டான். என் மகள் ஸதியை இவனுக்குக் கொடுத்து மருமகனுகக் கருதினேன். மான்விழி படைத்த என் மகளை மனைவியாகக்கொண்ட இப்பித்தன் என்னைக் கண்டதும் எழுந்து வணங்காது கர்வம்பிடித்தவனுக ஆசனத்தில் அமர்ந்திருக்கிருன், வார்த்தையால் கூட மரியாதை தெரிவிக்கவில்லை. பேய், பிசாசு, பூதம் வாழும் சுடுகாட்டில் வாழுகின்ருனும். சுடுகாட்டுச் சாம்பலைப் பூசி மண்டை ஓடுகளை மாலையாகக் கோத்து அணிந்துள்ள இந்தப் பித்தனுக்கு நான் பிரம்மன் பேச்சைக் கேட்டு என் மகளைக் கொடுத்தேன். இப்போது என் தவறை உணருகிறேன். என்னைக் கண்டு எழுந்து நிற்காத இந்த சுடுகாடனுக்கு யாகத்தில் பாகம் இனிமேல் கிடையாது" என்று வாய்க்கு வந்தபடி திட்டிவிட்டுத் தன் வீடு போய்ச் சேர்ந்தான்.

சினத்திற்குக் காரணம் அகங்காரம். நாம் நம்மை உடல் சொரூபமாகக் கண்டு வருகிருேம். நாம் உடலல்ல. இது அழியும் தன்மையுடையது. நாம் ஆத்ம சொரூபம். ஆத்மா அழியாதது. நம்மை உடலாக நினைக்கிறபோது மற்றவர்களைவிட நாம் வேறுபட்டவர் என்று எண்ணுகிருேம். மற்றவர்களைவிட நாம் உயர்ந்தவர் என்று எண்ணுகிறபொழுது அகங்காரம்

தலையெடுக்கிறது. பிறரைவிட நாம் தாழ்ந் தவர் என்று எண்ணுகிறபொழுது தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு நம்மைச் சிறுமைப் படுத்திக்கொள்கிறோம். ஆக நம்மைப் பிறரிட மிருந்து எது பிரித்து வைக்கிறதோ அது அகங்காரம். அகங்காரம் இருக்கும் வரையில் ஏனைய இழிகுணங்கள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டுதான் இருக்கும். அகங்காரத்தை ஒரு சேனைத்தலைவனோடு ஒப்பிடலாம். சேனைத் தலைவனை வீழ்த்தி விட்டால் மற்ற படைகள் எல்லாம் தாமாகத் தப்பித்து ஓடிவிடும். அதற்கு நிகராக அகங்காரத்தை வீழ்த்தி விட்டால் ஏனையகெட்ட குணங்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். அகங்காரம் குடிகொண்ட மனத்தில் உண்மையான காட்சி புலப்படாது. இறைவனாக அனைத்தையும் பார்த்துப் பழகுதலே அகங்காரம் போக எளிய வழியாகும்.

அகங்காரத்தால் சிவனைக் குறித்துப் பேசிய சுடுசொற்களைச் சிவனார் அமைதியாக ஏற்றுக் கொண்டார். அனைத்தையும் சமமாகப் பார்க் கும் அவருக்கு விருப்பு வெறுப்பு ஏது? ஆனால் எல்லாரும் அப்படி இருப்பார்களா? நந்திகேசுவரர் கண்டார். வெகுண்டார். தக்ஷன் மூடத்தனமாக யாக சாலையில் சிவனா ரைக் குறித்துப்பேசிய பேச்சு நந்திகேசுவரரின் ஆத்திரத்தைக்கிளப்பியது. இந்தத் துஷ்டன் என்ன கதி அடையப்போகிறானோ தெரியாது. கேடுவரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே என்ற கோட்பாடு இந்த அறிவிலி விஷயத்தில் மெய்யாகி விட்டது என்பதை அறிந்த நந்திகேசுவரர் "சிவபெருமானை ஒரு சாமானியமானவனாகக் கருதிய இந்த அறிவிலி எண்ணற்ற பிறவிகள் எடுத்துச் சிற்றின்பச் சேற்றிலேகிடந்து உழல்வான். தன்னையேஉண ராது விலங்கு போன்று கிடந்துழலும் இப் பாவி தன் தலையை இழந்து ஆட்டின் தலையைப் பெறுவான்" என்று தக்ஷனைச் சபித்தார்.

சிவநிந்தனை பண்ணிய சிவதுரோகியைச் சுற்றிக்கூடியிருந்த தேவர்களைக் கண்டித்து, "எந்தச் சிவதுரோகியிடத்திலே இணங்கி அவன் தரும் பிச்சை உணவுக்காகக் காத்திருந் தீர்களோ மறையின் உட்பொருளை உணராத நீங்கள் வெறும் கர்ம காண்டத்தில் உழல்வீர் கள். உங்கள் குல தர்மத்தை மறந்து வயிற் றுப்பிழைப்புக்காக வேண்டி கற்றவித்தையை விற்று உலக ஆசையில் கிடந்து உழல்வீர் களாக" என்று சபித்தார்.

தேவர்கள் மீது சாபம் இட்டதைக் கேட்ட பிருகு மகரிஷி சிவகணங்களைச் சபித்தார். ஏதோ ஒரு வழியாகக் குழப்பம் ஓய்ந்து சிவகணங்களு டன் சிவனார் கைலாசம் போய்ச் சேர்ந்தார்.

தன் மீதும், அப்பாவி தேவர்கள் மீதும் நந்திகேசுவரர் இட்ட சாபம் தக்ஷன் உள் ளத்தை உறுத்திற்று. நாளுக்கு நாள் சினம் பொங்கி சிவனார் மீது அது பகையாக வடி வெடுத்தது.

பிரஜாபதிகளுக்குத் தலைவனாகத் தக்ஷனைப் பிரம்மா நியமித்தார். அதன் விளைவாக அவன் செருக்கடைந்தான். 'வாஜபேயம்' என்ற வேள்வியை நடாத்தி இறுமாப்புற்றான். அதற்கு மேல் பிரகஸ்பதி-ஸவம் என்ற மிகக்கடினமான மற்றொரு வேள்வியை ஆரம்பித்தான். வழக்கம் போன்று தேவர்கள், முனிவர்கள், பித்ருக்கள் முதலியோர் தங்கள் மனைவிமார்களுடன் நல்லாடை உடுத்தி அந்த யாகத்தைக் காண வானவீதியில் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டு சென்றனர். இவற்றைக் கண்ட ஸதிதேவி தானும் தன் தந்தை நடத்துகிற யாகத்தைக் காண விழைந்தாள். ஆசை இருந்தாலும் சிவ னார் அனுமதியின்றி எப்படிப்போவது? பெரு மானை வேண்டினாள். "நாதா! தங்களுடைய மாமன் யாகம் நடத்துகிறார். எல்லாரும் அதற் குப் போகிறார்கள். நானும் போய்வர விரும்பு கிறேன். என் தாயையும், சகோதரிகளையும் காண ஆவலாக இருக்கிறது. மனையாளின் மகிழ்ச்சிக்குத் தடை விதிக்காது தாய் வீடு சென்றுவர அனுமதிகொடுங்கள்" என்று வின யத்தோடு விண்ணப்பித்தாள்.

சிவனார் நகைத்தார். "ஸதி! இதோ பார். 'மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்' என்று பெரியவர்கள் சொல்லியுள்ளனர். உன் தந்தை என் மீதுள்ள வெறுப்பால் உன்னை மதிக்கமாட்டான். அழைப்பு இல்லாது எங் கும் போகக் கூடாது. என்னை அவமதித்த அந்தச் சிறு மதி படைத்தவன் முகத்தில் நீ விழிக்கவேண்டாம். ஆனால் நான் சொல்வதை மீறிச் சென்றால் அங்கு உனக்குத் தீங்குதான்

விளையும்" என எச்சரித்தார் சிவனுர். எதிர் காலத்தில் என்ன நடக்கும் என்பதை உணர்ந்த பெருமான் தாம் சொல்ல வேண்டுவதைச் சொல்லி விட்டுப் பேசாதிருந்தார். ஸதியின் பற்று ஆசையாகப் பரிணமித்தது. அந்த ஆசைக்குத் தடை விதித்த சிவனுரின் காலைப் பிடித்து அழுதாள், கெஞ்சினுள். தடைப்பட்ட ஆசை சினமாயிற்று. எம்பெருமாட்டி தான் யார் என்பதையும் மறந்து சாதாரண மானுடப் பெண்போன்று உணர்ச்சி வசப்பட்டாள். சிவனுரை விட்டுத் தந்தையின் வீட்டுக்குப் புறப் பட்டாள்.

எல்லார்க்கும் நல்ல அறிவு தருகிற அம் பாளே இப்படி மனம் போனபடி நடக்க லாமா என்று சிலர் கேட்கலாம். ஆகாயத்தி லிருந்து வீழ்கிற மழைநீர் தன்னளவில் சுத்தமாயிருந்தாலும் அது பூமியில் எந்த மண் ணேடு தொடர்பு வைக்கிறதோ அந்த மண் ணின் நிறத்தையும், சுவையையும் பெறுவது போன்று பரம்பொருளே கீழிறங்கி வேறு வடி வம் எடுத்துவிட்டால் இங்ஙனம் நடந்து கொள்வது உண்டு. அனைத்தையும் துறந்து, கணவனைத் தவிர வேறு எதையும் எண்ணுத சீதா தேவியே ஒரு மானின் மீது மையல் கொண்டாள் என்ருல் மாயையின் வல்லமையை என்னவென்று சொல்லுவது!

நந்தியின் தலைமையில் சிவனுருடைய பரி வாரங்கள் ஸதிதேவியோடு பின்சென்றன. யாக சாலையை அணுக அணுக ஆனந்தமும், உற் சாகமும் அதிகரித்தன. ஆனல் உள்ளே நுழைந் ததும் அந்த உற்சாகமனைத்தும் உருத் தெரியா மல் மறைந்து போயின. ஆங்கிருந்தவர் அனை வரும் பார்த்தும் பாராதவர் போல இருந்துவிட் டனர். தக்ஷன் தன் மகளை ஏறெடுத்தும் பார்க்க வில்லை. தாயும், சகோதரிகள் மட்டும் தந்தைக் குத் தெரியாது அடங்கிய குரலில் கட்டி ஆரத் தழுவிக்கொண்டார்கள். தன் கணவனுக்கு யாகத்தில் சேரவேண்டிய பாகத்தை வகுத்து வைக்காததைக் குறித்து ஸதி வெகுண்டாள். கணவன் பேச்சைக் கேளாது வந்ததைக்குறித்து மனம் நொந்தாள். இனி எந்த முகத்தோடு கணவனிடம் செல்லுவதுஎனஏங்கினுள்.தன்னை யும் தன் துணைவரையும் கேவலமாகப் பேசிய தந்தையை நிந்தித்தாள். தந்தை கொடுத்த தன் சரீரத்தையே தகனம் பண்ணிவிட எண்ணி ஞள். மஞ்சள் உடை உடுத்திக் கண்களை மூடி யோக முறையில் தன் உயிரை உடலினின்று பிரிக்க எண்ணினுள். நெருப்பையும், காற்றை யும் வரவழைத்துத் தன் நாயகராகிய சிவசொரு பத்தில் ஆழ்ந்தாள். திடீரென்று அவளைச் சுற்றி நெருப்புப் பற்றிக்கொண்டது. எல்லாரும் திகைத்தனர்.

சிவகணங்கள் சீறி எழுந்தன. தக்ஷனைக் கொல்லுவதற்கு அனைவரும் ஓடினர். ஆனல் தக்ஷனின் அடியாளாக இருந்த பிருகு மகரிஷி சிவகணங்களை எதிர்த்து ஒரு மந்திரத்தை ஓதி நெருப்பில் ஆஹுதி செய்தார். நெருப்பி னின்று பல்லாயிரம் பேர் வந்து சிவகணங் களைத் துரத்தினர். மனம் நொந்த நந்தி யும், சிவகணங்களும் சிவனுரிடத்தில் நடந் ததைத் தெரிவித்தனர். இதுவரை எவ்வளவோ சாந்த மூர்த்தியாயிருந்த சிவனுர், இவ்விஷயத் தைக் கேட்டவுடன் ருத்ரமூர்த்தி ஆனுர். அவருடைய முகம் கோபத்தால் பிரளயகால அக்னி போல ஜொலித்தது. கோபாவேசத் தோடு தம் ஜடையிலிருந்து ஒன்றைப் பிடுங்கி ஓங்கித் தரையில் அடித்தார். வீரபத்திரன் உக் கிரமாகத் தோன்றினுர். அவருடைய தோற் றமே அச்சத்தை உண்டுபண்ணுவதாக இருந் தது. தக்ஷனையும், அவன் யாகத்தையும் அழிக்க வேண்டும் என்ற ஆணை அண்ணலிட மிருந்து பிறந்தது. வீரபத்திரரோடு புறப்பட்டுப் பார்க்கப் பயத்தை ஊட்டுகிற படையொன்று யாகசாலையை நாசப்படுத்தியது. தக்ஷனுடைய தலையை அறுத்து அதற்குப் பதில் ஆட்டின் தலையை வைத்தார் வீரபத்திரசுவாமி. பிருகு மகரிஷியைக் கட்டிப்போட்டு அவமானப் படுத்தினுர். அந்தணர்கள் அலறிக்கொண்டு ஓடினர். மாதர் கூக்குரலிட்டனர். தேவர்கள் பல்லிழந்து, அங்கமிழந்து, குற்றுயிருடன் பதறி ஓடிப் பிரம்மாவிடம் நடந்ததைக் கூறினர்.

நடந்ததைக் கேட்ட பிரம்மன் "எங்குச் சங்கர னுக்கும், நாராயணனுக்கும் இடம் இல்லையோ அங்கு அமங்களம்தான் குடியிருக்கும்." சங்கர னைத் தூஷித்த தக்ஷனுக்கு ஆட்டுத்தலைபொருத் தப்பட்டது. அந்தச் சாபத்தால் அவன் புத்தி தெளிவடைந்து மன்னிப்புக் கேட்டான். மற்ற தேவர்களும் மன்னிப்புக் கேட்டுச் சாபவிமோ

சனம் அடைந்தனர். எந்த நாட்டில் தெய்வ நம்பிக்கையும், நல்லொழுக்கமும் குறைந்து அதர்மம் அதிகரிக்கிறதோ அந்த நாட்டில் தக்ஷன் ஆட்சி நடக்கிறது எனலாம். சுயநல மும், தெய்வ நிந்தனையும், ஒருவரையொருவர் ஏமாற்ற எண்ணுவதும், மோசடி செய்வ தும் நாட்டில் பெருகி வருகிறபொழுது தக்ஷ னின் ஆட்சி கொடிகட்டிப் பறக்க ஆரம் பித்து விட்டது எனலாம். இந்தக் கீழான பண்புகளைச் சட்டம் போட்டுத் தடுக்க முடி யாது. அக்கிரமமே வடிவெடுத்த தக்ஷனுக்கு நல்லுரை புகட்டியிருந்தால் ஏற்றுக்கொண்டு இருக்க மாட்டான். அவன் தலையை வெட்டி ஆட்டின் தலையை வைத்த பிறகே அவனுக்கு நல்லறிவு வந்தது. நலனைக் கெடுத்துக்கேட்டை நாட்டில் பரப்பி வருகிறவர்கள் தக்ஷனின் வாரிசுகள் ஆவார்கள். இவர்களைத் துடைத்து எடுப்பதற்கு வீரபத்திரர்போன்று இயற்கையே அவ்வப்போது மழையாக, வெள்ளமாக, புய லாக வந்து சீறுகிறது, அழிக்கிறது. இந்த இயற்கை நிகழ்ச்சிகளைக் கண்ட பிறகாவது இறைவன் ஒருவன் உண்டு என்று நம்பி தர்ம வழியில் செல்லுகிறவர்கள் இறைவன் அருளுக் குப் பாத்திரமாவது உறுதி. அதை விடுத்துக் கேட்டுக்கு ஆதரவு கொடுத்துத் தாங்களும் நெறியான வழியில் செல்லாதவர்கள் தக்ஷனின் யாகத்தில் தேவர்களும், அந்தணர்களும் எத் தகைய பரிதாப நிலையை அடைந்தார்களோ அந்த நிலையைத்தான் அடைவார்கள்.

எந்தக் காரியம் எடுத்தாலும் அது ஈசுவர சங்கல்பத்திற்கு இயைந்து போனால் அது மங்க ளமாக முடியும், அதை விடுத்து ஈசனைப் புறக் கணித்து உலகப் பற்றோடு எந்தக் காரியம் செய் தாலும் அது அமங்களமாகவே முடியும் என் பதற்குத் தக்ஷன் செய்த வேள்வி ஒரு சான்றாகும்.

செய்திகள்

நிகழ்பவை

முக்கிய அறிவிப்பு: அட்டை இரண்டாம் பக்கத் தில் 6—1—80 ஞாயிற்றுக்கிழமையன்று இராம நாதபுரம் ஜில்லா, ராஜபாளையத்தில் அந்தர் யோகம் நடக்கும் என்று பிரசுரிக்கப்பட்டுள் ளது. ஆனால் அன்று அவ்வூரில் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு அவ்வூர் அன்பர் கள் அந்தர்யோகத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க அன்று அங்கு அந்தர்யோகம் நடைபெறாது. மாற்றி அமைக்கப்பட்டுள்ள ராஜபாளைய அந்தர் யோகத் தேதி பின்னர் தர்ம சக்கரத்தில் பிரசுரிக்கப்படும். தர்ம சக்கரம் அட்டைஇரண் டாம் பக்கத்தில் பிரசுரித்துள்ளபடி 6—1—80 அன்றுதிருவேடகத்தில் அந்தர்யோகம் நிகழும்.

16–12–79 ஞாயிற்றுக்கிழமையன்று கோவை ஜில்லா குமரன் குன்று, ஸ்ரீ கல்யாண சுப்பிர மணியசுவாமி ஆலயத்தில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகளும், திருநெல்வேலி ஜில்லா செட்டி மேடு டோனாவூரில் ஸ்ரீமத் திவ்யானந்த சுவாமி களும்ஒருநாள்அந்தர்யோகம்நடாத்துவார்கள்.

டிசம்பர் மாதம் 25ஆம் தேதி செவ்வாய்க் கிழமையன்று பழைய மாணவர்கள் சங்கம் தபோவனத்தில் கூடும். அன்று கிறிஸ்து ஜயந் தியை முன்னிட்டு இரவு 6-30 மணியிலிருந்து 7-30 மணி வரையிலும் மாணவர்கள் ஐக்கிய வணக்கம் செய்வார்கள்.

டிசம்பர் மாதம் 28ஆம் தேதி வெள்ளிக் கிழமை வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டுக் குருகுல மாணவர்கள் உபவாசமிருந்து இருபத்து நான்கு மணி நேரம் அகண்ட நாம பஜனையும், கீதை பாராயணமும் செய்வார்கள்.

1980ஆம் வருடம் ஜனவரி மாதம் 9ஆம் தேதி புதன்கிழமை யன்று ஸ்ரீ விவேகானந்த ஜயந் தியை முன்னிட்டுக் குருகுல மாணவர்கள் இருபத்து நான்கு மணி நேரம் அகண்ட நாம பஜனையும், நண்பகல் ஒரு மணி நேரம் ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

ஜனவரி மாதம் 10ஆம் தேதி வியாழக் கிழமை யன்று பிற்பகல் நான்கு மணிக்கு மேல் ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல மாண வர்கள் பொங்கல் விடுமுறைக்காக அவரவர் ஊருக்குப் புறப்படுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

திருவாசகம்-பிரசார விலை	ரூ. 14-00
ஸ்ரீமத் பகவத்கீதை-பிரசார விலை	... 12-00
கர்மயோகவிளக்கம்	... 10-00
ஞானயோக விளக்கம்	... 8-00
ராஜயோக விளக்கம்	... 8-00
பக்தியோக விளக்கம்	... 6-00
பரமஹம்ஸரின் பெருமை	... 6-00
விவேகானந்த விவரணம்	... 4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	... 4-00
விவேகானந்த உபநிஷதம்	... 4-00
கடவுளின் வடிவங்கள்	... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	... 3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II	... 3-50
தினசரி தியானம்-பிரசார விலை	... 3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ ஏழாம் பதிப்பு-பிரசார விலை	... 3-00
அனுஷ்டான வேதாந்தம்	... 3-00
எதிர்கால இந்தியா	... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம்	... 3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	... 3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	... 2-00
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்	... 2-00
கண்ணன் என்னும் கடவுள்	... 2-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை	... 3-50
பரிபூரணானந்தம் ஷை	... 3-00
சின்மயானந்த குரு ஷை	... 3-00
ஆனந்தமானபரம் ஷை	... 3-00
சுகவாரி ஷை	... 3-00
மௌனகுரு வணக்கம் ஷை	... 3-00
எங்கும் நிறைகின்றபொருள் ஷை	... 2-50
பரசிவ வணக்கம் ஷை	... 1-00
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	... 1-50
விபீஷணன் சரணாகதி	... 1-50
சந்நியாசி	... 1-25
குழந்தைகளின் களிக்கூடம்	... 1-00
இராவண தத்துவம்	... 1-00
சகோதரி நிவேதிதை	... 1-00
காயத்ரீ	... 1-00
வாலி மோட்சம் (நாடகம்)	... 1-00
தவப்புதல்வர்கள் (நாடகம்)	... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	... 1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	... 1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	1-00
பிரஹ்லாதன் (நாடகம்)	... 1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	... 1-00

இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	ரூ. 1-00
பாண்டவ கௌரவ பெருமை(நாடகம்)	... 0-80
நன்மக்களைப் பெறுதல்	... 0-80
நோய்க்கு இடம் கொடேல்	... 0-80
*ஆத்ம சக்தி	... 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	... 0-75
*மனிதனது நிஜசொரூபம்	... 0-70
*சக்தி தத்துவம்	... 0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	... 0-60
*ஆலய வழிபாடு	... 0-60
*சூரிய நாராயணன்	... 0-50
*முருகக்கடவுள்	... 0-50
*விஷ்ணு தத்துவம்	... 0-50
தெய்வீக மகிமைகள்	... 0-50
சைவன் யார்?	... 0-50
கர்மகாண்டம் எது?ஞானகாண்டம் எது?	0-50
தபோபலன் (நாடகம்)	... 0-40
*கணபதி	... 0-40
வர்ணாச்ரம தர்மம்	... 0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	... 0-30
The Bhagavad Gita (10th Imp.)	...20-00
The Indian National Education	... 8-00
Sri Lalitambika Sahasranama Stotram	...10-00
Ramakrishna Lives Vedanta	... 8-00
Facets of Brahman or The Hindu Gods	... 5-00
Daily Divine Digest (DELUXE)	... 4-50
Daily Divine Digest (Ordinary)	... 2-50
Mahabharata (with plastic cover)	... 4-00
Ramayana (do)	... 4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover)	... 4-00
Sri Vishnu Sahasranama Stotram	... 4-00
Siva Sahasranama Stotram	... 3-50
The Bhagavad Gita (Small Size)	... 3-00
Hinduism Hosts Christianity	... 3-00
Holy Bible—In the Light of Vedanta	... 1-50
*Introducing the Gita	... 1-50
*The Garland of Paraaparam	... 1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	... 1-00
*Key to Higher Life	... 0-75
*The Teacher	... 0-60
*The Student	... 0-45

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ரூ. 3-00ம் மஞ்ஜரீக்கு ரூ. 2-40ம் தினசரி தியானத்திற்கு ரூ. 2-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

மாதேசுவரன் மலையில் அந்தர்யோகம்-3

ஜனவரி மாதம் 19, 20 சனி, ஞாயிறு

1980ஆம் வருஷம் ஜனவரி மாதம் 19, 20 சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி கர்நாடக மாநிலம் மாதேசுவரன் மலையில்

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்களால்
அந்தர்யோகம் நடாத்தப்பெறும்.

சேலம் ஜில்லா மேட்டூர் தாலுகாவிற்கு அருகில் கொளத்தூர் என்னும் இடத்திலிருந்து பாலாறு செல்வதற்கு வேனே, லாரியோ கிடைக்கும். பாலாற்றிலிருந்து மாதேஸ்வரன் மலை போவதற்கு காலை 7-30 மணிக்கும் மாலை 2-30 மணிக்கும் பாலாற்றிலிருந்து பஸ் புறப்படுகிறது. அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் ஜனவரி மாதம் 18ஆம் தேதி மாலை 6-00 மணிக்குள் மாதேசுவரன் மலைக்கு வந்துசேர வேண்டும். தாய்மார்களும் இதில் கலந்து கொள்ளலாம். ஆனால் கைக் குழந்தையுடன் வரும் தாய்மார்களும், பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர், சிறுமிகளும் இதில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். கொளத்தூர் வருவதற்குச் சேலம் ஜில்லா மேட்டூரிலிருந்து பஸ் வசதியுண்டு. தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான படுக்கை முதலியவைகளைத் தாங்களே கொண்டுவரவேண்டும். இதில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் நபர் ஒன்றுக்கு ரூபாய் இருபது, பிரம்மச்சாரி கிருஷ்ணன், ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுலம், சின்னதண்டா P. O. (Via) கொளத்தூர், மேட்டூர் தாலுகா, சேலம் ஜில்லா என்ற விலாசதாரிடமோ, N. அன்னையன், சன்மார்க்க சங்கம், மேச்சேரி P. O., சேலம் ஜில்லா என்ற விலாசதாரிடமோ M. O. மூலமோ, நேரிலோ தொகையைச் செலுத்திப் பதிவு செய்து அனுமதி கார்டு பெற்றுக்கொள்ள வேண்டும். கலந்துகொள்ளாத அன்பர்களுக்குத் தொகை வாபஸ் செய்ய இயலாது. பதிவுசெய்யப்பெற்றவருக்குப் பதிலாக வேறொருவர் எடுத்துக்கொள்ளப்படமாட்டார். ஜனவரி மாதம் 18ஆம் தேதி இரவு உணவு மாதேசுவரன் மலையில் அந்தர்யோகம் நடைபெறும் இடத்திலேயே அந்தர்யோக அன்பர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பஸ்வசதி விவரம் வேண்டுபவர்கள் பிரம்மச்சாரி கிருஷ்ணன் அவர்களுக்குச் சின்னதண்டா விலாசத்துக்கு எழுதிக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

வாழ்க்கை முறை

காலை

	மணி முதல்	மணி வரை
துயில் எழுந்திருத்தல்	4-30	
நாமஜபம்	5-00	5-30
ஆசனம், நீராடல்	5-30	7-00
தியானம்	7-00	7-45
சிற்றுண்டி	7-45	8-45
உபந்யாசம்	8-45	9-45
மௌனம்	9-45	10-30
பஜனை	10-30	11-15
ஆலய வழிபாடு, அர்ச்சனை, ஆரதி	11-15	12-15

மாலை

	மணி முதல்	மணி வரை
உணவு, ஓய்வு	1-00	3-15
உபந்யாசம்	3-15	4-15
வாசிப்பு	4-15	4-45
பானம், உலாவல், நீராடல் முதலியன	4-45	6-15
அர்ச்சனை	6-15	7-15
தியானம்	7-15	7-45
உணவு	7-45	8-45
ஸத்ஸம்பாஷணை	8-45	9-30
நித்திரை	9-30	

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.